# குடியியற் கல்வி

ஆசிரியர் வழிகாட்டி
(2017 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

# தரம் 8



சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk

# குடியியற் கல்வி

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 8

(2017 ஆம் ஆண்டிலிருந்து அமுல்படுத்துவதற்கானது)

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை

இணையத்தளம்: **www.nie.lk** மின்னஞ்சல் : **info@nie.lk**

**குடியியற் கல்வி**
தரம் - 8
ஆசிரியர் வழிகாட்டி

முதற் பதிப்பு: 2017

© தேசிய கல்வி நிறுவகம்
ISBN

சமூக விஞ்ஞானத்துறை
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
இலங்கை
இணையத்தளம் : www.nie.lk
மின்னஞ்சல்: info@nie.lk

*பதிப்பு :*

*பதிப்பகம்*
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம
இலங்கை

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்டப் பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள், புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கலாநிதி. திருமதி. ஜயந்தி குணசேகர**
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையில் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் இணைத்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருமுறை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையைத் தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாக பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்கும் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்கும் கற்றல் கற்பித்தல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பாக மதிப்பீடு நடத்தும், தேசிய மட்டப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்படும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பீடாதிபதி கலாநிதி வண. மாம்புள்கொட சுமனரதன தேரர்**
**பிரதிப் பணிப்பாளர் நாயகம்**
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## கலைத்திட்டக்குழு

| | |
|---|---|
| **வழிகாட்டலும் அனுமதியும்** | கல்விசார் அலுவல்கள் சபை, தேசிய கல்வி நிறுவகம் |
| **பாட ஒருங்கிணைப்பு** | |
| திரு. ஏ.எல்.எஸ். அபேவிக்ரம | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை தேசிய கல்வி நிறுவகம் |
| **எழுத்தாளர் குழு (வெளிவாரி)** | |
| கலாநிதி. ஷாமிந்த வனசிங்ஹ | விரிவுரையாளர், கல்விப்பீடம், இலங்கை திறந்த பல்கலைக்கழம் |
| திரு. சீ.எஸ். ஜயசிங்ஹ | ஓய்வு பெற்ற ஆசிரியர் நிலைய முகாமையாளர், ஹொரண |
| திருமதி. சோமவதி | ஓய்வுபெற்ற ஆசிரியர் ஆலோசகர், புளத்சிங்ஹள |
| திருமதி. என.டீ.சீ. ஜயாங்கனி | பிரதி அதிபர், மகரகம ம.ம.வி., மகரகம |
| திரு. எம்.கே. கிங்ன்லி பிரியந்த | விரிவுரையாளர், உருகுணை தேசிய கல்வியியற் கல்லூரி, காலி |
| திரு. எம்.எச்.எம். யாக்கூத் | முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி. |
| திரு. சுசில் சிரிசேன | விரிவுரையாளர், ஹாபிடிகம் தேசிய கல்வியியற் கல்லூரி, மீரிகம |
| திரு. கே.ஏ.என். புஷ்பகுமார | ஆசிரியர் சேவை, பொல்கொட ம.வி. மஹகம |
| **எழுத்தாளர் குழு (உள்வாரி)** | |
| திரு. ஏ.எல்.எஸ். அபேவிக்ரம | சிரேஷ்ட விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |
| திருமதி. எஸ்.யூ.ஐ.கே. த சில்வா | விரிவுரையாளர், சமூக விஞ்ஞானத்துறை |
| **தமிழாக்கம்** | எம்.எச்.எம். யாக்கூத் முன்னாள் பிரதம செயற்றிட்ட அதிகாரி, தே.க.நி |
| **மொழிச் செவ்விதாக்கம்** | |
| திரு. த. முதுகுமாரஸ்ஸாமி | 30B, நிமால் வீதி, கொழும்பு 04 |
| **அட்டைப்படம்** | |
| திரு. ரவீந்திர தேனுவர | விரிவுரையாளர், அழகியற் கல்வித்துறை தேசிய கல்வி நிறுவகம் |
| **கணினி வடிவமைப்பு** | |
| திருமதி. எம்.என்.எப். றிஹானா | தேசிய கல்வி நிறுவகம் |
| **ஏனைய உதவிகள்** | |
| செல்வி. ஏ.எல்.எஸ்.பீ. அத்தபத்து | சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி. |
| திரு. ஜீ.எஸ்.டி. ப்ரணாந்து | சமூக விஞ்ஞானத்துறை, தே.க.நி. |

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

8 ஆம் தரத்திற்கான இக்குடியியற்கல்வி ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்தும் போது ஒவ்வொரு தேர்ச்சிக்கும், தேர்ச்சி மட்டத்திற்கும் அமைவாக முன்வைக்கப்பட்டுள்ள கற்றல் பேறுகளை அடையும் வண்ணம் கற்றல் நிகழ வேண்டும். அதற்கான பாடத்தைத் திட்டமிடுகையில் உள்ளடக்க வேண்டிய பாடவிடயங்கள் தேவையான உதாரணங்களுடன் வழங்கப்பட்டுள்ளன. ஆசிரியர் கைந்நூலைப் பயன்படுத்துகையில் ஒவ்வொரு தலைப்பிற்கும் சமாந்திரமான வகையில் பாடநூலில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களையும் செயற்பாடுகளையும் கருத்திற் கொண்டு செயற்படுதல் அவசியமாகும். இங்கு உதாரணத்துக்காகத் தரப்பட்டுள்ள தரவுள்ளீடுகளுக்கு மாற்றீடாகத் தேவையானவற்றைப் பயன்படுத்தும் சுதந்திரம் ஆசிரியருக்கு உண்டு.

இப்பாடத்தின் மூலம் அடைய எதிர்பார்க்கும் குறிக்கோள்களை எட்டுவதற்காக, இங்கு தரப்பட்டுள்ள விடய உள்ளடக்கத்தை, அர்த்தபுஷ்டியானவாறு கற்க வசதி செய்து கொடுப்பது ஆசிரியரது வகிபாகத்தில் அடங்கும் முக்கியமான ஒரு பொறுப்பாகும்.

குறைந்த பட்சம் பாட விடயங்களின் 50 சதவீதத்தையேனும் செய்முறைச் செயற்பாடுகள் மூலம் முன்வைப்பதில் கவனஞ் செலுத்துமாறு ஆசிரியர்களிடம் தயவுடன் வேண்டுகிறோம். இந்த ஆசிரியர் வழிகாட்டி தொடர்பில் உங்களது ஆக்கபூர்வமான ஆலோசனைகளையும் கருத்துக்களையும் எமக்கு வழங்குமாறு தாழ்மையுடன் வேண்டுகிறோம்.

**செயற்றிட்டக் குழு**

# உள்ளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | | iii |
| பிரதிப்பணிப்பாளர் நாயகத்தின் செய்தி | | v |
| கலைத்திட்டக்குழு | | vi |
| ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் | | vii |
| பாடத்திட்ட உள்ளடக்கம் | | ix -xliv |
| கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள் | | |
| 8.1 | பொதுச் சேவைகள் | 03-13 |
| 8.2 | சனநாயக மக்கட் சமூகம் | 14-27 |
| 8.3 | பல்பண்பாட்டு மக்கட் சமூகம் | 28-34 |
| 8.4 | சமகாலப் பிரச்சினைகள் | 35-47 |
| 8.5 | பிரச்சினை தீர்த்தலும் தீர்மானமெடுத்தலும் | 48-54 |
| 8.6 | வேலையுலகு | 55-72 |

# குடியியற் கல்வி

# பாடத்திட்டம்

# தரம் 8

**(2017 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படுவதற்கானது)**

சமூக விஞ்ஞானத்துறை
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம
இலங்கை
**www.nie.lk**

# அறிமுகம்

குடியியற் கல்விப் பாடத்தைப் பாடசாலை முறைமையில் அறிமுகஞ் செய்வதன் பிரதான நோக்கம், இலங்கை நாட்டின் நிலைபேறாக சமாதானத்தின்பால் இட்டுச் செல்வதாகும். தமிழர், சிங்களவர், முஸ்லிம்கள், பறங்கியர், மலாயர் என வெவ்வேறு இனங்களையும் இந்த, பௌத்த, கத்தோலிக்க கிறித்தவ, இஸ்லாம் என்றவாறாக சமயப் பிரிவினர்களாக பிரித்து வேறாக்கி இருப்பதைவிட, சகல இனத்தவரும் சகல மதத்தவர்களும் எவ்வித பேதங்களுமின்றி இலங்கைத் தாயின் பிள்ளைகள் என்ற வகையில் ஒற்றுமையாகவும் சகவாழ்வுடனும் சமத்துவத்துடனும் அமைதியாகவும் வாழ்வதைக் காண்பதே சமாதானத்தை மதிக்கும் ஒவ்வொரவரினதும் எதிர்பார்ப்பாகும். நிலைபேறான சமாதானத்தை எட்டுவதற்காகத் தமது குடும்பம் தொடக்கம் அகிலமெங்கும் பரந்து விரிந்த குடும்பம் வரையில் எனும் கருப்பொருளின்கீழ் பிரதானமான 12 பாடக் குறிக்கோள்களையும் பிரதான பாடத் தேர்ச்சிகள் 20 ஐயும் உள்ளடக்கியதாக 6 - 11 ஆந்தர குடியியற் கல்விப் பாடம் நடைமுறைக்கு வந்துள்ளது.

இப்பாடம் 6 - 9 ஆம் தரங்களில் ஒரு கட்டாயப் பாடமாகவும் 10 - 11 ஆந்தரங்களில் முதலாம் தொகுதியைச் சேர்ந்த ஒரு தெரிவுப் பாடமாகவும் நடைமுறைப்படுத்தப்படும். குடியியற் கல்விப் பாடத்திற்கான 8 ஆந் தரத்துக்குரிய பாடத்திட்டம் இத்துடன் முன்வைக்கப்பட்டுள்ளது.

பொதுச் சேவைகள், சனநாயக மக்கட் சமூகம், பல்பண்பாட்டு மக்கட் சமூகம், சமகாலப்பிரச்சினைகள், பிரச்சினை தீர்த்தலும் தீர்மானமெடுத்தலும் வேலை உலகு ஆகிய 06 பிரதான தலைப்புக்களின்கீழ் நமது நாட்டுப் பிள்ளைகளை நற்பிரசைகளாக சமூக மயப்படுத்துவதற்குத் தேவையான தேர்ச்சிகளை விருத்தி செய்வதே இத்தரத்தில் எதிர்பார்க்கப்படகின்றது. ஏற்கனவே 6 ஆந் தரந் தொடக்கம் பல்வேறு தலைப்புக்களின் கீழ் பிரசைக்குரிய அறிவு பிரசைக்குரிய மனப்பாங்குகள், பிரசைக்குரிய திறன்கள் ஆகியவற்றை விருத்தி செய்தவாறு குடியியற் செயற்பாடுகளில் ஈடுபடும் பிள்ளைகளைத் தொடர்ந்தும் முன்னே கொண்டு சென்று, இலங்கைச் சமூகத்திற்கு மட்டுமன்றி உலகச் சமூகத்துக்குப் பொருத்தமான நற்பிரசைகளை உருவாக்கும் பணியில் 8 ஆந்தரத்துக்குரிய தேர்ச்சிகளும், தேர்ச்சி மட்டங்களும், பாட விடய உள்ளடக்கமும் கூடவே கற்றற்பேறுகளும் முக்கியமானவை என்பது கருத்திற் கொள்ளப்படுகின்றது.

ஒற்றுமை, சகவாழ்வு, நல்லிணக்கம் ஆகியவற்றின் ஊடாக இலங்கைத் தாயை நிலைபேறான சமாதானத்தின்பால் இட்டுச் செல்லும் பயணத்தின்போது குடியியற் கல்விப் பாடத்தின் மூலம் ஆற்றத்தக்க சமூகப்பணி அளப்பரியதாகும் என்பதும் மனங்கொள்ளத்தக்கது. அது தொடர்பாக உங்களது கவனம் ஈர்க்கப்படும் எனவும் கூடவே பூரண ஒத்துழைப்பும் பங்களிப்பும் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலானகல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகால கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினை தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணகருவுக்குள் தேசியப்பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

1. தொடர்பாடல் தேர்ச்சிகள்
   தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு: கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்

எண்ணறிவு: பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்

தகவல் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.



2. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்
   - ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
   - நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
   - மன எழுச்சிகள், நுண்ணறிவு

3. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்
   இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறையும்

உயிரியல் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்பணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

4. வேலை உலகத்திற்கு தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போசிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்
பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்

5. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்

6. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்

7. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்
விரைவாக மாறுகின்ற, சிக்கலான ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

(தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை - 2003)

## குடியியற்கல்வி
## தரம் 6 - 11 பாடக்குறிக்கோள்கள்

1. தமது திறன்கள், ஆற்றல்கள், இயலுமைகளை இனங்கண்டு எதிர்கால வாழ்க்கை இலட்சியங்களை உருவாக்குவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்துக் கொள்ளல்.
2. சிறந்த ஆளுமையுடன் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை வளர்த்தல்.
3. சமூகத்தின் சிறப்பான நிலவுகைக்குப் பங்களிப்புச் செய்யும் சமூக அமைப்புக்கள், நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்தல்.
4. நிதமும் மாற்றமடைந்து செல்லும் உலகில் எதிர்பாராத சிக்கார்ந்த நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றல்களை வளர்த்தல்.
5. பன்மைச் சமூகத்தில் ஐக்கியமாக வாழ்வதற்குத் தேவையான மானிடப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் கொண்ட பிரசைகளை உருவாக்குதல்.
6. சனநாயகக் கோட்பாடுகளுக்கும் மனித உரிமைகள் தொடர்பான சாசனங்களுக்கும் அமைவாகச் செயற்படும் சமூகமொன்றினை உருவாக்குதல்.
7. அனர்த்த முகாமையில் உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்து அனர்த்த நிலைமைகளைத் தவிர்த்தலும் ஏற்படத்தக்க இழப்புக்களைக் குறைத்தலும்.
8. அரசியல் எண்ணக்கருக்கள், அவற்றின் நடைமுறைப்பிரயோகங்கள், இலங்கை மற்றும் உலகின் ஆட்சிப்போக்குத் தொடர்பான விளக்கத்தை வழங்குதல்.
9. பல்வேறு பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பல்வேறு பொருளாதார அடிப்படைகளை நுணுகியாய்தலும் அவற்றைச் சமூக வாழ்க்கைக்கு உரித்தாக்கிக் கொள்ளலும்.
10. பரஸ்பரம் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் மதிக்கும் சமூகமொன்றினை உருவாக்குதல்.
11. இலங்கைக்கு நிலையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுத்தல்
12. சமாளிக்கக்கூடிய வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல்.

## தேசிய பொது இலக்குகளுக்கும் பாட குறிக்கோள்களுக்குமான தொடர்பு

| பாட குறிக்கோள்கள் | தேசிய பொது இலக்குகள் | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | i | ii | iii | iv | v | vi | vii | viii |
| 1. தமது திறன்கள், ஆற்றல்கள், இயலுமைகளை இனங்கண்டு எதிர்கால வாழ்க்கை இலட்சியங்களை உருவாக்குவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்துக் கொள்ளல். | | √ | | | | | | |
| 2. சிறந்த ஆளுமையுடன் சமூகத்தில் வாழ்வதற்குத் தேவையான தேர்ச்சிகளை வளர்த்தல். | | | | | √ | | | |
| 3. சமூகத்தின் சிறப்பான நிலவுகைக்குப் பங்களிப்புச் செய்யும் சமூக அமைப்புக்கள், நிறுவனங்களுடன் ஒத்துழைப்புடன் செயற்படுவதற்குத் தேவையான மனோதிடத்தை வளர்த்தல். | | | | | | | | √ |
| 4. நிதமும் மாற்றமடைந்து செல்லும் உலகில் எதிர்பாராத சிக்கார்ந்த நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்குத் தேவையான ஆற்றல்களை வளர்த்தல். | | | | | | | √ | |
| 5. பன்மைச் சமூகத்தில் ஐக்கியமாக வாழ்வதற்குத் தேவையான மானிடப் பண்புகளையும் சமூக விழுமியங்களையும் கொண்ட பிரசைகளை உருவாக்குதல். | √ | | | | | | | |
| 6. சனநாயகக் கோட்பாடுகளுக்கும் மனித உரிமைகள் தொடர்பான சாசனங்களுக்கும் அமைவாகச் செயற்படும் சமூகமொன்றினை உருவாக்குதல். | | | √ | | | | | |
| 7. அனர்த்த முகாமையில் உயிரோட்டமாகப் பங்களிப்புச் செய்து அனர்த்த நிலைமைகளைத் தவிர்த்தலும் ஏற்படத்தக்க இழப்புக்களைக் குறைத்தலும். | | | | | | | √ | |
| 8. அரசியல் எண்ணக்கருக்கள், அவற்றின் நடைமுறைப்பிரயோகங்கள், இலங்கை மற்றும் உலகின் ஆட்சிப்போக்குத் தொடர்பான விளக்கத்தை வழங்குதல். | | | | | | | | √ |
| 9. பல்வேறு பொருளாதாரக் கொள்கைகள் மற்றும் பல்வேறு பொருளாதார அடிப்படைகளை நுணுகியாய்தலும் அவற்றைச் சமூக வாழ்க்கைக்கு உரித்தாக்கிக் கொள்ளலும். | | | | | | √ | | |
| 10. பரஸ்பரம் பொறுப்புக்களையும் கடப்பாடுகளையும் மதிக்கும் சமூகமொன்றினை உருவாக்குதல். | | | | | √ | | | |
| 11. இலங்கைக்கு நிலையான சமாதானத்தை ஏற்படுத்திக் கொடுத்தல் | √ | | | | | | | |
| 12. சமாளிக்கக்கூடிய வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியெழுப்புவதன் மூலம் இலங்கையின் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்தல். | | | | √ | | | | |

குடியியற் கல்வி - 8 ஆந் தர பாடத்திட்டத்தை பாடசாலைத் தவணைகளுக்கமைய வகுத்துக் கொள்வதற்கான உத்தேச திட்டம்

| தவணை | தேர்ச்சிகள் | தேர்ச்சி மட்டங்கள் | பாடவேளைகள் தொகை | தேர்ச்சி மட்டங்கள் தொகை |
|---|---|---|---|---|
| முதலாந் தவணை | 8.1 | 8.1.1, 8.1.2, 8.1.3, 8.1.4 | 10 | 04 |
| | 8.2 | 8.2.1, 8.2.2, 8.2.3, 8.2.4, 8.2.5 | 10 | 05 |
| இரண்டாந் தவணை | 8.3 | 8.3.1, 8.3.2, 8.3.3 | 10 | 03 |
| | 8.4 | 8.4.1, 8.4.2, 8.4.3, 8.4.4, 8.4.5, 8.4.6 | 10 | 06 |
| மூன்றாந் தவணை | 8.5 | 8.5.1, 8.5.2 | 06 | 02 |
| | 8.6 | 8.6.1, 8.6.2, 8.6.3, 8.6.4, 8.6.5, 8.6.6, 8.6.7, 8.6.8, 8.6.9, 8.6.10 | 14 | 10 |

# குடியியற் கல்வி

## தரம் - 8

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **பொதுச் சேவைகள்**<br>8.1 மக்கள் வாழ்க்கையின் நன்மைக்காக, காணப்படும் பொதுச் சேவைகளை விளைதிறனுடையதாகவும் சரியாகவும் பயன்படுத்துவார். | 8.1.1 பொதுச் சேவைகளை இனங் கண்டு, அவற்றின் அவசியத்தையும் சமகால முக்கியத் துவத்தையும் நுணுகியாய் வார். | • பொதுச் சேவைகள்<br>- அறிமுகம்<br>- அவசியமும் வளர்ச்சியும்<br>- சமகால முக்கியத்துவம்<br>- பொதுச் சேவைகளின் இயல்புகள் | • பொதுச் சேவைகளைக் குறிப்பிடுவார்.<br>• பொதுச் சேவைகளின் அவசியத்தை விளக்குவார்.<br>• பொதுச் சேவைகளின் ஆரம்பம், வளர்ச்சி ஆகியன தொடர்பான தகவல்களை நுணுகியாய்வார்.<br>• பொதுச்சேவைகளின் சமகால முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• பொதுச் சேவைகள் சார்ந்த பொதுவான இயல்புகளைச் சுருக்கமாக விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.1.2 பொதுச்சேவைகள் வழங்கும் நிறுவனங்களை இனங் கண்டு, மக்கள் வாழ்க்கை யின் நன்மைக்காக அவற் றைப் பயன்படுத்துவார். | • எமது பிரதேச பொதுச் சேவைகள்:<br>- பல்வேறு பொதுச் சேவைகள்<br>- நீர் வழங்கல்<br>- சுகாதாரம்<br>- போக்குவரத்து<br>- மின்சாரம்<br>- தகவல் பரிமாற்றம்<br>- பாதுகாப்புச் சேவைகள்<br>- கல்வி<br>- அஞ்சல்<br>- கூட்டுறவு | • தமது பிரதேசத்துக்கு கிடைக் கும் பொதுச்சேவைகளை இனங்கண்டு பெயரிடுவார்.<br>• பொதுச்சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்பு டைய விவரங்களையும் அதிகாரிகளின் பொறுப்புக் களையும் விளக்குவார்.<br>• அரசினால் வழங்கப்படும் ஏனைய பொதுச் சேவைகள் தொடர்பான விவரங்களை முன்வைப்பார்.<br>• பொதுச்சேவைகள் வழங்கும் வேறு நிறுவனங்களுக்கு உதாரணங்கள் முன்வைப்பார். | 03 |
| | | • பொதுச்சேவைகள் வழங்கும் நிறுவனங்களும் அதிகாரி களும்<br>• நீர் வழங்கல் நிறுவனங்கள் உ-ம்: நீர் வழங்கல்,<br>- வடிகாலமைப்புச் சபை<br>- சுகாதார சேவைகள் வழங் கும் நிறுவனங்கள்<br>- கல்விச் சேவைகள் வழங் கும் நிறுவனங்கள் | • மக்களது வாழ்க்கையின் தரமேம்பாட்டுக்காக பொதுச் சேவைகள் துணையாகும் விதத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | - போக்குவரத்துச் சேவைகள் வழங்கும் நிறுவனங்கள்<br>- மின்சாரம் வழங்கும் நிறுவனங்கள்<br>- தகவல்பரிமாற்றம் சார்ந்த நிறுவனங்கள்<br>• அரசினால் வழங்கப்படும் வேறு பொதுச் சேவைகள்<br>- சுற்றாடல் பாதுகாப்பு<br>- சமூகப் பாதுகாப்பு<br>- பல்வேறு நலன்புரிச் சேவைகள்<br>• எமது பிரதேசத்தில் பொதுச் சேவைகள் வழங்கும் பிற நிறுவனங்களும் அவற்றின் மூலம் வழங்கப்படும் பொதுச் சேவைகளும்<br>உதா: கூட்டுறவுச் சங்கம்<br>- மக்கள் வாழ்க்கையின் தர மேம்பாட்டுக்குப் பொதுச் சேவைகள் துணையாகும் விதம் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.1.3 பொதுச் சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் கடமைகள், பொறுப்புக்களைப் பகுத்தாய்வார். | • பொதுச்சேவைகளை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களின் கடமைகளும் பொறுப்புக்களும்<br>- சகல பொதுச்சேவைகளும் பொதுமக்களின் தேவைகளை நிறைவேற்றுபவையாகையால் மனித நேயத்துடன் செயற்படுவதன் முக்கியத்துவம்.<br>- சகல பொதுச் சேவைகளையும் வினைத்திறனாகவும் முறைமையாகவும் வழங்குதல்.<br>• நீர் வழங்கல்<br>- சுத்தமான நீர் வழங்குதல், முறைமையாக விநியோகித்தல், வேளாவேளை பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்<br>• சுகாதார சேவைகள்<br>- தேவைப்படும் எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சேவைகளை முறைமையாக வழங்குதல், கொள்ளை (தொற்று) நோய்களைத் தவிர்த்தல் | • பொதுச் சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் விளக்குவார்.<br>• பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுதலானது மக்கள் வாழ்க்கையின் நல்ல இருப்புக்குக் காரணமாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• பொதுச் சேவைகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் வினைத்திறனுடன் சேவைகளை நிறைவேற்றுவதன் அவசியத்தை விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • கல்விச் சேவைகள்<br>- சமூகத்துக்குப் பயனளிக்கும் பிரசைகளை உருவாக்கத்தக்க கல்வியை வழங்குதல்<br>- தரத்தைப் பாதுகாத்தல்<br>- தேவையான வசதிகள் வழங்குதல்<br>• போக்குவரத்து<br>- பயணிகளின் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்<br>- வினைத்திறனான சேவையை வழங்குதல்<br>- சட்டத்தை மதித்து, ஒழுக்கம் பேணி மரியாதையுடன் சேவை வழங்குதல்<br>• மின்சாரம்<br>- நுகர்வோருக்கு இடையறாது மின்சாரம் வழங்குதல்<br>- முறைமையாகச் சேவை வழங்குதல்<br>• தகவல் பரிமாற்றம்<br>- நம்பகமாக, வினைத்திறனாக, முறைமையாகச் சேவை வழங்குதல் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.1.4 பொதுச்சேவைகளைப் பயன் படுத்துவது சார்ந்த பிரசைகளின் உரிமைகள், கடமைகள் தொடர்பாக அறிவூட்டம் பெற்றுச் செயற்படுவார். | • பொதுச் சேவைகளைப் பயன் படுத்தும் பிரசையொருவரின் கடமைகளும் பொறுப்புக்களும்<br>- கிடைக்கும் சேவைகளைச் சிக்கனமாகப் பயன் படுத்தல்<br>- சேவைகளுக்குரிய கட்டணங்களைச் செலுத்துவதில் நேர்மையாகச் செயற்படுதல்<br>- பொதுச்சேவைகள் தொடர்பாக நன்மனப்பாங்குகள் விருத்தி செய்து கொள்ளல்<br>- சேவைகள் தொடர்பான சொத்துக்கள், உபகரணங்களைப் பாதுகாத்தல் | • பொதுச் சேவைகளைப் பயன் படுத்துவது தொடர்பாக பிரசைகளின் பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தையும் விளக்குவார்.<br>• பொதுச் சேவைகளுடன் தொடர்புடைய வகையில், பிரசைகள் தமது கடமைகளை நிறைவேற்றுவதலானது சேவைகளை வினைத்திறனுடையதாக வழங்குவதற்கு ஏதுவாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **சனநாயக மக்கட் சமூகம்**<br>8.2 சனநாயக மக்கட் சமூகமொன்றில் நற்பிரசையாகச் செயற்படுவார். | 8.2.1 தமது குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படும் சனநாயக குணாதிசயங்களுக்கு இசைவடைவார். | • தமது குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படும் சனநாயக குணாதிசயங்கள்<br>- கலந்துரையாடல் மூலம் சரியான தீர்வுகளை எட்டுதல்<br>- ஏனையோரின் கருத்துக்களைச் சகித்தல்<br>- பெரும்பான்மையின் விருப்புப் பற்றிய கருத்தை வினவுதலும் இணங்குதலும்<br>- தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல்<br>- ஒத்துழைத்துச் செயற்படல் | • குடும்ப அலகில் நடைமுறையில் உள்ள சனநாயக இயல்புகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.<br>• குடும்ப அலகில் காணப்பட வேண்டிய சனநாயக இயல்புகள் குடும்பத்தின் நல்வாழ்வுக்குக் காரணமாகும் விதத்தை விளக்குவார்.<br>• குடும்ப அலகின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் சனநாயக வாழ்க்கைக்குப் பொருத்தமான குணாதிசயங்களை வளர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• பாடசாலைச் சமூகத்தில் நடைமுறையில் உள்ள சனநாயக இயல்புகளை இனங்கண்டு அவற்றை விவரிப்பார்.<br>• பாடசாலைச் சமூகத்தில் சனநாயக குணாதிசயங்களுக்கு இசைவடைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.2.2 சிறுவர் உரிமைகள், கடமைகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார். | • சிறுவர் உரிமைகள் - அறிமுகம்<br>• சிறுவர் ஒருவருக்கு உரிய உரிமைகள்<br>• உரிமைகளுடன் இணைந்த கடமைகள்<br>• சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் செயற்படும் நிறுவனங்கள் | • சிறுவர் உரிமைகளை விபரிப்பார்.<br>• சிறுவர் உரிமைகளைச் சரியாக அனுபவிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• சிறுவர் உரிமைகளை அனுபவித்தலானது சிறுவரின் விருத்திக்குக் காரணமாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• சிறுவர் உரிமைகளுடன் இணைந்த கடமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் செயற்படும் நிறுவனங்களின் பணிகளை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.2.3 சனநாயக மக்கள் சமூகமொன்றின் இருப்பு உறுதி பெறும் வகையில் மனவெழுச்சிகளை இசைவுபடுத்திக் கொள்வார். | • பல்வேறு மனவெழுச்சிகள்<br>• மனவெழுச்சிகளின்படி நடத்தைக் கோலம் வேறுபடுகின்றமை<br>• மனவெழுச்சிகளை நன்மை நாடி இசைவுபடுத்திக் கொள்வதன் முக்கியத்துவம் | • ஆட்களிடத்தே தோன்றும் பல்வேறு மனவெழுச்சிகளின் தன்மைகளை உதாரணங் காட்டி விவரிப்பார்.<br>• மனித நடத்தைகள் மீது மனவெழுச்சிகள் பல்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விளக்குவார்.<br>• சனநாயகப் பிரசை என்ற வகையில் மனவெழுச்சிகளை உடன்பாடான வகையில் கையாள்தலானது, தனியாளின் வாழ்க்கைக்கும் சமூக நலனுக்கும் காரணமாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார். | 02 |
| | 8.2.4 தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை இனங்கண்டு, தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார். | • தலைமைத்துவம் - அறிமுகம்<br>• தலைமைத்துவத்தின் அவசியம்<br>• தலைமைத்துவப் பண்புகள்<br>• தலைமைத்துவமேற்றலும் தலைமைத்துவத்தைப் பின்பற்றுதலும் | • தலைமைத்துவம் என்பதைச் சுருக்கமாக விளக்குவார்.<br>• சமூகமொன்றின் நல்ல இருப்புக்கு நற்பண்புகளைக் கொண்ட தலைமைத்துவத்தின் அவசியத்தை விவரிப்பார்.<br>• தலைவர்களிடத்தே காணப்பட வேண்டிய சனநாயகத் தலைமைத்துவப் பண்புகளைப் பெயரிடுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | | • சனநாயக தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• சமூகத்தின் நல்ல இருப்புக்காக தலைமைத்துவத்தைப் பின்பற்றுபவர் என்ற வகையில் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகள் தொடர்பான விவரங்களை முன்வைப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.2.5 சனநாயக வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளை வளர்த்துக் கொள்வார். | • சனநாயக வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளை இனங்காணல்<br>• சனநாயக வாழ்க்கைக் கோலமானது சமூகத்தின் நல்ல இருப்புக்குக் காரணமாகும் விதம்<br>- மக்கட் சமூகத்தில் நல்லிணக்கம் வளர்ச்சியடைதல்<br>- முரண்பாடுகள் இழிவான சமூகமொன்று உருவாதல்<br>- சட்டத்தை மதிக்கும், நற்பண்புகளை மதிக்கும் பிரசைகள் உருவாதல்<br>- அமைதிநேய மக்கள் சமூகம் உருவாதல்<br>- ஒவ்வொருவரதும் உரிமைகள் பாதுகாக்கப்படுதல் | • சனநாயக வாழ்க்கைக்கு அவசியமான பண்புகளை விளக்குவார்.<br>• சனநாயக வாழ்க்கைக் கோலம் சமூகத்தின் நல்ல இருப்புக்குக் காரணமாகின்றமையை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **பல்-பண்பாட்டு (கலாசார) மக்கள் சமுகம்**<br>8.3 பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தில் அமைதி நேயமான நற்பிரசையாக வாழ்வார். | 8.3.1 பல் - பண்பாட்டு மக்கள் சமூகமொன்றின் இயல்புகளைப் பகுத்தாய்வார். | • பல் - பண்பாட்டு மக்கட் சமூகம் - அறிமுகம்<br>• பல் - பண்பாட்டு மக்கட் சமூகமொன்றின் இயல்புகள்<br>- பல்வேறு மக்களினங்கள்<br>- பல்வேறு சமயங்கள்<br>- பல்வேறு மொழிகள்<br>- பல்வேறு வழக்காறுகள்<br>- பல்வேறு பண்பாட்டு மரபுரிமைகள் காணப்படல் | • பல் - பண்பாட்டு மக்கட் சமூகம் என்பதை வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தின் அடிப்படை இயல்புகளை விளக்குவார். | 03 |
| | 8.3.2 பண்பாட்டுப் பல்வகைமையுள் ஒற்றுமையாகவும் சகவாழ்வுடனும் செயற்படுவார். | • இலங்கையின் பண்பாட்டுப் பல்வகைமை<br>- மொழிகள்<br>- சமயங்கள்<br>- வழக்காறுகள்<br>- பண்பாட்டு மரபுரிமைகள்<br>• பல்வேறு பண்பாட்டுப் பாரம்பரியங்கள், வழக்காறுகள், உற்சவங்கள்<br>• வெவ்வேறு மக்களினங்கள் சார்ந்த வழக்காறுகள்<br>உதா: பிறப்புக்கு முன்னர் தொடக்கம் இறப்புக்கு பின்னர் வரை | • இலங்கை நாடு பல் - பண்பாட்டு, மக்கள் சமூகத்தைக் கொண்டது என்பதை உதாரணங்காட்டி விளக்குவார்.<br>• இலங்கை மக்கட் சமூகத்தில் காணப்படும் பல்வேறு பண்பாடுகளைச் சேர்ந்த பண்பாட்டு அம்சங்கள் தொடர்பான விபரங்களை முன்வைப்பார்.<br>• பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் சகவாழ்வு வாழ்வதன் முக்கியத்துத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • வெவ்வேறு சமயங்களுடன் இணைந்த வழக்காறுகள், பாரம்பரியங்கள், உற்சவங் களும் அவற்றின் முக்கியத்து வமும்<br>உதா:<br>இந்து - தைப்பொங்கல், தீபாவளி<br>கிறிஸ்தவம் - நத்தார், பெரிய வெள்ளி<br>இஸ்லாம் - றமழான், ஹஜ்<br>பௌத்தம் - வெசாக், பொசொன்<br>• ஒவ்வொரு பண்பாட்டினதும் தனித்துவம் உறுதிப் படுத்தப்பட்டிருத்தல்<br>• பல்வகைமையுள் ஒற்றுமை யாகவும் சகவாழ்வுடனும் செயற்படல்<br>• வேறுநாடுகளிலும் பல்பண் பாட்டு மக்கட் சமூகங்கள் காணப்படுகின்றமை<br>உதா: இந்தியா, அமெரிக்க ஐக்கிய குடியரசு | • வேறு நாடுகளின் பல்பண் பாட்டு இயல்புகள் தொடர்பான விவரங்களை முன்வைப்பார். | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.3.3 சுய பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணி தேசிய ஒற்றுமைக்கும் பேண்தகு சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பங்களிப்பார். | • பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக முரண்பாடு இழிவாதலும் மக்கட் பிரிவினருக்கு இடையே ஒற்றுமை உறுதி பெறுதலும்<br>• பண்பாட்டுப் பல்வகைமையுள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக ஒற்றுமையாகச் செயற்படல்<br>• பண்பாட்டு ஒன்றிணைப்பை ஏற்படுத்துவதற்காக அனுசரிக்கத்தக்க வழிவகைகள்<br>• விளைதிறனான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு நாட்டின் அபிவிருத்திக்குப் பங்களித்தல்<br>• பண்பாட்டு பல்வகைமையை மதித்து தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றல்.<br>• பல்பண்பாட்டுச் சமூகத்தில் பேண்தகு சமாதானத்தை உருவாக்குதல் | • சமாதான நேயமான மக்கட் சமூகமொன்றின் நல்ல இருப்புக்கு, பரஸ்பர புரிந்துணர்வு முக்கியமானது என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தின் பண்பாட்டு ஒன்றிணைப்புக்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை விளக்குவார்.<br>• தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணியவாறு ஏனைய பண்பாடுகளை மதித்து வாழ்வதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• பல் - பண்பாட்டு மக்கட் சமூத்தில் பேண்தகு சமாதானத்தை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.<br>• பேண்தகு சமாதானம் தேசிய அபிவிருத்திக்குக் காரணமாகும் விதத்தை விளக்குவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **சமகாலப் பிரச்சினைகள்**<br>8.4 மக்கட் சமூகத்தின் பாதுகாப்பான இருப்புக் காக செயலூக்கத்துடன் செயற்படுவார். | 8.4.1 விபத்துக்கள், அனர்த்தங் களை இனங்கண்டு அவற் றை இழிவாக்குவதற்காகச் செயற்படுவார். | • விபத்துக்கள், அனர்த்தங்களை இனங்காணல்<br>• இயற்கையாகவும் மனிதனின் செயற்பாடுகள் காரணமாகவும் ஏற்படும் விபத்துக்களும் அனர்த்தங்களும்<br>• விபத்துக்கள், அனர்த்தங்கள் காரணமாக ஏற்படும் இழப் புக்களை இழிவாக்குவதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள்<br>• விபத்துக்களைத் தவிர்ப்பதற் காக எடுக்கத்தக்க நடவடிக் கைகள்<br>• குறித்த நிறுவனங்கள் தொடர் பான அறிவூட்டம் பெறலும் அவற்றின் மூலம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றுதலும்<br>- அனர்த்த முகாமை நிலையம்<br>- வைத்தியசாலை, பொலிஸ் நிலையம், தீயணைக்கும் நிலையம், வானிலை அவ தான நிலையம்<br>- g pw e pW t d q ṛ s ? c s ளூ ராட்சி நிறுவனங்கள், ஏனைய நிறுவனங்கள் சார்ந்த தீயணைப்பு அலகுகள் | • இடர்கள், விபத்துக்களைப் பெயரிடுவார்.<br>• இடர்கள், விபத்துக்கள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குவார்.<br>• இடர்கள், விபத்துக்கள் காரணமாக ஏற்படும் இழப்புக் களை இழிவாக்குவதற்காக எடுக்கத் தக்க நடவடிக்கை களைப் பிரேரிப்பார்.<br>• விபத்துக்களைத் தவிர்ப்ப தற்காக எடுக்கத்தக்க நடவடிக் கைகளை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுவார்.<br>• இடர்கள், விபத்துக்களின்போது உதவி பெறத்தக்க நிறுவனங் களைப் பெயரிடுவார்.<br>• இடர்கள், விபத்துக்களின் போது உதவி வழங்கும் நிறுவனங்களால் வழங்கப் படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத் தை விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.4.2 விபத்துக்கள், அனர்த்தங்களின்போது சமயோசிதமாகச் செயற்படுவார். | • அந்தந்த விபத்து மற்றும் அனர்த்தத்தின் போது சமயோசிதமாகவும் சாவதானமாகவும் செயற்படுதல்.<br>• விபத்து நிகழ்ந்துள்ள சந்தர்ப்பத்தில் ஆபத்தான வகையில் அவ்விடத்திற்குச் செல்வதைத் தவிர்த்தல்<br>• விபத்துக்கு உள்ளாகியோருக்கும் முதலுதவி வழங்குவோருக்கும் உதவி புரிதல்<br>• குறித்த நிறுவனங்களுக்கு அறிவித்தல்<br>• உணர்ச்சி வசப்படாது செயற்படல்<br>• நிதானமாக, பொறுமையாகச் செயற்படல் | • விபத்துக்கள், அனர்த்தங்களின் போது தனதும் ஏனையோரதும் உயிர்களைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுவதன் அவசியத்தை விளக்குவார்.<br>• விபத்துக்கள், அனர்த்தங்களின் போது சமயோசிதமாகச் செயற்படுவதன் அவசியத்தைக் கலந்துரையாடுவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.4.3 அனர்த்த முகாமை செய்வார். | • விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழத்தக்க இடங்கள்<br>- வீடு<br>- சுற்றுச்சூழல்<br>- பாடசாலை<br>- வேலைத்தலம்<br>• இடம்சார்ந்த விபத்துக்கள் தவிர்ந்த ஏனைய விபத்துக்கள் ஏற்படத்தக்க சந்தர்ப்பங்கள்<br>- வனவிலங்குகள் காரணமாக<br>- நாய்கள் காரணமாக<br>- பாம்புகள் காரணமாக<br>• உணவு மற்றும் மருந்துவகை தொடர்பான விபத்துக்கள்/ அனர்த்தங்கள்<br>• உகப்பற்ற பழக்கங்கள் காரணமாக நிகழத்தக்க விபத்துக்கள்<br>- மதுவருந்திய பின்னர் வாகனமோட்டுவதால் நிகழும் விபத்துக்கள் | • விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழத்தக்க சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• விபத்துக்கள், அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகப் பொருத்தமான வழிவகைகளைப் பிரேரிப்பார்.<br>• குறித்த இடங்களில் நிகழத்தக்க விபத்துக்கள் தவிர்ந்த விடத்து வேறு விபத்துக்கள் நிகழத்தக்க சந்தர்ப்பங்களை இனங்கண்டு அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதன் அவசியத்தை விளக்குவார்.<br>• உணவு, மருந்துகள் ஆகியன காரணமாக நிகழத்தக்க விபத்துக்களை இனங்கண்டு, அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• விபத்துக்கள், அனர்த்தங்கள் ஏற்படுவதற்குப் பாதகமான வாழ்க்கைப் பழக்கங்கள் காரணமாகின்றமையை உதாரணங்காட்டி விளக்குவார்.<br>• விபத்துக்கள், அனர்த்தங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்குச் சாதகமான வாழ்க்கைப் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வதை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.4.4 வீதி ஒழுங்கு விதிகளை அனுசரித்து வீதி விபத்துக் களை இழிவாக்கச் செயற் படுவார். | • வீதி விபத்துக்கள்<br>- வீதி விபத்துக்கள்<br>- அறிமுகம்<br>- வீதி விபத்துக்களுக்கான காரணங்கள்<br>- வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக அனு சரிக்க வேண்டிய வழிவகைகள்<br>- வீதி ஒழுங்கு விதிகளை அனுசரித்தல்<br>- வீதி விபத்தொன்று நிகழ்துள்ள சந்தர்ப்பத் தில் செயற்பட வேண்டிய விதம்<br>- புகையிரத விபத்துக்கள்<br>- புகையிரத விபத்துக் களுக்கான காரணங்கள்<br>- புகையிரத விபத்துக் களைத் தவிர்ப்பதற்கு அனுசரிக்கத்தக்க வழி வகைகள்<br>- புகையிரத விபத்தொன்று நிகழ்ந்துள்ள சந்தர்ப் பத்தில் செயற்பட வேண்டிய விதம் | • தற்காலத்தில் நிகழும் வீதி விபத்துக்கள், அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.<br>• வீதி விபத்துக்கள் நிகழுவதற் கான காரணங்களை விளக்கு வார்.<br>• விபத்துக்களைத் தவிர்ப்ப தற்காக பின்பற்ற வேண்டிய வழிவகைகளை உதார ணங்கள் மூலம் எடுத்துக் காட்டுவார்.<br>• வீதிச் சட்டதிட்டங்களை குறியீடுகள், சமிக்ஞைகள் மூலம் விளக்குவார்.<br>• புகையிரத விபத்துக்களுக் கான காரணங்களை விளக்கு வார்.<br>• புகையிரத விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகப் பின்பற்ற வேண்டிய வழிவகைகளை எடுத்துக் காட்டுவார்.<br>• வீதி விபத்துக்கள், புகையிரத விபத்துக்களின்போது செயற் பட வேண்டிய விதத்தை விவரிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.4.5 இரசாயனப் பொருட் பயன் பாடு காரணமாக நிகழும் விபத்துக்களை இழிவாக்கு வதற்குப் பங்களிப்புச் செய்வார். | • இரசாயனப்பொருட் பயன் பாடும், அவ்விரசாயனப் பொருள்கள் காரணமாக விபத் துக்கள் ஏற்படத்தக்க விதமும்.<br>• இரசாயனப்பொருள் காரண மாக விபத்து ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில் எடுக்கத்தக்க நடவடிக்கைகள்<br>• அவ்விபத்துக்களைத் தவிர்ப்ப தற்காக எடுக்கத்தக்க நடவடிக் கைகள் | • இரசாயனப் பொருட் பயன்பாடு காரணமாக ஏற்படத்தக்க விபத்துக்களை விளக்குவார்.<br>• இரசாயனப் பொருள் சார்ந்த விபத்தின்போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விபரிப்பார்.<br>• இரசாயனப்பொருள்கள் சார்ந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற் காக எடுக்கத்தக்க நடவடிக் கைகளை எடுத்துக்காட்டுவார். | 02 |
| | 8.4.6 தாக்குப்பிடிக்கத்தக்க வாழ்க் கைக் கோலமொன்றுக்கு இசைவடைந்து, பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப் பார். | • தாக்குப்பிடிக்கத்தக்க நுகர்வுக் கோலம் என்பது யாது என விளக்குதல்<br>• தாக்குப்பிடிக்கத்தக்க நுகர்வுக் கோலத்தைப் பழக்கப் படுத்திக் கொள்ளல்<br>• சுகாதாரமும் உடனலமும்<br>• உணவும் ஆடையணிகளும்<br>• போக்குவரத்துத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல்<br>• வலுசக்தியைப் பயன்படுத்தல்<br>• நீரும் மின்சாரமும்<br>• களித்திருத்தலும் ஓய்வைக் கழித்தலும்<br>• வீடு திட்டமிடலும் வீடமைப்பும் | • தாக்குப்பிடிக்கத்தக்க வாழ்க் கைக் கோலம் என்பது யாது எனக் கலந்துரையாடுவார்.<br>• நாளாந்த தேவைகளை நிறை வேற்றிக் கொள்வதற்காக, தாக்குப்பிடிக்கத்தக்க நுகர்வுக் கோலத்தைப் பழகிக் கொள் வதன் அவசியத்தை விளக்கு வார்.<br>• தாக்குப்பிடிக்கத்தக்க நுகர்வுக் கோலத்தைப் பழகிக் கொள் வதன் மூலம் பேண்தகு அபி விருத்திக்குப் பங்களிப்புச் செய்யலாம் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **பிரச்சினை தீர்த்தலும் தீர்மானமெடுத்தலும்**<br>8.5 வாழ்க்கைச் சந்தர்ப்பங்கள் மற்றும் அறைகூவல்களின் முன்னிலையில் விளைதிறனுடையவாறு தீர்மானமெடுப்பார். | 8.5.1 நாளாந்த வாழ்க்கையில் எதிர் நோக்க வேண்டியேற்படத்தக்க பிரச்சினைகள், அறைகூவல்கள் பற்றி ஆராய்வார். | • பிரச்சினைகள், அறைகூவல்களை இனங்காணல்<br>• பிரச்சினைகள், அறைகூவல்களை எளிமையான வகையில் வரைவிலக்கணப்படுத்தல்<br>• நாளாந்த வாழ்க்கையில் எதிர்கொள்ள நேரிடும் பிரச்சினைகள், அறைகூவல்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதன் முக்கியத்துவம் | • பிரச்சினைகள், சவால்களை எளிமையாக வரைவிலக்கணப்படுத்துவார்.<br>• நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அறைகூவல்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் திறனை விருத்தி செய்து கொள்வது அவசியமாகும் எனக் கருத்துத் தெரிவிப்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.5.2 வாழ்க்கையில் வெவ்வேறு பிரச்சினைகள், அறைகூவல்களை வெற்றிகரமாக எதிர்கொள்வார். | • வெவ்வேறு பிரச்சினைகள், அறைகூவல்களை வெற்றி கொள்வதற்காக ஆக்கபூர்வமான முறைகளைக் கையாள்தல்<br>• எந்தவொரு பிரச்சினைக்கும், அறைகூவலுக்கும் தீர்வு உண்டு எனல்<br>• பிரச்சினைகளையும் அறைகூவல்களையும் வாழ்க்கையின் வெற்றிக்காகத் தொடர்புபடுத்திக் கொள்ளத்தக்க விதம்<br>- மனவலிமையை விருத்தி செய்து கொள்ள முற்படல்<br>- பல்வேறு ஆக்கங்களை உருவாக்கிக் கொள்ள முற்படல்<br>- தவறுகளைத் திருத்திக் கொள்ள முற்படல்<br>- மாற்றுத் தீர்வுகளுக்காக ஆலோசனை பெறல் | • பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றமையானது பொதுவான வாழ்க்கையுடன் இணைந்த நிகழ்வுகளாகும் என்பதை விளக்குவார்.<br>• எந்தவொரு பிரச்சினைக்கும் சவாலுக்கும் தீர்வு உண்டு என்பதை உதாரணங்காட்டி விவரிப்பார்.<br>• வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காக சவால்கள், பிரச்சினைகளை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்வதன் அவசியத்தை விளக்குவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| **வேலையுலகு**<br>8.6 வேலையுலகுக்குப் பரிச்சயமடைவார். | 8.6.1 வேலை உலகின் பல்வகைமையை மதிப்பார். | • வேலையுலகு - அறிமுகம்<br>• வேலை உலகில் காணப்படும் பல்வேறு தொழிற்பரப்புகள்<br>- விவசாயத்துறை<br>- கைத்தொழில் துறை<br>- தொழினுட்பத்துறை<br>- சேவைகள்<br>• சுயதொழில்கள்<br>• அந்தந்தத்துறை தொடர்பான தொழில்வாய்ப்புகளுக்கு உதாரணங்கள் | • வேலை உலகின் பல்வகைமையை உதாரணங்காட்டி விளக்குவார்.<br>• வேலை உலகின் பல்வகைமையின் கீழ் பல்வேறு தொழில் வாய்ப்புக்களை விவரிப்பார். | 02 |
| | 8.6.2 உழைப்பின் மகிமையை உணர்ந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை நுணுகியாய்வார். | • உழைப்பின் மகிமை<br>- அறிமுகம்<br>• உழைப்பின் மகிமையை உணர்ந்து செயற்படுவதன் முக்கியத்துவம்<br>• உழைப்பின் மகிமையை உணர்ந்து செயற்படுவதால் சேவை வழங்குநருக்கும் வாடிக்கையாளருக்கும் கிடைக்கும் பயன்கள் | • உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து சேவையில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து செயற்படுதலானது தொழில் திருப்திக்குக் காரணமாகும் என்பதற்குச் சார்பாக விடயங்களை முன்வைப்பார்.<br>• உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து செயற்படுவதால் கிடைக்கும் பயன்களை விளக்குவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.6.3 ஒவ்வொரு தொழிலும் சமூக முன்னேற்றத்துக்குக் காரணமாகும் விதத்தை நுணுகியாய்வார். | • சமுகத்தில் காணப்படும் பல்வேறு தேவைகள்<br>• ஒவ்வொரு தொழிலும் சமூகத்தில் காணப்படும் பல்வேறு தேவைளை இனங்காணத் துணையாகின்றமை<br>• தனியாளின் திறன்களுக்கமைய தொழில்களில் ஈடுபடுவதன் மூலம் சமூக முன்னேற்றத்திற்கும் துணையாகும் விதம் | • ஒவ்வொரு தொழிலும் சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதில் பங்களிப்புச் செய்யும் விதத்தை உதாரணங் காட்டி விளக்குவார்.<br>• ஒவ்வொரு தொழிலும் சமூக மேம்பாட்டுக்குக் காரணமாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார். | 01 |
| | 8.6.4 பயிற்சி பெற்ற உழைப்பின் முக்கியத்துவத்தைத் தேடியாய்வார். | • உழைப்பை உடலுழைப்பு, உள உழைப்பு என வேறுபடுத்திக் காட்டுவார்.<br>• வினைதிறனுள்ள உழைப்பாளி ஆவதற்குப் பயிற்சியின் அவசியம்<br>• பயிற்சியானது, உழைப்பின் தரத்தின் மீது பங்களிப்புச் செய்யும் விதம்<br>• பயிற்சி பெற்ற உழைப்பாளிக்கு உண்ணாட்டிலும் வெளி நாடுகளிலும் நல்ல கேள்வி இருத்தல் | • ஓர் உழைப்பாளி என்ற வகையில் தமது தொழில் துறைக்குரிய பயிற்சிகளைப் பெறுவதன் அவசியத்தை விளக்குவார்.<br>• உழைப்பாளி ஒருவருக்குப் பயிற்சிகள் பெறுவதற்காகக் காணப்படும் வாய்ப்புக்கள் குறித்துக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• உழைப்பின் விளைதிறனானது பயிற்சியின் மீது தங்கியுள்ளமையை உதாரணங்காட்டி விளக்குவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | • பயிற்சி வழங்கும் கற்கைநெறி கள்<br>உதாரணம்: தொழிற் பயிற்சிக் கற்கைநெறிகள்<br>• தொழிற்பயிற்சி மற்றும் வசதி கள் வழங்கும் நிறுவனங்கள் அரச நிறுவனங்கள்/ தனியார் நிறுவனங்கள் | | 01 |
| | 8.6.5 நல்ல உழைப்பாளர் ஒரு வரின் குணாதிசயங்களை உள்வாங்கிக் கொள்வார். | • நல்ல உழைப்பாளர் ஒருவரின் குணாதிசங்கள்<br>உதாரணம்:<br>- குறித்த நேரத்துக்கு வேலைக்கு வருதல்<br>- அர்ப்பணிப்பு<br>- திருப்தியுடன் வேலையில்/ தொழிலில் ஈடுபடல்<br>- கடமைகள் - பொறுப்புக் களை நிறைவேற்றல்<br>- ஒத்துழைத்துச் செயற்படல்<br>- ஒற்றுமை<br>- தொழில்சார் விருத்தி குறித் துக் கவனஞ் செலுத் துதல்<br>- தலைமைத்துவத்தை மதித்தல்<br>- நிறுவனத்தின் சட்டதிட்டங் கள் பாரம்பரியங்களை மதித்தல் | • நல்ல உழைப்பாளி ஒருவரின் குணாதிசயங்களை விளக்கு வார்.<br>• சேவை நிலையத்தில் நல்ல குணாதிசயங்களைப் பேணி வருதலை மதிப்பார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.6.6 வேலை இடத்தின் எதிர் பார்ப்புக்களை நுணுகியாய் வார். | • வேலை இடத்தின் எதிர்பார்ப் புக்கள்<br>- வெளித்தோற்றத்தைச் சீராகப் பேணுதல்<br>- நேரத்துக்கு வருகை தருதல்<br>- நேரத்துக்கு வேலை செய்தல்<br>- வேலை இடத்தின் அபிவிருத் திக்கு அர்ப்பணித்தல்<br>- வினைத்திறனுடன் செயற் படல்<br>- சம்பளத்திற்கு ஏற்ற உச்ச சேவையை வழங்குதல் | • உழைப்பாளி என்ற வகையில் வேலையிடத்தின் எதிர்ப்பார்ப் புக்கள் தொடர்பான உணர் தன்மை காட்டுவதன் அவசியத் தை விளக்குவார்.<br>• வேலையிடத்தின் எதிர்பார்ப்புக் களை நிறைவேற்றுதல், சேவை வழங்குபவரின் கடமை யும் பொறுப்பும் ஆகும் என் பதை விளக்குவார். | 01 |
| | 8.6.7 உழைப்பாளரின் உரிமை கள், பொறுப்புக்களைப் பரிசீலிப்பார். | • **உரிமைகள்**<br>- பாதுகாப்பான, சுத்தமான, அழகிய வேலைச் சூழல்<br>- தொழில் தொடர்பான உபகரணங்கள், கருவிகள்<br>- உணவு வேளை (ஓய்வு)<br>- அடிப்படைப் பயிற்சி<br>- தொடர் தொழில்சார் அபிவிருத்தி<br>- விடுமுறை (வரப்பிரசாதமாக)<br>- சுகவீன விடுமுறை | • ஊழியரின் உரிமைகளையும் கடமைகளையும் அட்டவ ணைப்படுத்துவார்.<br>• ஊழியருக்குரிய உரிமைகளை அனுபவித்தவாறு கடமைகளை யும் பொறுப்புக்களையும் நிறை வேற்றும் விருப்பை வெளிப்படுத்துவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | | **கடமைகள்**<br>- குறித்த நேரத்துக்கு வருகை தருதல்<br>- சுயதோற்றம்<br>- பழக்க வழக்கங்கள்<br>- இருப்பு<br>- வருந்தி உழைத்தல்<br>- குழுவின் உறுப்பினராகச் செயற்படல்<br>- சேவைத் தேவைகளுக் கமைய வேலை செய்தல்<br>- வேலையிடத்தின் வசதிகள் உபகரணங்களை மதித்த லும் பாதுகாத்தலும்<br>- வேலையிடத்தின் விருத்திக் காக ஒத்துழைத்துச் செயற் படல்<br>- தொழிற்சங்க அங்கத்துவம் | | |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.6.8 தனிப்பட்ட தொழில்சார் குணாதிசயங்களை விருத்தி செய்துகொள்வதன் முக்கியத்துவத்தை மதிப்பார். | • தனிப்பட்ட வினையாற்றுகை<br>• திறன்கள்<br>• கற்றல் முறைகள்<br>- மரபுரீதியான நுட்பங்களை தொழில்சார்ந்த முறைகளை தொடர்ந்தும் நடத்திச் செல்லல்<br>- தொழினுட்பத்தைப் பயன்படுத்தல்<br>- நிபுணத்துவ அனுபவங்களைப் பெறுதல் | • உழைப்பாளி என்ற வகையில் தனிப்பட்ட செயலாற்றுகையை உயரியமட்டத்தில் பேணிவருவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• தமது திறன்கள், ஆர்வங்கள் குறித்து தொழில் சார் ஆலோசகர் ஒருவருடன் கலந்துரையாடுவார்.<br>• தொழில்சார் விருத்திக்காக வெவ்வேறு கற்றல் முறைகளைப் பயன்படுத்துவதன் அவசியத்தை விளக்குவார். | 02 |
| | 8.6.9 வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவதற்கான வெவ்வேறு உத்திகளைப் பகுத்தாய்வார். | • வாடிக்கையாளர் (சேவை பெறுநர்)<br>- வாடிக்கையாளரைத் திருப்திப்படுத்துவதன் மூலம் வணிகத்தினது நம்பிக்கையை உறுதி பெறுதல்<br>• வாடிக்கையாளருக்குக் கிடைக்கும் பிரதிபலன்கள்<br>• வாடிக்கையாளர் திருப்தியடைந்தமையை உறுதிப்படுத்தல்<br>• பரிச்சயமான வாடிக்கையாளருடன் தொடர்புகளைத் தொடர்ச்சியாகப் பேணல் | • வாடிக்கையாளரை திருப்திப்படுத்துவதற்கேற்ற உத்திகளைப் பிரேரிப்பார்.<br>• வாடிக்கையாளருடன் தொடர்புகளைப் பேணும்போது அவர்களை நன்கு இனங்கண்டு செயற்படுவதன் அவசியத்தை விளக்குவார். | 01 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற்பேறுகள் | பாட வேளைகள் |
|---|---|---|---|---|
| | 8.6.10 வருமானமீட்டுதலானது வாழ்க்கைக் கோலத்தின் மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை நுணுகியாய்வார். | • நல்ல வருமானம் கிடைப்பதால் கிடைக்கும் பயன்கள்<br>• குறைந்த வருமானம் கிடைப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள்<br>• சமூக நேயமான நடவடிக்கைகள் மூலம் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகளை இனங்காணல் | • வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு ஏற்ற வழிவகைகளைப் பிரேரிப்பார்.<br>• தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக, புத்திசாலித்தனமாகவும் சமூக நேயமான வகையிலும் செயற்படுவதன் முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.<br>• நல்ல வருமானம் கிடைத்தலானது வாழ்க்கைத் தரமேம்பாட்டுக்குக் காரணமாகும் விதத்தை விளக்குவார். | 01 |

# கற்றல் கற்பித்தல் செயன்முறைக்கான அறிவுறுத்தல்கள்

## 8.1 பொதுச் சேவைகள்

மக்கள் தமது வாழ்க்கையைச் சீராக நடத்திச் செல்வதற்குத் தேவையான சேவைகளைத் தனிப்பட்ட வகையில் பெற்றுக்கொள்வது தொடர்பில் பண்டைக்கால முதலே இடர்களை எதிர்நோக்கி வந்துள்ளனர். இலங்கையில் பண்டைக்காலத்தில் நாளாந்த தேவைகளுக்காகவும் பயிர்ச் செய்கைக்காகவும் நீரைப் பெறுதல், நோய்களைக் குணப்படுத்துவதற்காக வைத்திய சேவைகளை நடத்திச் செல்லல் போன்றவற்றுக்காக அரச அனுசரணை வழங்கப்பட்டமைக்கான சான்றுகள் உள்ளன.

தற்காலத்தில் மனிதனின் தேவைகள் சிக்கார்ந்துள்ளமையால் மக்களது வாழ்க்கையில் பல்வேறு தேவைகளை நிறைவேற்றுவதன் மூலம் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அரசு தலையிடும் நிலை காணப்படுகின்றது. தற்போது பல்வேறு பொதுச் சேவைகளை மக்களுக்கு வழங்குவதற்காக அரச துறைகள் மாத்திரமன்றித் தனியார் துறைகளும் செயற்படுகின்றன. நாளாந்த வாழ்க்கையில் இவ்வாறான பல பொதுச் சேவைகளைப் பயன்படுத்துவதற்குச் சமகால பிரசைகளுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

அப்பொதுச் சேவைகளைப் பயன்படுத்துவது தொடர்பாகத் தமது கடமைகள் பொறுப்புக்களை நிறைவேற்றியவாறு, தமது வாழ்க்கை நிலையை மேம்படுத்திக் கொள்வதற்காகப் பொதுச் சேவைகளைப் பயன்படுத்துவதன் முக்கியத்துவம் வலியுறுத்தப்படும் வகையில் இப்பாடத்தைக் கற்குமாறு மாணவ மாணவியரை வழிப்படுத்துக.

மேலும் பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களும் அச்சேவைகளுடன் தொடர்புடைய அதிகாரிகளும் பொதுச் சேவைகளை வழங்கும் போது நிறைவேற்ற வேண்டிய கடமைகள், பொறுப்புக்கள் எவை என்பன விளங்கிக் கொள்ளும் வகையில் இப்பாடவிடயங்களைக் கற்பதற்கு மாணவ மாணவியருக்குச் சந்தர்ப்பம் வழங்குக.

**தேர்ச்சி 8.1** :- மக்கள் வாழ்க்கையின் நன்மைக்காக, காணப்படும் பொதுச் சேவைகளை விளைதிறனுடையதாகவும் சரியாகவும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.1.1 பொதுச் சேவைகளை இனங்கண்டு, அவற்றின் அவசியத்தையும் சமகால முக்கியத்துவத்தையும் நுணுகியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- பொதுச் சேவைகளைக் குறிப்பிடுவார்.
- பொதுச் சேவைகளின் அவசியத்தை விளக்குவார்.
- பொதுச் சேவைகளின் ஆரம்பம், வளர்ச்சி ஆகியன தொடர்பான தகவல்களை நுணுகியாய்வார்.
- பொதுச்சேவைகளின் சமகால முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- பொதுச் சேவைகள் சார்ந்த பொதுவான இயல்புகளைச் சுருக்கமாக விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- **பொதுச்சேவைகள் - அறிமுகம்**

  பொதுமக்களது வாழ்க்கைத் தரத்தில் தரமேம்பாட்டை நோக்காகக் கொண்டு, அரசதுறை, தனியார் துறை, உள்ளூராட்சி நிறுவனங்கள், தொண்டர் அமைப்புக்கள் போன்றவற்றினால் பொதுவாக வழங்கப்படும் சேவைகள் பொதுச் சேவைகளாகும்.

- பொதுச்சேவைகளின் அவசியம்
  - பொதுமக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்
  - மக்களது வாழ்க்கையில் நாளாந்தரக் கருமங்களை இலகுவாகவும் வினைத்திறனாகவும் நிறைவேற்றுதல்
  - தனித்து நின்று இலகுவாக நிறைவுசெய்து கொள்ள முடியாத தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல்
  - சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்
  - பிரதேசங்களுக்கு இடையே தொடர்புகளைப் பேணுதல்
  - சமூகத்தின் தேவைகளை நிறைவு செய்வதன் மூலம் மனித உரிமைகளைப் பாதுகாத்தல்

  போன்றவற்றுக்காக

- பொதுச்சேவைகளின் வளர்ச்சி
  - இலங்கையில் அனுராதபுர இராசதானி காலத்திலிருந்து அரச அனுசரணையுடன் பொதுச் சேவைகள் வழங்கப்பட்டமைக்குச் சான்றுகள் உள்ளன.

    உதாரணம்:
    - நீர்ப்பாசன முறைகள் மூலம் நிருப்பாசனம் வழங்கப்பட்டமை (குளங்கள் அமைத்தல், கால்வாய்கள் அமைத்தல்)
    - வைத்தியசாலைகள் அமைத்தலும் அவற்றைப் பராமரித்தலும்
    - மூலிகைப் பூங்காக்கள் அமைத்தல்
    - வைத்திய சேவைகளை நடத்துதல்

    சனத்தொகை வளர்ச்சி, மனிதத் தேவைகள் மேன்மேலும் அதிகரித்தமை, கைத்தொழில் வளர்ச்சி, தொடர்பாடல் தொழினுட்ப வளர்ச்சி போன்றவற்றோடு கூடவே பொதுச் சேவைகளும் விருத்தியடைந்தமை.

- பொதுச்சேவைகளின் சமகால முக்கியத்துவம்
  - மனிதத் தேவைகள் மேன்மேலும் சிக்கார்ந்து செல்லல்
  - சனத்தொகைப் பெருக்கம்
  - கைத்தொழில் துறையின் வளர்ச்சி மற்றும் தொழினுட்ப வளர்ச்சிக்கு காரணமாக பொதுச் சேவைகளின் முக்கியத்துவம் உணரப்படல்

- பொதுச் சேவைகளின் இயல்புகள்

  உதாரணம்:
  - பொதுவில் அனைவரும் பெறத்தக்கதாக இருத்தல்
  - ஒவ்வொருவரும் இலகுவாகப் பெறத்தக்கதாக இருத்தல்
  - பொதுமக்களின் நலனை நோக்காகக் கொண்டு நடத்திச் செல்லப்படுதல்
  - ஒட்டுமொத்தமாக மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தல்
  - குறைந்த வருமான முன்னோக்குக்கு நிவாரணமாதல்
  - அரசினால் நடத்திச் செல்லப்படும் பொதுச் சேவைகள், இலாப நோக்கமின்றி நடத்தப்படுதல்
  - பொதுச் சேவைகளைப் பாதுகாப்பதற்கும் நடத்திச் செல்வதற்குமாக சட்ட வரையறை அமுலில் இருத்தல்

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

- பண்டைய குளங்கள் நீர்ப்பாசனக் கால்வாய்களைக் காட்டும் ஒளிப்படங்கள்
- தற்காலத்தில் காணப்படும் பொதுச் சேவைகளைக் காட்டும் ஒளிப்படங்கள்/ வீடியோ காட்சிகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- குழு ஒப்படைகள்/ முன்வைப்புக்கள்/ குழுச் செயற்பாடுகள் ஆகியவற்றின் கீழ் தகவல்களைக் கற்றாயுமாறு மாணவரை வழிப்படுத்தி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம் :- 8.1.2 பொதுச்சேவைகள் வழங்கும் நிறுவனங்களை இனங்கண்டு, மக்கள் வாழ்க்கையின் நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்துவார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- தமது பிரதேசத்துக்கு கிடைக்கும் பொதுச்சேவைகளை இனங்கண்டு பெயரிடுவார்.
- பொதுச்சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடைய விவரங்களை அதிகாரிகளின் பொறுப்புக்களை விளக்குவார்.
- அரசினால் வழங்கப்படும் ஏனைய பொதுச் சேவைகள் தொடர்பான விவரங்களை முன்வைப்பார்.
- பொதுச்சேவைகள் வழங்கும் வேறு நிறுவனங்களுக்கு உதாரணங்கள் முன்வைப்பார்.
- மக்களது வாழ்க்கையின் தரமேம்பாட்டுக்காகப் பொதுச் சேவைகள் துணையாகும் விதத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்க.)

- **பிரதேச பொதுச்சேவைகள்**
  - நீர் வழங்கல்
  - நீர்ப்பாசனம்
  - மின்சாரம்
  - சுகாதாரம்
  - கல்வி
  - போக்குவரத்து
  - செய்திப்பரிமாற்றம்

  பின்வரும் அந்தந்தப் பொதுச் சேவையினால் ஆற்றப்படும் பணிகளை இனங்காணச் சந்தரப்பம் வழங்குக. இச்சேவைகள் அரசினாலும் தனியார் துறையினராலும் வழங்கப்படுகின்றன என்பதை உதாரணங்காட்டி விளக்குக.

  - அரசினால் வழங்கப்படும் ஏனைய பொதுச் சேவைகள்
    உதாரணம்: காடு வளர்ப்புச் செயற்றிட்டங்கள் ஆரம்பித்தலும் நடத்திச் செல்லலும்
    - காக்கப்பட்ட காடுகளாகப் பேணி வருதல்
    - முதியோர் இல்லங்களை நடத்தி வருதல்

  - பல்வேறு நலன்புரிச் சேவைகள்
    - பிரதேசத்தில் வேறு அமைப்புக்கள் மூலம் வழங்கப்படும் சேவைகள்
    - நுகர்வுப் பண்டங்களைச் சகாய விலையில் வழங்குதல்
    - கூட்டுறவு கடன் வழங்கும் சங்கங்கள் மூலம் உறுப்பினர்க்கு கடன் வழங்குதல்
    - போக்குவரத்துச் சேவைகள்/ வைத்தியசாலைச் சேவைகள்/ மரணாதாரச் சேவைகள் போன்றவற்றை நடத்திச் செல்லல்

  - பொதுச் சேவைக்காக வழங்கும் நிறுவனங்களும் அவற்றின் அதிகாரிகளும், அந்தந்தச் சேவைகளுக்குரிய நிறுவனங்கள், பொது மக்களுடன் நெருங்கிச் செயற்படும் அதிகாரிகள் அவர்களின் வேலைகள் ஆகியவற்றை விளக்குக.

- அரசினால் வழங்கப்படும் வேறு பொதுச் சேவைகள் தொடர்பான நிறுவனங்கள், அந்நிறுவனங்களில் பொதுமக்களுடன் நெருக்கமாகச் செயற்படும் அதிகாரிகள் அந்த அதிகாரிகளால் வழங்கப்படும் சேவைகள் ஆகியவற்றைக் கற்றாயச் சந்தர்ப்பமளிக்குக.
- கூட்டுறவு தொடர்பாக பொதுமக்களுடன் நெருங்கிச் செயற்படும் அதிகாரிகளும் அவர்களால் ஆற்றப்படும் சேவைகளும்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- தமது பிரதேசத்துக்கென அரசதுறையினாலும் தனியார் துறையினாலும் வழங்கப்படும் பொதுச் சேவைகள் தொடர்பான ஒளிப்படங்கள்/ படங்கள்/ சித்திரங்கள்/ சுவரொட்டிகள்/ துண்டுப் பிரசுரங்கள்
- வளவாளர்கள்
  பொதுச்சேவைகள் வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடைய அதிகாரிகளை வளவாளர்களாக அழைத்து (வசதி உள்ளதாயின்) அந்நிறுவனங்களின் பொறுப்புக்களைச் சுருக்கமாக விளக்குவதற்குச் சந்தர்ப்பமளித்தல்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- உத்தேச கற்றற் பேறுகளை அடையத்தக்க வகையில், செயல் ரீதியான கற்றல் - சந்தர்ப்பங்களைத் திட்டமிட்டு வழங்குவதன் மூலம் குறித்த பாடப்பகுதிகளைக் கற்குமாறு மாணவரை வழிப்படுத்தி, பொருத்தமான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.1.3 பொதுச் சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் கடமைகள், பொறுப்புக்களைப் பகுத்தாய்வார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- பொதுச் சேவைகள் வழங்கும் நிறுவனங்களின் கடமைகளையும் பொறுப்புக்களையும் விளக்குவார்.
- பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவனங்கள் தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றுதலானது மக்கள் வாழ்க்கையின் நல்ல இருப்புக்குக் காரணமாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.
- பொதுச் சேவைகளுடன் தொடர்புடைய அதிகாரிகள் வினைத்திறனுடன் சேவைகளை நிறைவேற்றுவதன் அவசியத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்க.)

- **பொதுச் சேவைகளை வழங்கும் நிறுவங்கள் சார்ந்த கடமைகளும் பொறுப்புக்களும்**

| பொதுச் சேவை | அச்சேவையை வழங்கும் நிறுவனம் | அப்பொதுச் சேவையை வழங்கும் நிறுவனத்தின் கடமைகளும் பொறுப்புக்களும் |
|---|---|---|
| நீர் வழங்கல் | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை | உதாரணம்:<br>• சுத்தமான குடிநீர் வழங்குதல்<br>• தொடர்ச்சியாக நீர் வழங்குதல்<br>• வீண்விரயமாதலைத் தவிர்த்தல்<br>• அதிகரித்துச் செல்லும் கேள்வியை ஈடு செய்தல் |
| மின்சாரம் | இலங்கை மின்சார சபை | உதாரணம்:<br>• தொடர்ச்சியாக மின்சாரம் வழங்குதல்<br>• மின் வடத் தொகுதியைச்சீராகப் பராமரித்தல்<br>• நுகர்வோரின் வாடிக்கையாளரின் முறைப் பாடுகளுக்கு உரியவாறு துலங்குதல்<br>• சேவையை முறையாக வழங்குதல் |
| சுகாதாரம் | வைத்தியசாலைகள் | உதாரணம்:<br>• நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்தல்<br>• தொற்றுநோய்கள் பரவுவதைத் தவிர்த்தல்<br>• தேவைப்படும் எந்தவொரு சந்தர்ப்பத் திலும் சேவையை முறைமையாக வழங்குதல் |
| கல்வி | பாடசாலைகள், உயர் கல்வி நிறுவனங்கள், பிரிவெனாக்கள் | உதாரணம்:<br>• உரியவாறு கல்வி வழங்குதல்<br>• மாணவரிடத்தே தேர்ச்சிகளை விருத்தி செய்தல்<br>• சமூகத்துக்குப் பயன்தரத்தக்க பிரசைகளை உருவாக்குதல்<br>• கல்வியின் தரத்தைப் பேணிவருதல்<br>• தேவையான வசதிகளை வழங்குதல் |

| பொதுச் சேவை | அச்சேவையை வழங்கும் நிறுவனம் | அப்பொதுச் சேவையை வழங்கும் நிறுவனத்தின் கடமைகளும் பொறுப்புக்களும் |
|---|---|---|
| போக்குவரத்து | • இலங்கை போக்குவரத்து சபை<br>• இலங்கை புகையிரதத் திணைக்களம்<br>• தனியார் பஸ்சேவை | உதாரணம்:<br>• நேரத்தவறாது சேவை வழங்குதல்<br>• பயணிகளின் பாதுகாப்பை உறுதிப் படுத்தல்<br>• சட்டத்தை மதித்து ஒழுக்கம் பேணி, மதியாதையுடன் சேவை வழங்குதல்<br>• வினைத்திறனான சேவை வழங்குதல் |
| தகவற் பரிமாற்றம் | • அஞ்சல் அலுவலகங்கள்<br>• முகவர் அஞ்சல் அலுவலகங்கள்<br>- ஸ்ரீலங்கா ரெலிகொம் | உதாரணம்:<br>• காலந்தவறாது அஞ்சல் பகிர்தல்<br>• அந்தரங்கத்தன்மையைக் காத்துச் சேவை வழங்குதல்<br>• வினைத்திறனாகச் சேவை வழங்குதல் |

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- பொதுச் சேவைகள் சரியாக கிடைக்காமற்போன சந்தர்ப்பங்களில் பொதுமக்கள் எதிர்நோக்கிய இடர்பாடுகளைக் காட்டும் ஒளிப்படங்கள்/ செய்தித்தாள் அறிக்கைகள்
- பொதுச்சேவைகளை வினைத்திறனுடைய வகையில் வழங்கப்படுவதன் விளைவாகப் பொதுமக்களுக்கு நன்மை கிடைத்த சந்தர்ப்பங்கள் தொடர்பான செய்தித்தாள் அறிக்கைகள்/ ஒளிப்படங்கள்
  (உதாரணம்: வைத்தியசாலைப் பணியணியினர் வினைத்திறனான சேவை காரணமாக நோயாளரின் உயிர் காப்பாற்றப்பட்ட சந்தர்ப்பங்கள்/ எதிர்பாராத அனர்த்த நிலைமைகளின்போது பொதுச்சேவைகள் மூலம் நிவாரணம் கிடைத்த சந்தர்ப்பங்கள் பற்றிய தகவல்கள்/ அறிக்கைகள்/ ஒளிப்படங்கள்)

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- பாடத்திற்குரிய பாடவிடயங்கள் அடையப்பெற்றுள்ளனவா என அளந்தறிவதற்குப் பொருத்தமான நியமங்களைத் தயாரித்து, அந்நியமங்களின்படி கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.1.4 பொதுச்சேவைகளைப் பயன்படுத்துவது சார்ந்த பிரசைகளின் உரிமைகள், கடமைகள் தொடர்பாக அறிவூட்டம் பெற்றுச் செயற்படுவார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- பொதுச் சேவைகளைப் பயன் படுத்துவது தொடர்பாக பிரசைகளின் பொறுப்புக்களையும் கடமைகளை நிறைவேற்றுவதன் முக்கியத்து வத்தையும் விளக்குவார்.
- பொதுச்சேவைகளுடன் தொடர்புடைய வகையில், பிரசைகள் தமது கடமைகளை நிறைவேற்றுவதலானது சேவைகளை வினைத்திற னுடையதாக வழங்குவதற்கு ஏதுவாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்க.)

- **அந்தந்த சேவையின் கீழ் வெவ்வேறாக உதாரணங்காட்டி விளக்குக.**
  - கிடைக்கும் சேவைகளைச் சிக்கனமாகப் பயன்படுத்தல்
  - சேவைகளுக்குரிய கட்டணங்களைச் செலுத்துவதில் நேர்மையாகச் செயற்படுதல்
  - சேவைகள் தொடர்பான சொத்துக்கள், உபகரணங்களைப் பாதுகாத்தல்
  - பொதுச்சேவைகள் தொடர்பாக நன்மனப்பாங்குகள் விருத்தி செய்து கொள்ளல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- பொதுச் சேவைகள் தொடர்பான கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றுவதன் அவசியத்தை எடுத்துக்காட்டும் செய்தித்தாள் அறிவித்தல்கள்/ கட்டணச் சிட்டைகள் மூலம் முன்வைக்கப்படும் கோரிக்கைகள் (உதாரணம்: நீர்க் கட்டணச் சிட்டை/ மின்கட்டணச் சிட்டை/ தொலைபேசிக் கட்டணச்சிட்டை போன்றவற்றை செலுத்த வேண்டிய கால எல்லையை குறிப்பிட்டிருத்தல்)
- பொதுச்சேவைகள் தொடர்பான கடமைகள், பொறுப்புக்களை நிறைவேற்றாமையால் அந்நிறுவனங்களுக்கு ஏற்படும் இழப்புக்களைக் காட்டும் செய்தித்தாள் அறிக்கைகள் (உதாரணம்: மின்சாரத்தை முறைமையற்ற வழிகளில் பெறுவதால் ஏற்படும் இழப்புக்கள்)
- பொதுச்சேவைகளை முறைமையற்ற வகையில் பயன்படுத்தியமை தொடர்பாகக் குற்றவாளியாகி தண்டனை விதிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் பற்றிய அறிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- குழு ஒப்படை, தகவல் தேடியறிதல் போன்ற கற்றல் - கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி, குறித்த பாடவிடயங்களைக் கற்றாயுமாறு மாணவரை வழிப்படுத்தி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு, உத்தேச கற்றற்பேறுகள் அடையப் பெற்றுள்ளமையைக் கணிப்பீடு மதிப்பீடு செய்க.

## எடுத்துக்காட்டுச் செயற்பாடு 8.1

**தேர்ச்சி** :- மக்கள் வாழ்க்கையின் நன்மைக்காக, காணப்படும் பொதுச் சேவைகளை விளைதிறனுடையதாகவும் சரியாகவும் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.1.2 பொதுச்சேவைகள் வழங்கும் நிறுவனங்களை இனங்கண்டு, மக்கள் வாழ்க்கையின் நன்மைக்காக அவற்றைப் பயன்படுத்துவார்.**

**கற்றற் பேறுகள்** :-

- தமது பிரதேசத்துக்குக் கிடைக்கும் பொதுச்சேவைகளை இனங்கண்டு பெயரிடுவார்.
- பொதுச்சேவைகளை வழங்கும் நிறுவனங்களுடன் தொடர்புடைய விவரங்களை அதிகாரிகளின் பொறுப்புக்களை விளக்குவார்.
- அரசினால் வழங்கப்படும் ஏனைய பொதுச் சேவைகள் தொடர்பான விவரங்களை முன்வைப்பார்.
- பொதுச்சேவைகள் வழங்கும் வேறு நிறுவனங்களுக்கு உதாரணங்கள் முன்வைப்பார்.
- மக்களது வாழ்க்கையின் தரமேம்பாட்டுக்காக பொதுச் சேவைகள் துணையாகும் விதத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.

**செயற்பாடு** :- பொதுச்சேவைகளை இனங்காண்போம்

**நேரம்** :- 40 நிமிடம்

**தரவுள்ளீடுகள்** :-

- பண்டைய குளங்கள், நீர்ப்பாசனக்கால்வாய்களின் ஒளிப்படங்கள்
- பயணிகள் பேருந்து, மின் வடங்கள் இணைக்கப்பட்ட மின்மாற்றியொன்று அல்லது மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றின் ஒளிப்படங்கள், நீர்க்குழாய் வாயியொன்றிலிருந்து நீர்பெறுவதைக் காட்டும் ஒளிப்படம், வகுப்பறையில் இருக்கும் மாணவர்களைக் காட்டும் ஒளிப்படம், வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகளின் ஒளிப்படம் (இவற்றுள் எளிதாகப் பெறத்தக்க சில ஒளிப்படங்களை அல்லது வீடியோக் காட்சிகளைப் பெற்றுக் கொள்க.)
- இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்படிவம்

**கற்றல் கற்பித்தற் செயன்முறை**

படிமுறை I :

- தரவிருத்தி உள்ளீடுகளின் கீழத் தரப்பட்டுள்ள ஒளிப்படங்கள், வீடியோக்கட்சிகள் சிலவற்றை வகுப்பில் காட்சிப்படுத்துக. அவற்றை இனங்காணச் சந்தர்ப்பமளிக்குக.
- இன்றைய தினம், அதிகாலை முதல் மாணவர்கள் பயன்படுத்திய சேவைகள் குறித்து கலந்துரையாடுக.
- அக்கலந்துரையாடலின் வழியே பொதுச் சேவைகளையும் அவற்றின் அவசியத்தையும் இனங்காண்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

- பண்டைய குளங்கள், நீர்ப்பாசனக் கால்வாய்களின் ஒளிப்படங்களை வீடியோக் காட்சிகளை முன்வைத்து,
  - குளங்களும் நீர்ப்பாசனமும்
  - வைத்தியசாலைகள்
  - மூலிகைப் பூங்காக்கள்
  - பிரிவெனாக்கள் போன்ற கல்வி நிறுவனங்கள்

  போன்ற பொதுச்சேவைகள் காணப்பட்டமையை இனங்காண்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.

(10 நிமிடம்)

படிமுறை II :

- வகுப்பைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு I இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப் பத்திரத்தை குழுவுக்கு ஒரு பிரதி வீதம் வழங்குக.
- வேலையைச் செய்து முடிப்பதற்கு போதிய கால அவகாசம் வழங்குக.
- வேலையைச் செய்து முடிப்பதற்காகத் தேவையான ஆலோசனைகளை வழங்கி வழிகாட்டுக.
- குழு அறிக்கையை முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.

(20 நிமிடம்)

படிமுறை III :

- பாடத்தின் குறிக்கோள்கள் நிறைவு பெறும் வகையில் மீட்டாய்வு நடத்துக.
- தேவையான பின்னூட்டல் வழங்குக.
- மதிப்பீட்டு நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீட்டு மதிப்பீட்டை நடத்துக.

(10 நிமிடம்)

**மதிப்பீட்டு நியமங்கள்**

- பொதுச் சேவைகளை உதாரணங்காட்டி விளக்குவார்.
- பொதுச் சொத்துக்களின் அவசியம் தொடர்பான விபரங்களை முன்வைப்பார்.
- பொதுச் சேவைகளின் தோற்றம் பெற்றமை தொடர்பான தகவல்களை எழுதிக்காட்டுவார்.
- பண்டைக்காலத்தில் காணப்பட்ட பொதுச் சேவைகள் தொடர்பாக ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வார்.
- ஒற்றுமையாகவும் ஆர்வத்துடனும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுவார்.

**இணைப்பு 1**

- பண்டைக் காலத்திலும் கூடப் பொதுச்சேவைகள் காணப்பட்டமைக்கான சில உதாரணங்கள் கீழே அட்டவணையில் நிரல் I இல் தரப்பட்டுள்ளன. அதற்கமைய அட்டவணையின் II ஆம் III ஆம் IV ஆம் நிரல்களைப் பூர்த்தி செய்க.
- உங்களது குழுவினால் பூர்த்தி செய்யப்பட்ட அட்டவணையை வகுப்பில் முன்வைக்குக.

| நிரல் I | நிரல் II | நிரல் III | நிரல் IV |
|---|---|---|---|
| பண்டைக் காலத்தில் காணப்பட்ட பொதுச் சேவைகள் | தேவைப்பட்டமைக்குக் காரணம் | நாட்டு மக்களுக்கு அச் சேவைகள் மூலம் கிடைத்த பயன்கள் | நாட்டுக்கு அச்சேவைகள் மூலம் கிடைத்த பயன்கள் |
| குளங்களும் நீர்ப்பாசனக் கால்வாய்களும் | | | |
| வைத்தியசாலைகள் | | | |
| மூலிகைப் பூங்காக்கள் | | | |
| பிரிவெனாக்கள் போன்ற கல்வி நிறுவனங்கள் | | | |

## 8.2 சனநாயக மக்கட் சமூகம்

**அறிமுகம்**

சுதந்திரத்தையும் சமத்துவத்தையும் அடிப்படையாகக் கொண்டு, பெரும்பாலானோர்கள் கருத்தை மதித்துச் செயற்படும் மக்கட் சமூகத்தை சனநாயக மக்கட் சமுகம் எனலாம். அவ்வாறான ஒரு மக்கட் சமூகத்தின் இருப்பில் உறுதிப்படுத்துதற்காக பிரசைகளிடத்திலும் அப்பண்புகள் விருத்தியடைவது அவசியமாகும். குடும்ப உறுப்பினர் என்ற வகையிலும் பாடசாலை உறுப்பினர் என்ற வகையிலும் மக்கட் சமூகத்தின் ஓர் உறுப்பினராக வாழும் போது மேற்படி இயல்புகளை ஒவ்வோர் உறுப்பினரும் விருத்தி செய்து கொள்வது சனநாயக மக்கட் சமுகத்தின் இருப்புக்கு அவசியமானதாகும். இப்பண்புகள் விருத்தியடையும் வகையில் இங்கு தரப்பட்டுள்ள பாடவிடயங்களைப் பயிலுமாறு மாணவ மாணவியரை வழிப்படுத்துவதே இந்த அத்தியாயத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

**தேர்ச்சி 8.2** :- சனநாயக மக்கட் சமூகமொன்றில் நற்பிரசையாகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.2.1 தமது குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படும் சனநாயகக் குணாதிசயங்களுக்கு இசைவடைவார்.**

**பாடவேளைகள்** :- 01

**கற்றற் பேறுகள்** :-

- குடும்ப அலகில் நடைமுறையில் உள்ள சனநாயக இயல்புகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- குடும்ப அலகில் காணப்பட வேண்டிய சனநாயக இயல்புகள் குடும்பத்தின் நல்வாழ்வுக்குக் காரணமாகும் விதத்தை விளக்குவார்.
- குடும்ப அலகின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் சனநாயக வாழ்க்கைக்குப் பொருத்தமான குணாதிசயங்களை வளர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- பாடசாலைச் சமூகத்தில் நடைமுறையில் உள்ள சனநாயக இயல்புகளை இனங்கண்டு அவற்றை விவரிப்பார்.
- பாடசாலைச் சமூகத்தில் சனநாயக குணாதிசயங்களுக்கு இசைவடைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- தமது குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படும் சனநாயக இயல்புகள்
  - கலந்துரையாடல் மூலம் சரியான தீர்மானங்களை எடுத்தல்
  - குடும்பத்தின் பொதுவான வேலைகளின் போது தாய், தந்தை, பிள்ளைகள், மூத்தோர் அனைவரும் கூட்டாகக் கலந்துயைாடித் தீர்மானங்களை எடுத்தல்.
  - தனித்து நின்று இலகுவாக நிறைவுசெய்து கொள்ள முடியாத தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளல்
  - சமூகப் பாதுகாப்பை உறுதிப்படுத்தல்

    உதாரணம்:
    - வேளையுணவு தயாரித்தல்
    - வேலைகளைப் பகிர்ந்து கொள்ளல்
    - பொறுப்புக்களை நிறைவேற்றுதல்

- குடும்பத்தில் விசேட நிகழ்வுகளின்போது குடும்ப உறுப்பினர் கூட்டாகக் கலந்துரையாடித் தீர்மானமெடுத்தல்
  உதாரணம்:
  - திருமணம் தொடர்பான விடயங்கள்
  - காணி வாங்குதல்
  - வீடு கட்டுதல்
  - உற்சவமொன்றினை ஒழுங்கு செய்தல்
- ஏனையோரின் கருத்துக்களைச் சகித்தல்
- குடும்பத்தின் கருமங்களின் போது குடும்ப உறுப்பினர்களதும் அன்பர்களதும் கருத்துக்களை வினவுதலும் தமது சுய விருப்பின் பேரில் தீரு்மானமெடுத்ததைத் தவிர்த்தலும்
- தமது கருத்தை உறுதிப்படுத்திக் கொள்வதற்கு ஏனையோரின் கருத்துக்களை சகித்தலும் நிறைவதும் முக்கியமானது.
- ஏனையோரின் கருத்துக்களைச் சகித்தல் மூலம் அவர்களுக்கு மதிப்பளித்தல்
- ஏனையோரின் கருத்துக்களை மதிப்பதன் மூலம் பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்பளித்தல்
- பெரும்பான்மையானோரின் விருப்பத்தையும் கருத்துக்களையும் வினவியறிதலும் இணக்கத்தைத் தெரிவித்தலும்
- குடும்ப நடவடிக்கைகளின்போது சகல உறுப்பினர்களதும் விருப்பம் குறித்து கவனஞ் செலுத்தி இணங்கத் தெரிவித்தலும் பெரும்பான்மையினரின் விருப்பத்திற்கு மதிப்பளிப்பதன் மூலம் குடும்பத்தில் நல்லிணக்கத்தை வளர்த்தலும்
- தலைமைத்துவத்துக்கு மதிப்பளித்தல்

குடும்பத்தில் பெற்றாரையும் மூத்தோரையும் தலைமைத்துவ நிலையில் வைத்துக் கணித்தல், அவர்களது ஆலோசனைகளையும் வழிகாட்டல்களையும் பிள்ளைகள் பெறுதல், குடும்ப நடவடிக்கைகளின் போது அவர்களைப் பின்பற்றுவோராகச் செயற்பட்டு உதவி புரிதல், குடும்பத் தலைமைத்துவத்தை மதித்த குடும்பத்தின் மேம்பாட்டுக்காகவும் சமூக முன்னேற்றத்துக்காகவும் பங்களிப்புச் செய்தல்

- ஒத்துழைத்துச் செயற்படுதல>

- குடும்பத்தின் சகல நடவடிக்கைகளின்போது குடும்பத்தில் ஒத்துழைப்பு அதிகரிக்கும் வகையில் சகலரும் பங்குபற்றிச் செயற்படுதல்
  இவ்வாறாக குடும்பத்தில் காணப்படும் சனநாயக இயல்புகளை மாணவருடன் கலந்துரையாடுக. அது குடும்பத்தின் பாதுகாப்புக்கும் முன்னேற்றத்துக்கும் ஏதுவாகும் விதத்தை விளக்குக.

**குடும்பத்தில் காணப்படும் சனநாயக இயல்புகள்**

- கலந்துரையாடல் மூலம் சரியாகத் தீர்மானமெடுத்தல்
- பாடசாலை நடைமுறையில் உள்ள சட்டதிட்டங்கள், பாரம்பரியங்களை ஏற்று அவற்றைப் பாதுகாத்துச் சரியான தீர்மானமெடுத்தல்.
- பாடசாலை நடவடிக்கைகள் தொடர்பாகத் தீர்மானமெடுக்கும்போது, அதிபர், தமது பாடசாலையின் ஏனைய துணை அதிகாரிகள், ஆசிரயர் ஆசிரியைகள், மாணவர் பிரதிநிதிகள், பெற்றோரின் பிரதிநிதிகள், பழைய மாணவரின் பிரதிநிதிகள் போன்றோரின் பங்களிப்பைப் பெற்று அவர்களது கருத்துக்களையும் அபிப்பிராயங்களையும் வினவித் தீர்மானமெடுத்தல்
- குடும்பத்தில் விசேட நிகழ்வுகளின்போதும் உற்சவங்களின்போதும் பாடசாலைச் சமுதாயத்துடன் கலந்துரையாடித் தீர்மானமெடுத்தல்
- ஏனையோரின் கருத்துக்களை மதித்தல்

- பாடசாலை நடவடிக்கைகளின்போது ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றார், பழைய மாணவர்கள் போன்றோரின் கருத்துக்களைப் பாடசாலை முகாமையாளர்கள் கவனத்திற் கொள்ளல் அதன் மூலம் பாடசாலையில் ஏனையோரின் கருத்துக்களைச் செவிமடுப்பதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துதல், ஏனையோரின் கருத்துக்களைச் சகிப்பதன் மூலம் ஏனையோருக்கு மதிப்பளிக்கப்படுதல் இதன் மூலம் பாடசாலைக்கு முன்மாதிரியாக அமையச் சந்தர்ப்பம் கிடைத்தல்.
    - பெரும்பான்மையினரின் விருப்பத்தையும் கருத்துக்களையும் வினவுதலும் இணக்கந்தெரிவித்தலும்
    - பாடசாலையின் கல்வி நடவடிக்கைகள், சங்கங்கள் கழகங்கள் சார்ந்த செயற்பாடுகள் போன்றவற்றின்போது பெரும்பான்மையானோரின் கருத்துக்களுடன் இணங்கிச் செயற்படுதல் மூலம் பாடசாலையில் சனநாயகச் சூழ்நிலை உருவாதல்
    - தலைமைத்துவத்தை மதித்தல்
        - பாடாசலையில் அதிபரின் தலைமைத்துவத்தை மதித்து, ஏனையோர் அத்தலைமைத்துவத்தைப் பின்பற்றுவோராகச் செயற்பட்டு பாடசாயின் மேம்பாட்டுக்குப் பங்களிப்புச் செய்தல்
        - பாடசாலையின் நோக்கையும் பணியையும் நிறைவேற்றுவதற்காகத் தலைமைத்துவம் வழங்குதல்
    - ஒத்துழைத்துச் செயற்படுதல்
        - பாடசாலை வளாக நிருவாகம், ஆசிரியர் குழாம், மாணவர்கள், பெற்றார் பழைய மாணவர்களது உதவியைப் பெற்று பாடசாலையின் மேம்பாட்டுக்கு நடவடிக்கை எடுத்தல்

இவ்வாறான பாடசாலைச் சூழலில் காணப்படும் சனநாயக இயல்புகளை மாணவருடன் கலந்துரையாடி, அதனைப் பாடசாலையின் மேம்பாட்டுக்காகப் பயன்படுத்தத்தக்க விதத்தை எடுத்துக்காட்டுக.

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- குடும்ப உறுப்பினர்கள் அன்றாடக் கருமங்களின்போது பரஸ்பரம் உதவி புரியும் சந்தர்ப்பங்களைக் காட்டும் வகிபாகமேற்று நடித்தல்கள், சித்திரங்கள், ஒளிப்படங்கள்
- குடும்ப உறுப்பினர்கள் கலந்துரையாடல் மூலம் தீர்மானமெடுக்கும் ஒரு சந்தர்ப்பத்தைக் காட்டும் வகிபாகமேற்று நடித்தல்/ சிறிய கதை (குடும்பத்தில் காணப்படும் சனநாயக இயல்புகள் வெளிப்படும் வகையில்)
- பாடசாலைச் சமூகத்தில் காணப்படும் சனநாயக இயல்புகள் எழுதப்பட்ட அட்டைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- வகிபாகமேற்று நடித்தல், முன்வைத்தல் போன்ற செயல்ரீதியான கற்றல் சந்தர்ப்பங்கள் மூலம், குறித்த பாடவிடயங்களைக் கற்றாயுமாறு மாணவரை வழிப்படுத்தி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு, கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.2.2 சிறுவர் உரிமைகள், கடமைகள் தொடர்பாக விளக்கத்துடன் செயற்படுவார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- சிறுவர் உரிமைகளை விபரிப்பார்.
- சிறுவர் உரிமைகளைச் சரியாக அனுபவிப்பதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- சிறுவர் உரிமைகளை அனுபவித்தலானது சிறுவரின் விருத்திக்குக் காரணமாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.
- சிறுவர் உரிமைகளுடன் இணைந்த கடமைகளை நிறைவேற்று வதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்காகச் செயற்படும் நிறுவனங்களின் பணிகளை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- சிறுவர் உரிமைகள் - அறிமுகம்
  - 1989 இல் மனித உரிமைகள் தொடர்பான சாசனம், ஐக்கிய நாடுகள் அமைப்பினால் வெளியிடப்பட்டது.
  - பெற்றாரின் விலைமதிக்க முடியாத செல்வம் பிள்ளைகளாவதோடு அப்பிள்ளைகள் நட்டின் எதிர்கால வளங்களாவர்.
  - பிள்ளைகளைப் போசித்தல், பராமரித்துப் பாதுகாத்தல், கல்வி வழங்குதல், விருத்தியடையச் சந்தர்ப்பமளித்தல் போன்றவை மூத்தோரின் பொறுப்புக்களாகும்.
  - சிறுவர் உரிமைகள் சாசனத்தின்படி 18 வருட வயதுக்கும் குறைவானோர் பிள்ளைகளாகக் கருதப்படுவர். இதன் மூலம் இவ்வயதுப் பிரிவில் உள்ள எல்லோருக்கும் ஆண் - பெண் என்ற பேதமின்றி உரித்தாகும் உரிமைகள் உள்ளன.
- பிள்ளைகளுக்கு உரித்தாகும் உரிமைகள் மற்றும் பொறுப்புக்கள் பின்வரும் அம்சங்களின் கீழ்த் தரப்பட்டுள்ளன.
  - பாதுகாப்புப் பெறுவதற்கு உரிய உரிமைகளும் பொறுப்புக்களும்
  - பங்குபற்றுகைக்கு உரிய உரிமைகளும் பொறுப்புக்களும்
  - விருத்தியடைவதற்கு உரிய உரிமைகளும் பொறுப்புக்களும்
  - இருப்புக்கு உரிய உரிமைகளும் பொறுப்புக்களும்

**சிறுவர் உரிமைகளுடன் இணைந்த கடமைகள்**

சில உதாரணங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| உரிமைகள் | கடமைகள் |
|---|---|
| கல்வி பெறுதல் | • நன்கு கல்வி கற்றல்<br>• ஆசிரியர்களை மதித்தல்<br>• பாடசாலையின் ஒழுக்கம், சட்டதிட்டங்கள், பாரம்பரியங் களைப் பாதுகாத்தல் |
| சுகாதார வசதிகள் பெறுதல் | • சுய சுகாதாரம் தொடர்பாக அறிவூட்டம் பெறல்<br>• நல்ல சுகாதார ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல்<br>• சுகாதாரப் பழக்கங்கள் தொடர்பாக ஏனையோருக்கு அறிவூட்டம் செய்தல் |
| சமூகப் பாதுகாப்பின் மூலம் பிரதிபலன் பெறும் உரிமை | • சமூகப் பாதுகாப்புக்காகப் பங்களிப்புச் செய்தல்<br>• சமூகப் பாதுகாப்புக்காக ஏனையோருக்கு அறிவூட்டம் செய்தல் |
| சமய நம்பிக்கை உரிமை | • ஏனையோரின் சமயங்களுக்கு மதிப்பளித்தல்<br>• சமயவழி வாழ்தல் |

- சிறுவர் உரிமைகளால் பாதுகாப்பதற்காகச் செயற்படும் நிறுவனங்கள்
    - சிறுவர் நன்னடத்தை சிறுவர் பாதுகாப்புத் திணைக்களம்
    - இலங்கை பொலிசு
    - சிறுவர், மாதர் பணியகம்
    - தொண்டர் அமைப்புக்கள்
    - சர்வதேச அமைப்புக்கள் (UNICEF)

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

- சிறுவர் உரிமைகள் தொடர்பான மேலதிக வாசிப்பு நூல் - பிரதி
  "உரிமைகளைப் பாதுகாத்துக் கொண்டு நாளை அமைதிக்கு வழிவகுப்போம்"
- சிறுவர் உரிமைக் சாசனம் - பிரதி
- சிறுவர்கள் தமது உரிமைகளுடன் இணைந்த கடமைகளை நிறைவேற்றும் சந்தர்ப்பங்களைக் காட்டும் ஒளிப்படங்கள்
- சிறுவர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கெனச் செயற்படும் நிறவனங்களால் ஆற்றப்படும் சேவைகளைக் காட்டும் ஒளிப்படங்கள்/ செய்தித்தாள் அறிக்கைகள்/ வீடியோக் காட்சிகள்
- உலக சிறுவர் தினம் தொடர்பாகச் செய்தித்தாள்களில் வெளிவந்த கட்டுரைகள்/ ஒளிப்படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- சிறுவர் உரிமைகளை அனுபவித்தல் மற்றும் அது தொடர்பான கடமைகளை நிறைவேற்றுதல் சார்ந்த தேர்ச்சிகளை மாணவரிடத்தே வளர்ந்துள்ளமையை அளந்தறிவதற்காக பொருத்தமான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி மட்டம்** :- **8.2.3 சனநாயக மக்கள் சமூகமொன்றின் இருப்பு உறுதி பெறும் வகையில் மனவெழுச்சிகளை இசைவுபடுத்திக் கொள்வார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- ஆட்களிடத்தே தோன்றும் பல்வேறு மனவெழுச்சிகளின் தன்மைகளை உதாரணங் காட்டி விவரிப்பார்.
- மனித நடத்தைகள் மீது மனவெழுச்சிகள் பல்வேறு வழிகளில் செல்வாக்குச் செலுத்தும் விதத்தை விளக்குவார்.
- சனநாயகப் பிரசை என்ற வகையில் மனவெழுச்சிகளை உடன்பாடான வகையில் கையாள்தலானது, தனியாளின் வாழ்க்கைக்கும் சமூக நலனுக்கும் காரணமாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- பல்வேறு மனவெழுச்சிகள்
  - நாளாந்த வாழ்க்கையின்போது பல்வேறு மனவெழுச்சிகள் தோன்றுவதுண்டு அதற்கமையப் பல்வேறு நடத்தைத் தன்மைகள் வெளிப்படுத்தப்படும்.
  - மனவெழுச்சிகள் திட்டவட்டமாக புறச்சூழலின் இடத்தை, நிகழ்வுகள் அல்லது கருத்துக்களின் ஊடாகவே தனியாளினால் வெளிப்படுத்தப்படும்.
  - மகிழ்ச்சி, கவலை, அச்சம், சினம், அன்பு போன்ற உணர்வுகளாக பல்வேறு மனவெழுச்சிகள் வெளிப்படுத்தப்படும்.
- மனவெழுச்சிகளின்படி நடத்தைக் கோலங்கள் பல்வகைப்படும்.

மகிழ்ச்சி - ஆரவாரஞ் செய்தல், சிரித்தல், ஆனந்தக் கண்ணீர் வடித்தல், நடனமாடுதல்
கவலை - அழுதல், சப்தமிடல், கண்கள் சிவத்தல், வியர்த்தல், தாக்க முனைதல்
சினம் - சத்தமிடல், ஏசுதல், அழுதல், உடல்நடுங்குதல், தாக்கமுனைதல், சவால் விடுத்தல்
அச்சம் - உடல் நடுங்குதல், சப்தமிடல், கண்கள் அகல விரிதல், திக்குதல், வாயடைத்துப் போதல்

- மனவெழுச்சிகளின் பெறுபேறுகள்

மகிழ்ச்சி - மலர்ச்சி பெறல், செயலூக்கம் பெறல், நிம்மதி பெறல்
கவலை - விரக்தியடைதல், சோம்பியிருத்தல்

- மனவெழுச்சிகளை உடன்பாடானவாறு இசைவுபடுத்திக் கொள்வதன் முக்கியத்துவம்
  - பாதகமான மனவெழுச்சி நிலைமைகள் தொடர்ந்தும் காணப்படுவதால் ஒருவர் உடல், உள, சமூக ரீதியில் சீர்குலைகின்றமையால் பாதகமான மனவெழுச்சி நிலைமைகளைத் தணிப்பதற்கான வழிவகைகளை மேற்கொள்வது அவசியமாகும்.
  - ஒருவரிடத்தே தோன்றும் மனவெழுச்சிகளைத் தவிர்ப்பது கடினமானதாகையால் அதனைச் சாதகமான வகையில் கையாள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம்.
  - பாதகமான மனவெழுச்சிகளைத் தணிப்பதற்காகக் கையாளத்தக்க நடவடிக்கைகள்
    - சூழலை மாற்றியமைத்தல்
    - ஆளின் துலங்கல்களை மாற்றியமைத்தல்
    - மனதை அமைதிப்படுத்தும் பயிற்சிகள்
    - நெருங்கிய நண்பர்களுடன் கலந்துரையாடல்

- பாதகமான மனவெழுச்சிகள் தோன்றுவதற்குச் சாதகமான தனியாள் மற்றும் சூழல் நிலைமைகளை மாற்றியமைத்தல்
- மனவெழுச்சி நிலைகளின் ஊடாக புத்தாக்கம் புரிதல்
- அழகியற் செயற்பாடுகளில் ஈடுபடுதல்
- விளையாட்டுச் செயற்பாடுகளில் ஈடுபடுத்தல்
- உடல் சார்ந்த அப்பியாசங்களிலும் உளப் பயிற்சிகளிலும் ஈடுபடுதல்
- சூழலை நயத்தல்
- செல்லப்பிராணி வளர்த்தல்

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

- முகபாவனைகள் மூலம் வெவ்வேறு மனவெழுச்சிகளை வெளிக்காட்டும் சித்திரங்கள்/ ஒளிப்படங்கள்/ வீடியோக்காட்சிகள்
- மனவெழுச்சிகளை உடன்பாடான வகையில் இசைவுபடுத்திக் கொண்டமையால் தனியாள்களதும் சமூகத்தினதும் நலனுக்கு ஏதுவாக அமைந்த சந்தர்ப்பங்கள்/ நிகழ்வுகள்
- மனவெழுச்சிகளைக் கட்டுப்படுத்தாத நிலையில் செயற்பட்டதன் விளைவாக பாதகமான விளைவுகள் ஏற்பட்ட சந்தர்ப்பங்களுக்கான உதாரணங்களைக் காட்டத்தக்க சம்பவங்கள் பற்றிய அறிக்கைகள்
- மனவெழுச்சிகளை நன்கு கட்டுப்படுத்திக் கொள்வதற்காகப் பொருத்தமான செயற்பாடுகளில் ஈடுபடும் ஆட்களைக் குழுக்களைக்காட்டும்/ ஒளிப்படங்கள்/ படங்கள்/ வீடியோ காட்சிகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- மனவெழுச்சிகளை நன்கு கட்டுப்படுத்தி இசைவு படுத்திக் கொள்வதற்கான ஆற்றல்களை மாணவரிடத்தே வளர்ப்பதற்குப் பொருத்தமான கற்றல் - கற்பித்தல் முறைகளைப் பயன்படுத்தி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி மட்டம்** :- **8.2.4 தலைமைத்துவத்தின் முக்கியத்துவத்தை இனங்கண்டு, தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- தலைமைத்துவம் என்பதைச் சுருக்கமாக விளக்குவார்.
- சமூகமொன்றின் நல்ல இருப்புக்கு நற்பண்புகளைக் கொண்ட தலைமைத்துவத்தின் அவசியத்தை விவரிப்பார்.
- தலைவர்களிடத்தே காணப்பட வேண்டிய சனநாயகத் தலைமைத்துவப் பண்புகளைப் பெயரிடுவார்.
- சனநாயக தலைமைத்துவப் பண்புகளை விருத்தி செய்து கொள்வதன் முக்கியத்துவத்தை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.
- சமூகத்தின் நல்ல இருப்புக்காக தலைமைத்துவத்தைப் பின்பற்றுபவர் என்ற வகையில் வளர்த்துக் கொள்ள வேண்டிய பண்புகள் தொடர்பான விவரங்களை முன்வைப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- ஒரு குடும்பத்தை அல்லது ஆட்கள் சிலரை அல்லது குழுமத்தினைப் பொது நோக்கமொன்றினை அடைவதற்காக ஒரு குழுவாக நெறிப்படுத்தல் தலைமைத்துவம் எனலாம்.

- சமூகத்தில் தலைமைத்துவத்தை அவதானிக்கத்தக்க சில சந்தர்ப்பங்கள்

  பாடசாலையில் - பெற்றார், வளர்ந்த பிள்ளைகள்

  பாடசாலையில் - அதிபர், பிரதி அதிபர், உதவி அதிபர், பிரிவுத்தலைவர், பாடப் பொறுப்புத் தலைவர், வகுப்பாசிரியர், மாணவ தலைவர், வகுப்புத்தலைவர், விளையாட்டுத் தலைவர், பாடசாலை அபிவிருத்திக் குழுத்தலைவர்கள், முகாமைக்குழுத் தலைவரக்ள்

  சமூகத்தில் - சமயத்தலைவர்கள், சமுதாயத்தலைவர்கள், அரசியல் தலைவர்கள், நிறுவனத் தலைவர்கள், தொண்டர் அமைப்புத் தலைவர்கள்

  - சமூகத்தில் பல்வேறு தலைமைத்துவப் பண்புகள் காணப்படுகின்றன.
    - சனநாயகத் தலைவர்கள்
    - சர்வாதிகாரத் தலைவர்கள்
    - சுயாதீனத் தலைவர்கள்

- தலைமைத்துவத்தின் அவசியம்
  - ஒரு குறித்த குழுவினரை அவர்கள் எதிர்பார்க்கும் இலக்குகளின்பால் இட்டுச் செல்வதற்காக அவர்களை வழிப்படுத்துவதற்குத் தலைமைத்துவம் அவசியமாகும்.
  - தாமே தமக்குத் தலைவராவதன் அவசியம்
  - தனியாள் குழுக்களுக்கு இடையே காணப்படும் தொடர்புகளின் மூலம் பொதுக் குறிக்கோளை அடைவதற்காகக் குழுவை நெறிப்படுத்துவது தலைமைத்துவத்தின் பிரதானமான தேவைப்பாடாகும்.

- தலைமைத்துவப் பண்புகள்
  - தன்னம்பிக்கை
  - உறுதிப்பாடு
  - செவிமடுக்கும் தன்மை
  - சமத்துவம் பேணல்
  - ஆளிடைத் தொடர்புகளைப் பேணல்
  - தொலைநோக்கு ஞானம்
  - அர்ப்பணிப்பு
  - சரியாகத் தீர்மானமெடுக்குந் தன்மை

- நட்புணர்வு
- ஏனையோருக்கு உதவி புரிதல்
- பக்கச்சார்பின்மை
- ஏனையோரின் கருத்துக்களை மதித்தல்
- சிந்தித்துச் செயலாற்றுதல்
- ஆக்கியல் சிந்தனை
- மனித நேயத்தன்மை
- நேர்மை

- தலைமைத்துவமும் தலைமைத்துவத்தைப் பின்பற்றுதலும்
    - தலைவர் தமது குழுவை நெறிப்படுத்துவார். அவரைப் பின்பற்றுவோரே அவரால் நெறிப்படுத்தப்படுவார்களாவர்.
    - தலைவர் தன்னம்பிக்கையுடன் குழுவை நெறிப்படுத்தும் போது அதற்கமையச் செயற்படுவதற்கு, தலைமைத்துவத்தைப் பின்பற்றுபவராக ஆயத்தமாதல் வேண்டும்.
    - தலைவரைச் சரியான பாதையின் வழியே இட்டுச் செல்லலும் சொந்த இலாபத்தைக் கருதாது செயற்படுதலும் தலைவரைப் பின்பற்றுபவரின் பொறுப்பாகும்.
    - ஒரு நல்ல தலைவரின்கீழ் அவரைப் பின்பற்றுபவராகச் செயற்படுவது அவசியமாகும்.
    - தலைவரும் அவரைப் பின்பற்றுபவரும் பரஸ்பரம் பொறுப்புக்களால் கட்டுண்டிருத்தல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- உலகப் பிரசித்தி பெற்ற தலைவர்கள் பற்றிக் கூறும் வாழ்க்கைச் சரிதைகள்/ திரைப்படங்கள்/ வீடியோக் காட்சிகள்/ நாடகங்கள்
- வெவ்வேறு சமயத்தலைவர்களின் வாழ்க்கைச் சரிதைகள்/ விசேட சம்பவங்கள்/ சாதகக் கதைகள்
- பிரதேசத்தில் வாழும் சிறந்த தலைவர்களின் வாழ்க்கைச் சரிதங்கள்
- பாடசாலையில் இருக்கும் சிறந்த தலைவர்கள் பற்றிய விவரங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- பல்வேறு சிறந்த தலைவர்களின் வாழ்க்கைச் சரிதங்கள், நாடகம்/ வகிபாகமேற்று நடித்தல் ஆகியவற்றைத் துணையாகக் கொண்டு கற்றல் சந்தர்ப்பங்களை உருவாக்கி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி மட்டம்** :- **8.2.5 சனநாயக வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளை வளர்த்துக் கொள்வார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- சனநாயக வாழ்க்கைக்கு அவசியமான பண்புகளை விளக்குவார்.
- சனநாயக வாழ்க்கைக் கோலம் சமூகத்தின் நல்ல இருப்புக்குக் காரணமாகின்றமையை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- சனநாயக வாழ்வு என்பது பொதுமக்களின் எதிர்பார்ப்புக்களை முன்னிறுத்தி, சுதந்திரம் சமத்துவம் எனும் எண்ணக்கருக்களை முதன்மையாகக் கொண்ட ஒரு வாழ்க்கை முறைப்படி செயற்படுவதாகும்.
- அதற்குத் தேவையான பண்புகள்
  - பரஸபரம் ஒத்துழைத்துச் செயற்படுதல்
  - சரியான பெரும்பான்மைக் கருத்துக்கு மதிப்பளித்தல்
  - பல்வேறு கருத்துக்களைச் சகித்தல்
  - கலந்துரையாடல் மூலம் தீர்மானமெடுத்தல்
  - சுயகட்டுப்பாட்டுடன் செயற்படல்
  - வெளிப்படைத்தன்மையுடன் செயற்படல்
  - நேர்மை
  - சட்டத்தை மதித்தல்
- சனநாயக வாழ்க்கைக் கோலமானது, சமூகத்தின் இருப்புக்கு ஏதுவாகும் விதம்
  - மக்கட் சமூகத்தில் நல்லிணக்கம் விருத்தியடைதல்
    - ஒவ்வொரு மக்கட் பிரிவினரையும் சமமாக மதித்தல் மற்றும் கௌரவித்தல் காரணமாக பரஸ்பர தொடர்புகள் விருத்தியடைதல்
    - தமது தேவைகள், எதிர்பார்க்கப்பட்ட மட்டத்தில் நிறைவேறுகின்றமையால் மனிதர் திருப்தியடைதல்
    - எல்லாக் கருமங்களின்போதும், அனைவரதும் பங்களிப்புப் பிரதிநிதித்துவமும் கிடைத்தல்
- முரண்பாடுகள் இழிவாகும் சமூகமொன்று உருவாதல்
  - பெரும்பான்மைக் கருத்தை மதித்தல்
  - பெரும்பான்மைக் கருத்தையும் சிறுபான்மைப் பிரதிநிதித்துவத்தையும் கவனத்திற் கொள்ளல்
  - சகல மக்கட் பிரிவினரும் சகல பண்பாடுகளுக்கும் மதிப்பளித்தல்

## எடுத்துக்காட்டுச் செயற்பாடு 8.2

**தேர்ச்சி** :- சனநாயக மக்கட் சமூகமொன்றில் நற்பிரசையாகச் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.2.1 தமது குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படும் சனநாயக குணாதிசயங்களுக்கு இசைவடைவார்.**

**கற்றற் பேறுகள்** :-

- குடும்ப அலகில் நடைமுறையில் உள்ள சனநாயக இயல்புகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- குடும்ப அலகில் காணப்பட வேண்டிய சனநாயக இயல்புகள் குடும்பத்தின் நல்வாழ்வுக்குக் காரணமாகும் விதத்தை விளக்குவார்.
- குடும்ப அலகின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் சனநாயக வாழ்க்கைக்குப் பொருத்தமான குணாதிசயங்களை வளர்த்துக் கொள்வதன் முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- பாடசாலைச் சமூகத்தில் நடைமுறையில் உள்ள சனநாயக இயல்புகளை இனங்கண்டு அவற்றை விவரிப்பார்.
- பாடசாலைச் சமூகத்தில் சனநாயக குணாதிசயங்களுக்கு இசைவடைந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.

**செயற்பாடு** :- ஒத்துழைத்துச் செயற்படுவோம்

**நேரம்** :- 40 நிமிடம்

**தரவுள்ளீடுகள்** :-

- இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்படிவம்
- இணைப்பு 02 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்படிவம்
- இணைப்பு 03 இல் தரப்பட்டுள்ள கதையின் ஒளிப்படப்பிரதிகள் குழுவுக்கு ஒன்று வீதம்

**கற்றல் கற்பித்தற் செயன்முறை**

படிமுறை I :

- வகுப்புத்தலைவர் பாடத்தலைவர் கழகமொன்றின் தலைவர் போன்றதொன்றுக்காக இரண்டு பெயர்கள் முன்மொழியப் பட்டுள்ளபோது பெரும்பான்மையினரின் விருப்பின்பேரில் அப்பதவிக்கு ஒருவர் தெரிவு செய்யப்பட்ட சந்தர்ப்பங்களை நினைவூட்டி மாணவருடன் கலந்துரையாடுக.
- பெரும்பான்மையினரின் விருப்பத்தின்பேரில் தீர்மானமெடுத்தல்
- ஏனையோரின் கருத்துக்களை மதித்தல்
- கலந்துரையாடித் தீர்மானமெடுத்தல்
- ஒத்துழைத்துச் செயற்படுதல்

போன்றவை சனநாயகத்தின் இயல்புகளாகும் என்பதை மாணவருடன் கலந்துரையாடுக.

(10 நிமிடம்)

படிமுறை II :

- வகுப்பைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- குழு 1, குழு 2 ஆகியவற்றுக்கு இணைப்பு I இல் தரப்பட்டுள்ள கதையின் ஒளிப்படப் பிரதி வீதம் வழங்குக.
- குழு 3, குழு 4 ஆகியவற்றுக்கு இணைப்பு 2 இல் தரப்பட்டுள்ள கதையின் ஒளிப்படப்பிரதி வீதம் வழங்குக.
- அந்தந்தக் குழுவுக்குச் செயற்பாட்டுப்படிவம் வீதம் வழங்குக.

- வேலையைச் செய்து முடிப்பதற்குப் போதுமான கால அவகாசம் வழங்குக.
- அந்தந்தக் குழு தயாரித்த அறிக்கையை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.

(20 நிமிடம்)

படிமுறை III :
- முக்கியமான விடயங்கள் வெளிக்கொணரப்படும் வகையில் மீட்டாய்வு நடத்துக.

(10 நிமிடம்)

**மதிப்பீட்டு நியமங்கள்**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.

- குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படும் சனநாயக ரீதியான இயல்புகளை இனங்கண்டு குறிப்பிடுவார்.
- சனநாயக ரீதியான இருப்பானது சமூகத்தின் நன்மைக்குக் காரணமாகும் என்பதை விளக்குவார்.
- குடும்பத்திலும் பாடசாலையிலும் காணப்படும் முக்கியமான சனநாயக இயல்புகளைப் பட்டியற்படுத்துவார்.
- சனநாயக ரீதியான இயல்புகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் கிடைக்கும் சாதகமான விளைவுகள் பற்றி ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வார்.
- குழுக் கலந்துரையாடல்களில் ஆர்வத்துடன் பங்குகொள்வார்.

**இணைப்பு 1**

**செயற்பாட்டுப்பத்திரம் (குழு இல. 01, 02 இற்காக)**

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள ''எமது விருப்பம் நிறைவேறிய நாள்'' கதையைக் கவனமாக வாசியுங்கள்.
- அக்கதையின் மூலம் வெளிக்கொணரப்படுவதையும் குடும்பத்தில் காணப்படுபவையுமான சனநாயக இயல்புகளைக் குறிப்பிடுங்கள்.
- நீங்கள் மேலே குறிப்பிட்ட ஒவ்வோர் இயல்பும் வெளிக்கொணரப்படும் சந்தர்ப்பத்துக்காகக் கதையிலிருந்து உதாரணங்காட்டுக.
- அறிக்கைப்படுத்திய தகவல்களை வகுப்பில் முன்வையுங்கள்.

**இணைப்பு 2**

**செயற்பாட்டுப்பத்திரம் (குழு இல. 03, 04 இற்காக)**

- உங்களுக்குத் தரப்பட்டுள்ள ''ஒத்துழைத்துச் செயற்படுவோம்'' எனும் கதையைக் கவனமாக வாசியுங்கள்.
- அக்கதையின் மூலம் வெளிக்கொணரப்படுவதையும் பாடசாலையில் காணப்படுபவையுமான சனநாயக இயல்புகளைக் குறிப்பிடுங்கள்.
- நீங்கள் மேலே குறிப்பிட்ட ஒவ்வோர் இயல்பும் வெளிக்கொணரப்படும் சந்தர்ப்பத்துக்காகக் கதையிலிருந்து உதாரணங்காட்டுக.
- அறிக்கைப்படுத்திய தகவல்களை வகுப்பில் முன்வையுங்கள்.

**இணைப்பு 3**

**செயற்பாட்டுப்பத்திரம் (குழு இல. 03, 04 இற்காக)**

**"எமது விருப்பம் நிறைவேறிய நாள்"**

ஆகஸ்ட் விடுமுறைக் காலத்தில் ஒரு சுற்றுப்பயணம் போவோம் என அப்பா வருடத் தொடக்கதிலேயே கூறிவைத்திருந்தார். ஆகஸ்ட் விடுமுறையும் நெருங்கிக் கொண்டிருந்தது. வழமைபோன்று ஒரு நான் இரவு உணவு உண்பதற்காக அப்பாவும் பாட்டனாரும் அண்ணனும் தம்பியும் தாரணியும் அமர்ந்திருந்தனர். அம்மா உணவு பரிமாறினார். அனைவரும் உண்டு முடித்த பின்பு தாரணி சுற்றுப்பயண விடயத்தை அப்பாவுக்கு ஞாபக மூட்டினார்.

"அப்பா, ... ஆகஸ்ட் விடுமுறையில் சுற்றுப் பயணம் கூட்டிப்போவதாகக் கூறினீர்கள் அல்லவா?"

"ஆமாம் ... " அப்பா பதிலளித்தார்.

"எங்கே அப்பா நாங்கள் போகப் போகிறோம்"

"அனுராதபுரிக்கு நாங்கள் போவோமா?" அப்பா கேட்டார்.

தாரணி மகிழ்ச்சியடைந்தாள்.

"யாள விலங்குகள் சரணாயத்தைப் பார்க்கப் போவோம் அப்பா. பிராணிகளையும் பார்க்கலாம், பொழுதும் போக்கலாம்" தாரணியின் அண்ணன் கருத்துத் தெரிவித்தான்.

"நாங்கள் அனுராதபுரத்துக்குப் போவோம் அப்பா! நாங்கள் அங்கு போனதே கிடையாது. வரலாறு பாடத்தில் படிக்கும் பல இடங்கள் அனுராதபுரத்தில் தான் உள்ளது என ரீச்சர் சொன்னார் அப்பா எனக்கும் அந்த இடங்களைப் பார்க்கப்போக ஆசையாக இருக்கிறது அப்பா"

தாரணியின் தம்பி தமது தேவைகளையும் ஆசைகளையும் தெரிவித்தான்.

"தம்பியின் கருத்தைத் தாரணியும் ஏற்றுக்கொண்டார்

"அனுராதபுரத்துக்கும் போவது நல்லது" அம்மாவும் கருத்துத் தெரிவித்தார்.

"அனுராதபுரத்துக்கு நான் பல தடவை போயிருக்கிறேன் மீண்டும் அங்கு போவதில் அர்ததமில்லை நான் பெரியம்மா வீட்டுக்குப் போய் அங்கு தங்கி இருக்கிறன்" அண்ணண் கூறினான்.

அப்பா அனைவரையும் புன்னகையடன் நோக்கினார். பின் பேசத்தொடங்கினார்.

"மகன் ... நான் சொல்வதைக் கொஞ்சம் கேளுங்கள். எல்லோரும் அனுராதபுரத்துக்குப் போவதை விரும்புகிறார்கள். தம்பிக்கும் தங்கைக்கும் அது பாடசாலை வேலைகளுக்குப் பெரிதும் உதவும் அதனால் இந்த தடவை நாம் அனுராதபுரத்துக்குப் போவோம். அடுத்த விடுமுறை காலத்தில் யாள விலங்குகள் சரணாலயத்துக்குப் போவோம் ... சரிதானா"

அண்ணன் எதிரிப்புத் தெரிவிக்கவில்லை.

பயண ஒழுங்குகள் பற்றி அனைவரும் கூடிக் கலந்துரையாடித் தீர்மானித்துக் கொண்டனர். அண்ணன் மாத்திரம் அமைதியாக இருந்தான்.

"மகன் ... இந்த விடுமுறை நாம் அனுராதபுரத்துக்குப் போவோம் ... அடுத்த விடுமுறை காலத்தில் யாள சரணாலயத்துக்குப் போவோம் ..." தாயார் மகனைப் பார்த்துக் கேட்டார்.

எல்லோரும் அண்ணனின் முகத்தைப் பார்த்தனர்.

அனைவரதும் வேண்டுகோளை அண்ணன் ஏற்றுக்கொண்டான். அனுராதபுரம் போக விருப்பம் தெரிவித்தான்.

எல்லோரதும் விருப்பம் நிறைவேறியது அனைவரும் மகிழ்ச்சியடைந்தனர்.

*****

**இணைப்பு 4**

**செயற்பாட்டுப்பத்திரம் (குழு இல. 01, 02 இற்காக)**

**"ஒத்துழைத்துச் செயற்படுவோம்"**

அன்று காலையில் வழமைபோன்று வகுப்புப் பொறுப்பாசிரியை வகுப்பறைக்கு வந்தார். மாணவர் அனைவரும் வணக்கந்தெரிவித்து அமர்ந்தனர். பின்னர் வகுப்புத் தலைவர் எழுந்து, ஒரு வேண்டுகோளை முன்வைத்தார்.

''எங்கள் வகுப்பைச் சூழவுள்ள நிலப்பகுதி அலங்கோலமாக இருக்கிறது ரீச்சர். நாங்கள் அதனை அழகுபடுத்துவது நல்லது அல்லவா''

வகுப்புத் தலைவரின் யோசனையை வகுப்பாசிரியர் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார்.

வகுப்பு மாணவர்கள் அனைவரும் அக்கருத்தை ஆமோதித்தனர்.

சரி, நாங்கள் வகுப்புச் சூழலை அழகுபடுத்துவோம். அனைவரும் சேர்ந்து கலந்துரையாடி அதற்கான ஒரு திட்டத்தைத் தயாரித்துக்கொள்ளுங்கள். ஆசிரியை கூறினார்.

''வகுப்பறையை எப்படி அழகுபடுத்த எதிர்பார்க்கிறீர்கள்'' வகுப்புத் தலைவர் மாணவர்களிடம் வினவினர்.

''மழைநீரில் மண் கழுவிச் செல்லப்படும் மேடான இடத்தில் ஒரு சிறு கல்வேலி அமைப்போம்''

''ஆமாம் .. கல்வேலி அமைத்து மண்நிரப்பவோம்'' வகுப்பு மாணவர்கள் அக்கருத்தை ஏற்றுக் கொண்டனர்.

''சரி, நிலத்தை அழகுபடுத்த தாவரங்கள் வளர்க்க வேண்டுமல்லவா? அதற்கு என்ன செய்யலாம்?'' வகுப்புத் தலைவர் மீண்டும் வினவினான்.

''பூச்செடிகள் வளர்ப்போம் அழகாக இருக்கும்'' ஒரு சிலர் கூறினர்.

''காய்கறிகள் வளர்ப்போம். அழகாவும் இருக்கும், உணவாகவும் பயன்படும்'' இன்னும் சிலர் கூறினர்.

''பழமரங்கள் வளர்க்கலாம். அழகும், நிழலும் கிடைக்கும், பழம் உண்ணலாம்'' மேலும் சிலர் கூறினர்.

பலரும் தத்தமது கருத்துக்களைக் கூறினர்.

இறுதியில் வகுப்புத் தலைவரும் பின்வருமாறு கருத்துத் தெரிவித்தனர்.

''நல்லது, உங்களது யோசனைகளுக்கு நன்றி கூறினார். நாங்கள் முற்றத்தில் ஒரு மாங்கன்று நாட்டுவோம். அது வளர்ந்து நிழல்தரும். சுற்றிவரப் பூச்செடிகள் வளர்ப்போம். அழகாக இருக்கும்''

''நடுப்பகுதியில் பாத்தியமைத்துக் காய்கறிச் செடிகள் நடுவோம்''

''அது ஒரு நல்ல யோசனை'' ஆசிரியையும் கலந்துரையாடலில் கலந்து கொண்டார்.

சரி நாட்டுவதற்குக் கன்றுகள் எப்படிப் பெறுவது?

''நான் மிளகாய்க் கன்றுகள் கொண்டு வருகிறேன்'' ஒருவர் கூறினர்.

''நான் மாங்கன்று கொண்டு வருகிறேன்'' இன்னுமொருவர் கூறினர்.

''வெண்டிக்காய் வித்துப் பைக்கற் ஒன்று நான் கொண்டு வருகிறேன்'' இன்னுமொருவர் கூறினர்.

மேலும் பல மாணவர்கள் பூங்கன்று வித்துக்கள் கொண்டு வருவதாகக் கூறினர்.

''சரி அடுத்த வாரம் வேலைகளைத் தொடங்குவோம்''

அனைவரும் அக்கருத்தை ஏற்றுக்கொண்டனர்.

*****

## 8.3 பல்பண்பாட்டு மக்கட் சமூகம்

**அறிமுகம்**

சமகால மக்கட் சமூகமானது வெவ்வேறு இனங்களைச் சேர்ந்த வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றுகின்ற, வெவ்வேறு மொழிகளில் பேசுகின்றன. வெவ்வேறு வழக்காறுகள், பாரம்பரியங்களை மதிக்கின்ற உறுப்பினர்களைக் கொண்டமைந்துள்ளது. அவ்வாறான மக்கட் சமூகம், பல் - பண்பாட்டு மக்கள் சமூகம் எனப்படும்.

பரஸ்பரம் ஒவ்வொருவரதும் உரிமைகளை மதித்தல், சமத்துவக் கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு செயற்படல், சகவாழ்வு வாழ்தல், ஏனையோரின் பண்பாடுகளை மதித்தல், தமது பண்பாட்டின் தனித்துவத்தைப் பாதுகாத்தல் போன்றவை பல்பண்பாட்டுச் சமூகத்தின் சீரான இருப்பை உறுதிப்படுத்துவதற்காகத் தனியாளிடத்தே விருத்தி செய்து கொள்ள வேண்டிய இயல்புகளுக்கான சில உதாரணங்களாகும். மாணவ-மாணவியரிடத்தே இந்த இயல்புகள் விருத்தியடையத்தக்க வகையில் இந்த அத்தியாயத்தைக் கற்பதற்குச் சந்தர்ப்பமளிப்பதே இங்கு எதிர்பார்க்கப்படுவதாகும்.

**தேர்ச்சி 8.3** :- பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தில் அமைதி நேயமான நற்பிரசையாக வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.3.1 பல் - பண்பாட்டு மக்கள் சமூகமொன்றின் இயல்பு களைப் பகுத்தாய்வார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- பல் - பண்பாட்டு மக்கட் சமூகம் என்பதை வரைவிலக்கணப் படுத்துவார்.
- பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தின் அடிப்படை இயல்புகளை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- பல்-பண்பாட்டு மக்கட் சமூகம் - அறிமுகம்
    - யாதேனும் மக்கட் சமூகத்தில் சமயம், மொழி, இனம், கலைகள், நிறம், நம்பிக்கைகள், வழிபாடுகள் என்றவாறாக பல்வகையை காணப்படுமாயின் அச்சமூகம் பல்பண்பாட்டுச் சமூகம் எனப்படும்.
    - சமகாலத்தில் உல்லாசப் பயணத்துறை, தொழில், கல்வி நடவடிக்கைகள், வணிகம், அபிவிருத்தி நடவடிக்கைகள் போன்றவை காரணமாக இடம்பெறம் புலம்பெயர்வுகள் காரணமாக பண்பாட்டுப் பல்வகைமையானது மேன்மேலும் சிக்கார்ந்தது செல்வதைக் காண முடிகின்றது.
    - பல் பண்பாட்டுச் சமூகமொன்றின் இயல்புகள்
        - சமூகம் பல இன மக்களைக் கொண்டிருத்தல்
        - பல சமயங்கள் காணப்படுதல்
        - பல மொழிகள் பயன்படுத்தப்படுதல்
        - பல்வேறு பழக்கவழக்கங்களும் வழக்காறுகளும் சமூகத்தில் காணப்படுதல்
        - பல்வேறு பண்பாட்டு அருங்செல்வங்கள்/ பொக்கிசங்கள் காணப்படுதல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- வெவ்வேறு பண்பாடுகளின் இயல்புகளை உள்ளடக்கிய படங்கள்/ சித்திரங்கள்/ ஒளிப்படங்கள்
- இலங்கையின் இனவாரியான, சமயவாரியான சனத்தொகைக் கட்டமைப்பைக் காட்டும் வரைபுகள்
- வெவ்வேறு பண்பாடுகளைச் சேர்நத சமயக் குறியீடு இலட்சினைகள்/ சமய வழிபாட்டுத்தலங்கள் அடங்கியுள்ள சுவரொட்டிகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- பல்பண்பாட்டுச் சமூகமொன்றில் வெவ்வேறு சிறப்பியல்புகளைக் காட்டும் சித்திரங்கள், சுவரொட்டிகள், வரைபுகள் போன்றவற்றை ஆக்குவதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக. அவற்றை வகுப்பில் முன்வைத்துக் கலந்துரையாடச் சந்தர்ப்பமளித்து, வெளிப்படுத்தப்படும் கருத்துக்களைக் கவனத்திற்கொண்டு, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி மட்டம்** :- **8.3.2 பண்பாட்டுப் பல்வகைமையுள் ஒற்றுமையாகவும் சகவாழ்வுடனும் செயற்படுவார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- இலங்கை நாடு பல் - பண்பாட்டு, மக்கள் சமூகத்தைக் கொண்டது என்பதை உதாரணங்காட்டி விளக்குவார்.
- இலங்கை மக்கட் சமூகத்தில் காணப்படும் பல்வேறு பண்பாடு களைச் சேர்ந்த பண்பாட்டு அம்சங்கள் தொடர்பான விபரங்களை முன்வைப்பார்.
- பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் சகவாழ்வு வாழ்வதன் முக்கியத்துத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- வேறு நாடுகளின் பல்பண்பாட்டு இயல்புகள் தொடர்பான விவரங்களை முன்வைப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- இலங்கையின் பண்பாட்டுப் பல்வகைமை
  - பல்வேறு இனங்கள், சோனகரும் மலாயரும்
    உதாரணம்: சிங்களவர், தமிழர், இஸ்லாமியர், பறங்கியர், வேறு இனங்கள்
  - வெவ்வேறு மொழிகள் : தமிழ், ஆங்கிலம், சிங்களம்
  - வெவ்வேறு சமயங்கள்: பௌத்தம், இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம், கிறித்தவம்
  - பல்வேறு பண்பாட்டுப் பாரம்பரியங்கள்
    உதாரணம்:
    - அந்தந்த இன மக்கள் சார்ந்த வழக்காறுகள்
      உதாரணம்: பிறப்புக்கு முன்னர் தொடக்கம் பிறப்புக்கும் பின்னர் வரையிலால் பின்பற்றப்படும் வழக்காறுகள்
  - வெவ்வேறு சமயங்கள் சார்ந்த வழக்காறுகள், பாரம்பரியங்கள், சமயங்கள் சார்ந்த உற்சவங்களும் அவற்றின் முக்கியத்துவமும்
    உதாரணம்:
    பௌத்தம் - வெசாக் பண்டிகை, பொசான் பண்டிகை
    இந்து - தைப்பொங்கல் பண்டிகை, தீபாவளிப் பண்டிகை
    கிறிஸ்தவம் - நத்தார் உற்சவம், பெரிய வெள்ளி உற்சவம்
    இஸ்லாம் - ஹஜ்ஜுப் பெருநாள், நோன்புப் பெருநாள் (றமழான்)
  - இலங்கை மக்கட் சமூகத்தில் அந்தந்தப் பண்பாட்டின் தனித்தவம் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல்
    - வெவ்வேறு பண்பாடுகளை மதித்தல்
  - பல்வகைமையின் ஊடாக ஒற்றுமையாகவும் சகவாழ்வுடனும் செயற்படுதல்
    உதாரணம்:
    - ஒரு குறித்த பிரதேசத்தில் வெவ்வேறு இனமக்களும் வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றும் மக்களும் வாழ்தல்
  - வேறு பல நாடுகளில் பல்பண்பாட்டுச் கழகங்கள் காணப்படுகின்றமை
    உதாரணம்: இந்தியா, கனடா, ஐக்கிய அமெரிக்கக் குடியரசு

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**
- சகல பண்பாடுகளிலும் காணப்படும் இயல்புகளை உள்ளடக்கிய படம்
- இலங்கைப் பண்பாட்டின் பல்வகைமையைக் காட்டும் ஒளிப்படங்கள்
- வெவ்வேறு மக்கள் இனங்களுடன் இணைந்த வழக்காறுகளைக் காட்டும் படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**
- இலங்கை ஒரு பல்பண்பாட்டுச் சமூகம் ஆகும் என்பதையும் அவ்வாறான ஒரு சமூகத்தில் சீராக இருப்பை உறுதிப்படுத்தும் தேர்ச்சிகளை மாணவரிடத்தே வளர்ச்சியடைந்துள்ளமையை அளந்தறிவதற்குப் பொருத்தமான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி மட்டம்** :- **8.3.3 சுய பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணி தேசிய ஒற்றுமைக்கும் பேண்தகு சமாதானத்தைக் கட்டியெழுப்புவதற்கும் பங்களிப்பார்.**

**பாடவேளைகள்** :- 04

**கற்றற் பேறுகள்** :-
- சமாதான நேயமான மக்கட் சமூகமொன்றின் நல்ல இருப்புக்கு, பரஸ்பர புரிந்துணர்வு முக்கியமானது என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.
- பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தின் பண்பாட்டு ஒன்றிணைப்புக் காக மேற்கொள்ளத் தக்க நடவடிக்கைகளை விளக்குவார்.
- தமது பண்பாட்டுத் தனித்துவத்தைப் பேணியவாறு ஏனைய பண்பாடுகளை மதித்து வாழ்வதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தில் பேண்தகு சமாதானத்தை கட்டியெழுப்புவதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.
- பேண்தகு சமாதானம் தேசிய அபிவிருத்திக்குக் காரணமாகும் விதத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- பரஸ்பர புரிந்துணர்வு காரணமாக, முரண்பாடுகள் இயன்றளவு குறைவதால், வெவ்வேறு இன மக்களிடையே ஒற்றுமை வலுப்பெறுதல்.
  - வெவ்வேறு பண்பாடுகளுக்கு இடையே பரஸ்பரம் அறிவூட்டமும் நட்பும்
- பண்பாட்டுப் பல்வகைமையுள் நாட்டை அபிவிருத்தி செய்வதற்காக ஒற்றுமையாக ஐக்கியப்பாட்டுச் செயற்படுதல்
  உதாரணம்:
  - ஒவ்வொரு பண்பாட்டுக் குழுவுக்குமுரிய மக்கள் நாட்டைக் கட்டியெழுப்புதல் (Nation Building) எனும் எதிர்பார்ப்புடன் நாட்டின் அபிவிருத்திக்காக உழைப்பை அர்ப்பணித்தல்.
- பண்பாட்டு ஒன்றிணைப்பை ஏற்படுத்துவதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்
  உதாரணம்:
  - வெவ்வேறு பண்பாடுகள் தொடர்பான அறிவை வளர்த்தல்
  - வெவ்வேறு மொழிகளைப் பயன்படுத்தும் ஆற்றலை வளர்த்தல்
  - பண்பாட்டுப் பரிமாற்ற வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

- விளைதிறனான பொருளாதார நடவடிக்கைகளில் ஈடுபட்டு நாட்டின் அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்தல்
    - இன, மத, மொழி பேதங்களின்றி வெவ்வேறு தொழில்களில் ஈடுபடல் நாடடின் அபிவிருத்திக்காகப் பங்களிப்புச் செய்தல்.
- பண்பாட்டுப் பல்வகைமையை மதித்து தமது கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றல்

  உதாரணம்: - ஏனைய பண்பாடுகளை மதித்தல்
  - பண்பாட்டுப் பல்வகைமையை மதித்தல்
- பல்பண்பாட்டு மக்கட் சமூகத்தில் பேண்தகு நிலையில் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல்
    - சமகாலத்தில் பல நாடுகளில் பல்பண்பாட்டுச் சமூகங்கள் காணப்படுகின்றமை
    - ஏனைய பண்பாடுகள் தொடர்பான புரிந்துணர்வுடனும் மரியாதையுடனும் செயற்படுதலானது பேண்தகு சமாதானத்துக்குப் பங்களிப்புச் செய்யும்.
    - பரஸ்பரம் ஒற்றுமை, ஒத்துழைப்பு, சகோதரத்துவம் போன்றவை பேண்தகு சமாதானம் கட்டியெழுப்பப்படுவதற்கு ஏதுவாகும் விதம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**
- செய்தித்தாள் அறிக்கைகள்
- சஞ்சிகைகள்
- வளவாளர்களின் உரைகள் (பல்பண்பாட்டுச் சமூகத்தின் சீரான இருப்புக்கு பரஸ்பர நல்லிணக்கதின் முக்கியத்துவம் பற்றிய)

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**
- உரிய கற்றற் பேறுகளை மாணவரிடத்தே அடைத்துள்ளனவா என்பதை அளந்தறிவதற்காக நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீடு செய்க.

## எடுத்துக்காட்டுச் செயற்பாடு 8.3

**தேர்ச்சி** :- பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தில் அமைதி நேயமான நற்பிரசையாக வாழ்வார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.3.1 பல் - பண்பாட்டு மக்கள் சமூகமொன்றின் இயல்பு களைப் பகுத்தாய்வார்.**

**கற்றற் பேறுகள்** :-

- பல் - பண்பாட்டு மக்கட் சமூகம் என்பதை வரைவிலக்கணப் படுத்துவார்.
- பல் - பண்பாட்டு மக்கட் சமூகத்தின் அடிப்படை இயல்புகளை விளக்குவார்.

**செயற்பாடு** :- பல்வகைமையுள் ஐக்கியத்தைக் காண்போம்

**நேரம்** :- 40 நிமிடம்

**தரவுள்ளீடுகள்** :-

- இணைப்பு 8.3.1 இலங்கையின் இனங்களின்படி சனத்தொகை சதவீதம்
- இணைப்பு 8.3.2 இலங்கையின் சமயங்களின்படி சனத்தொகைச் சதவீதம்
- செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.1
  செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.2
  செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.3
  செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.4
  செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.5

**கற்றல் கற்பித்தற் செயன்முறை**

படிமுறை I :

- இலங்கையில் இனங்கள் மற்றும் சமயங்களின்படி சனத்தொகை சதவீதங்களைக் காட்டும் இணைப்பு 8.3.1.1, இணைப்பு 8.3.1.2 ஆகியவற்றைக் காட்சிப்படுத்தி, பாடத்தை அணுகுக. பல்பண்பாட்டுச் சமூகத்தின் தன்மையை விளக்கி, மாணவரின் கவனத்தை அதன் மீது ஈர்க்குக.

(10 நிமிடம்)

**இணைப்பு 1**

**இனங்களின்படி இலங்கையின் சனத்தொகைச் சதவீதம்**

- சிங்களவர் 74%
- இலங்கைத் தமிழர் 12.6%
- இந்தியத்தமிழர் 5.5%
- சோனகர் 7.1%
- ஏனையோர் 0.8%

**சமயங்களின்படி இலங்கையின் சனத்தொகைச் சதவீதம்**

- பௌத்தர் 73.7%
- இந்துக்கள் 10.9%
- கிறித்தவம் 6.2%
- முஸ்லிம்கள் 7.6%
- ஏனையோர் 1.6%

**செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.1 குழு 01**

- இலங்கை வெவ்வேறு இனங்களைக் கொண்ட ஒரு நாடு என்பதை ஆக்கபூர்வமாக முன்வைப்பதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.

**செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.2 குழு 02**

- இலங்கை வெவ்வேறு சமயங்களைப் பின்பற்றும் மக்கட் பிரிவினர்களைக் கொண்ட ஒரு நாடு என்பதை ஆக்கபூர்வமாக முன்வைப்பதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.

**செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.3 குழு 03**

- இலங்கை வெவ்வேறு மொழி பேசும் மக்கட் பிரிவினரைக் கொண்ட ஒரு நாடு என்பதை ஆக்கபூர்வமாக முன்வைப்பதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.

**செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.4 குழு 04**

- இலங்கை பல்வேறு பாரம்பரியங்களையும் வழக்காறுகளை மதிக்கும் பின்பற்றும் ஒரு நாடு என்பதை ஆக்கபூர்வமாக முன்வைப்பதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.

**செயற்பாட்டுப்பத்திரம் 8.3.1.5 குழு 05**

- பல்வகைமைச் சமூகமான இலங்கையில் அனைவரும் ஒற்றுமையாகச் செயற்படுவதன் அவசியத்தை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுவதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.

## 8.4 சமகாலப் பிரச்சினைகள்

**அறிமுகம்**

மக்கட் சமூகத்தின் பாதுகாப்பான இருப்புக்குப் பாதகமானவையாகக் காணப்படுபவையாக இயற்கை அனர்த்தங்கள், விபத்துக்கள், பாதகமான வாழ்க்கைப் பழக்கங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். புவிச்சூழல் தொகுதியில் அனர்த்தங்கள் நிகழுவது ஒரு பொதுவான தோற்றப்பாடாவதோடு அது இயற்கையான சூழல் தொகுதிகளின் சமனிலைக்குக் காரணமாக அமையும். எனினும் மனிதனின் தான்தோன்றித்தனமான செயற்பாடுகள் காரணமாக அவ்வாறான அனர்த்தங்கள் தற்காலத்தில் உக்கிரமடைத்துள்ளமையானது சூழலினதும் கூடவே மனிதனினதும் இருப்புக்குச் சவாலாக அமைந்துள்ளது.

இந்த அத்தியாயத்தில் விபத்துக்கள் மற்றும் அனர்த்தங்கள் ஏற்படுவதில் பங்களிப்புச் செய்யும் காரணிகளை இயன்ற அளவு குறைப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள், அதற்காக உதவி பெறத்தக்க நிறுவனங்கள், அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவம், தனது ஏனையோரதும் உயிரைப் பாதுகாத்துக் கொள்ளல், சமயோசிதமாகச் செயற்படல், அனர்த்த முகாமைத்துவம் ஆகிய அம்சங்களின் பால் விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. அத்தோடு, பாதகமான பழக்கங்கள், மருந்துப் பயன்பாடு, வீதி விபத்துக்களைத் தவிர்த்தல், இரசாயன விபத்துக்களைத் தவிர்த்தல் ஆகியன தொடர்பாகவும் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் தாக்குப்பிடிக்கத்தக்கதான வாழ்க்கைக் கோலத்துக்கு இசைவடைதல், பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வதற்குத் தேவையான அறிவு, மனப்பாங்குகள், திறன்களை எதிர்காலச் சந்ததியினரிடத்தே கட்டியெழுப்பி, பாதுகாப்பான மக்கட் சமூகமொன்றினைக் கட்டியெழுப்புவதற்குத் தேவையான பின்னணியை உருவாக்குவதே இந்த அத்தியாயம் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும்.

**தேர்ச்சி 8.4** :- மக்கட் சமூகத்தின் பாதுகாப்பான இருப்புக்காகச் செயலூக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.4.1 விபத்துக்கள், அனர்த்தங்களை இனங்கண்டு அவற்றை இழிவாக்குவதற்காகச் செயற்படுவார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- இடர்கள், விபத்துக்களைப் பெயரிடுவார்.
- இடர்கள், விபத்துக்கள் ஏற்படுவதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை விளக்குவார்.
- இடர்கள், விபத்துக்கள் காரணமாக ஏற்படும் இழப்புக்களை இழிவாக்குவதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளைப் பிரேரிப்பார்.
- விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளை உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுவார்.
- இடர்கள், விபத்துக்களின்போது உதவி பெறத்தக்க நிறுவனங் களைப் பெயரிடுவார்.
- இடர்கள், விபத்துக்களின் போது உதவி வழங்கும் நிறுவனங்களால் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- இயற்கை அனர்த்தங்கள் மற்றும் மனித செயற்பாடுகள் காரணமாக ஏற்படும் விபத்துக்கள்
- இயற்கை அனர்த்தங்கள் - அறிமுகம்
  - புவியிலும் அதன் சுற்றுப்புறச் சூழலிலும் ஏற்படும் இயற்கையான நிபந்தனைகளின் அதீதத்தன்மைகள் காரணமாக ஏற்படும் பாதகமான நிலைமைகளே இயற்கை அனர்த்தங்களாகும் என எளிமையாகக் குறிப்பிடலாம்.
    உதாரணம்: நிலநடுக்கம்/ சுனாமி/ வெள்ளப்பெருக்கு/ சூறாவளி
    இயற்கை அனர்த்தங்கள் காரணமாக ஏற்படும் இழப்புக்கள்
    - உயிரிழப்புக்கள்
    - ஆதன இழப்புக்கள்
- இயற்கை அனர்த்தங்கள் ஏற்படுவதற்கும் அவற்றின் தாக்கம் உக்கிரமடைவதற்கும் ஏதுவாகும் மனிதச் செயற்பாடுகள்
  உதாரணம்:
  - காடழிப்பு
  - ஆறுகளில் மணல் அகழ்தல்
  - முருகைக்கற்பாறைகளை உடைத்தல்/ அகழ்தல்
  - சுரங்கமகழ்தல்
  - தாழ் நிலங்களை (முறைகேடாக) நிரப்புதல்
  - கடற்கரைகளில் மணல் அகழ்தல்
  - உக்கும் தன்மையற்ற பொருள்களை முறைகேடான வகையில் வெளியேற்றுதல்
- விபத்துக்கள், அனர்த்தங்கள் காரணமாக ஏற்படும் இழப்புக்களை இயன்ற அளவுக்குக் குறைப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள்
  - விபத்துக்கள், அனர்த்தங்கள் தொடர்பாக குறித்த நிறுவனங்கள் மூலம் செய்யப்படும் அறிவூட்டல்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துதலும் அவ்வாறு வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதலும்
  - விபத்துக்களைத் தவிர்த்தல் மற்றும் இழப்புக்களை இயன்ற அளவுக்குக் குறைப்பதற்காக, அது குறித்துச் செயற்படும் நிறுவனங்களுக்கு அறிவித்தல்
  - விபத்துக்கு ஆளானோரைக் காப்பாற்றுதல்
  - சரியான முறையில் முதலுதவி வழங்குதல்
  - விபத்துக்கு ஆளானோரை இயன்ற அளவு விரைவாக வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லல்
  - விபத்து/ அனர்த்தம் தொடர்பாக வைத்தியசாலைக்கும் பொலிஸ் பிரிவுக்கும் அறிவித்தல்
  - விபத்துக்கு உள்ளானோர் தொடர்பாக மனித நேயத்துடன் செயற்படல்
- விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள்
  - விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழத்தக்க விதம் தொடர்பாக அறிவூட்டம் பெறுதல்
  - குறித்த நிறுவனங்கள் மூலம் வழங்கப்படும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதல்
  - குறித்த நிறுவனங்களால் வழங்கப்படும் முன்னறிவிப்புகள் (முன்னெச்சரிக்கைகள்) தொடர்பாக நிதமும் கவனஞ் செலுத்துதல்
  - நாளாந்த வாழ்க்கையில் நிகழத்தக்க, இடம் சார்ந்த விபத்துக்கள் குறித்துக் கவனஞ் செலுத்திச் செயற்படல்
    உதாரணம்: - வீட்டின் மின் சாதனங்களைப் பயன்படுத்தல்/ கையாளல்
    - கவனயீனமாகச் செயற்படுவதைத் தவிர்த்தல்
    - பாதுகாப்பு ஒழுங்கு விதிகளைப் பின்பற்றுதல்

- குறித்த நிறுவனங்கள் தொடர்பாக அறிவூட்டம் பெறுதலும் அந்நிறுவனங்கள் வழங்கும் அறிவுறுத்தல்களைப் பின்பற்றுதலும்
- விபத்து/ அனர்த்த நிலைமைகளின் போது சேவை/ உதவி வழங்கும் நிறுவனங்கள்
  - வளிமண்டலவியல் திணைக்களம்
  - புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கமகழ்வுப் பணிமனை
  - வைத்தியசாலை
  - பொலிஸ்
  - தீயணைக்கும் படை/ தீயணைக்கும் அலகு
  - ஆபத்தான அவுடதங்கள் கட்டுப்பாட்டு நிறுவனம்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- இலங்கையில்/ ஏனைய நாடுகளில் நிகழ்ந்த இயற்கை அனர்த்தங்கள் மற்றும் அவை காரணமாக ஏற்பட்ட இழப்புக்களைக் காட்டும் செய்தித்தாள் அறிக்கைகள், ஒளிப்படங்கள், வீடியோக் காட்சிகள்
- மனிதனின் செயற்பாடுகள் காரணமாக உலகின் வெவ்வேறு நாடுகளில் இலங்கையில் நிகழ்ந்த அனர்த்தங்கள் மற்றும் அவை காரணமாக ஏற்பட்ட இழப்புக்களைக் காட்டும் செய்தித்தாள் அறிக்கைகள், ஒளிப்படங்கள், வீடியோக் காட்சிகள்
- வளி மண்டலவியல் திணைக்களம் புவிச்சரிதவியல் ஆய்வு மற்றும் சுரங்கமகழ்வுப் பணிமனை, பொலிஸ்துறை போன்ற நிறுவனங்கள் மூலம் விபத்துக்கள் தொடர்பான வெளியிடப்பட்டுள்ள அறிவித்தல்கள் அடங்கிய அறிக்கைகள், வீடியோக் காட்சிகள்
- விபத்துக்கள், அனர்த்தங்கள் போன்றவற்றின் போது வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் அவை தொடர்பான அதிகாரிகள், பொதுமக்கள் ஆற்றும் சேவைகளைக் காட்டும் செய்தித்தாள் அறிக்கைகள், ஒளிப்படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- ஒப்படைகள், குழுச் செயற்பாடுகள், தேடியாய்வுகள் போன்ற கற்றல் - கற்பித்தல் முறைகளின் கீழ் விடயங்களைக் கற்றாய வழிப்படுத்தி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.4.2 விபத்துக்கள், அனர்த்தங்களின்போது சமயோசிதமாகச் செயற்படுவார்.**

**பாடவேளைகள்** :- 01

**கற்றற் பேறுகள்** :-

- விபத்துக்கள், அனர்த்தங்களின்போது தனதும் ஏனையோரதும் உயிர்களைப் பாதுகாப்பதற்காகச் செயற்படுவதன் அவசியத்தை விளக்குவார்.
- விபத்துக்கள், அனர்த்தங்களின்போது சமயோசிதமாகச் செயற்படுவதன் அவசியத்தைக் கலந்துரையாடுவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழ்ந்துள்ள சந்தர்ப்பங்களில் சமயோசிதமாகவும் சுயபுத்தியுடனும் செயற்படுவதன் முக்கியத்துவம்
  உதாரணம்:
  - விபத்து நிகழ்ந்துள்ள இடத்தை ஆபத்தான வகையில் அணுகுவதைத் தவிர்த்தல், சாவதானமாகச் செயற்படுதல்
  - உதவி பெறுவதற்காக, குறித்த நிறுவனங்களுக்கு உடனடியாக அறிவித்தல்
  - விபத்துக்கு ஆளாகியுள்ளோரின் உயிரிழப்பதைத் தவிர்ப்பதற்காக இயலுமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளல்
  - விபத்துக்கு ஆளாகியுள்ளோருக்கு சரியானவாறு முதலுதவி வழங்குதல்
  - உணர்ச்சி வசப்பட்டுள்ள நிலையில் செயற்படுவதைத் தவிர்த்தல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழ்ந்த சந்தர்ப்பங்களில் வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் அவை தொடர்பான அதிகாரிகள்/ தனியாட்கள், விபத்துக்கு ஆளாகியோரைக் காப்பாற்றுவதிலும்/ நிவாரணமளிப்பதிலும் ஈடுபடுவதைக் காட்டும் ஒளிப்படங்கள்/ செய்தித்தாள் அறிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- மாணவர் கற்றாய்ந்த பாடவிடயங்களின் மூலம் கற்றற்பேறுகள் அடையப் பட்டுள்ளமையை அளந்தறிவதற்குப் பொருத்தமான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம் :- 8.4.3 அனர்த்த முகாமை செய்வார்.**

**பாடவேளைகள்** :- 01

**கற்றற் பேறுகள்** :-

- விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழத்தக்க சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- விபத்துக்கள், அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகப் பொருத்தமான வழிவகைகளைப் பிரேரிப்பார்.
- குறித்த இடங்களில் நிகழத்தத்தக்க விபத்துக்கள் தவிர்ந்தவிடத்து வேறு விபத்துக்கள் நிகழத்தக்க சந்தர்ப்பங்களை இனங்கண்டு அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதன் அவசியத்தை விளக்குவார்.
- உணவு, மருந்துகள் ஆகியன காரணமாக நிகழத்தக்க விபத்துக்களை இனங்கண்டு, அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- விபத்துக்கள், அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு பாதகமான வாழ்க்கைப் பழக்கங்கள் காரணமாகின்றமையை உதாரணங்காட்டி விளக்குவார்.
- விபத்துக்கள், அனர்த்தங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்குச் சாதகமான வாழ்க்கைப் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வதை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழும் வாய்ப்புள்ள இடங்கள்
  உதாரணம்:
  - வீடு
  - சுற்றுப்புறச்சூழல்
  - பாடசாலை
  - வேலைத்தளங்கள்
  - பெருந்தெருக்கள்
  - நீர்நிலைகள் (கடல், நீராடல்)
- மேற்படி இடங்களில் விபத்துக்கள் நிகழக்கூடிய சந்தர்ப்பங்களையும் விபத்துக்கள் நிகழக்கூடிய வழிகளையும் இனங்காணல்.
- அவ்விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள்
  உதாரணம்:
  - வனவிலங்குகள்
  - நாய்
  - நச்சுப்பாம்புகள்
- இவ்வாறான விபத்துக்கள் நிகழக்கூடிய சந்தர்ப்பங்களை இனங்காணல்
- அவ்விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள்
- 
- உணவு, ஔசதங்கள் (மருந்துகள்) தொடர்பாக நிகழத்தக்க விபத்துக்கள்
  உதாரணம்:
  - உணவு நஞ்சாதல்
  - உணவு காரணமாக ஏற்படும் ஒவ்வாமைகள்
- அந்நிலைமைகள் ஏற்படுவதற்கான காரணங்களும் அந்நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளும்

- ஔசதங்கள் தொடர்பாக நிகழும் விபத்துக்களும் அனர்த்தங்களும்
  உதாரணம்:
  - அபாயகரமான ஔசதங்களின் பாவனை
  - ஔசதங்கள் நச்சாதல்
  - வைத்திய ஆலோசனையின்றி ஔசதங்கள் பயன்படுத்தல்
  - சரியான ஔசத ஊட்டை அனுசரிக்காது ஔசதங்களைப் பயன்படுத்துதல்
- ஔசதங்கள் சாராத விபத்துக்கள் நிகழுவதைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள்
- பாதகமான பழக்கங்கள் காரணமாக ஏற்படும் விபத்துக்களும் அனர்த்தங்களும்
  உதாரணம்:
  - மதுபானமருந்தி (மதுபோதையில்) வாகனமோட்டுதல்
  - மனவெழுச்சிகளை சாதகமானவாறு கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமை காரணமாக சண்டை சச்சரவுகள் ஏற்படல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- வீட்டில்/ வேலைத்தளத்தில்/ பாடசாலையில்/ சுற்றுப்புறத்தில் நிகழ்ந்த விபத்துக்கள், அனர்த்தங்கள் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய அறிக்கைகள், ஒளிப்படங்கள், வீடியோக் காட்சிகள்
- வனவிலங்குகள், நாய், பாம்பு போன்றவை காரணமாக நிகழ்ந்த விபத்துக்கள் தொடர்பான விடயங்களடங்கிய செய்தித்தாள் அறிக்கைகள்/ ஒளிப்படங்கள்
- உணவுகள், மருந்துகள் போன்றவை காரணமாக நிகழ்ந்த விபத்துக்கள் தொடர்பான விவரங்களடங்கிய செய்தித்தாள் அறிக்கைகள்/ ஒளிப்படங்கள்
- மதுபானம் அருந்துதல் போன்ற தீங்கான பழக்கங்கள் காரணமாக நிகழும் விபத்துக்கள் தொடர்பான அறிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- பாடத்துக்குரிய பாடவிடயங்கள் ஒப்படைகள்/ தேடியறிதல்கள்/ விவகார ஆய்வு (Case Study) போன்ற கற்றல் - கற்பித்தல் முறைகள் மூலம் பாடவிடயங்களைக் கற்றாயச் சந்தர்ப்பமளித்து, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.4.4 வீதி ஒழுங்கு விதிகளை அனுசரித்து, வீதி விபத்துக்களை இழிவாக்கச் செயற்படுவார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- தற்காலத்தில் நிகழும் வீதி விபத்துக்கள், அனர்த்தங்கள் தொடர்பான தகவல்களை முன்வைப்பார்.
- வீதி விபத்துக்கள் நிகழுவதற்கான காரணங்களை விளக்குவார்.
- விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகப் பின்பற்ற வேண்டிய வழிவகைகளை உதாரணங்கள் மூலம் எடுத்துக் காட்டுவார்.
- வீதிச் சட்டதிட்டங்களை குறியீடுகள், சமிக்ஞைகள் மூலம் விளக்குவார்.
- புகையிரத விபத்துக்களுக்கான காரணங்களை விளக்குவார்.
- புகையிரத விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகப் பின்பற்ற வேண்டிய வழிவகைகளை எடுத்துக் காட்டுவார்.
- வீதி விபத்துக்கள், புகையிரத விபத்துக்களின்போது செயற்பட வேண்டிய விதத்தை விவரிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- வீதி விபத்துக்கள் - அறிமுகம்
  - வாகன விபத்துக்கள் காரணமாக ஏற்படும் இழப்புக்கள்
    (சமகாலத் தகவல்களின் துணையுடன் வாகன விபத்துக்கள் காரணமாக நாளாந்தம் ஏற்படும் உயிரிழப்புக்கள் மற்றும் அவற்றின் விளைவுகளை எடுத்துக்காட்டி, விபத்துக்கள் தொடர்பாக தற்கால நிலைமை குறித்து மாணவர்க்கு அறிவூட்டம் செய்வார்.)

- வீதி விபத்துக்களுக்கு ஏதுவாகும் காரணங்கள்
  - சாரதிகள் விடும் தவறுகள் - பாதசாரிகள் விடும் தவறுகள்
  - வீதிகளின் பௌதிகநிலை - வாகனங்களின் நிலை

  மேற்படி காரணங்களை உதாரணங்காட்டி விளக்குக.

- வீதி விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள்
  - வீதி ஒழுங்குவிதிகளைச் சரியாக அனுசரித்தல்
  - சாரதிகளுக்கும் பயணிகள் - பாதசாரிகளுக்கும் அறிவூட்டம் செய்தல்
  - வீதிகளைச் சீராகப் பராமரித்தல்
  - சாரதிப் பயிற்சி வேலைத்திட்டத்தை முறைமைப்படுத்துதல்
  - ஓட்டத்துக்குப் பொருத்தமற்ற வாகனங்களை நீக்குதல்
  - வாகன விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக சாரதிகளின் விசேட கவனத்தை ஈர்ப்பதற்கான வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்

- வீதி விபத்து நிகழ்ந்துள்ள சந்தர்ப்பத்தில் செயற்பட வேண்டிய விதம்
  - சாரதி செயற்பட வேண்டிய விதம்
  - பொதுமக்கள் செயற்பட வேண்டிய விதம்
  - பொலிசு துறையினர் செயற்பட வேண்டிய விதம்

- புகையிரத விபத்துக்கள்

  புகையிரத விபத்துக்களுக்குக் காரணங்கள்
  - புகையிரதப் பாதையில் (தண்டவாளத்தில்) பாதசாரிகள் பயணித்தல் விபத்துக்கள் நிகழக் காரணமாகும்
  - புகையிரக் கடவைகளில் கவனயீனமாக/ வீதிச் சமிக்ஞைகளைப் புறக்கணித்து வாகனமோட்டுதல்/ பயணித்தல்
  - புகையிரதப் பாதைச் சமிக்ஞைகள் வீதிச் சமிக்ஞைகளில் ஏற்படும் கோளாறுகள்
- புகையிரத விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள்
  - மிதிபலகையில் பயணஞ் செய்வதைத் தவிர்த்தல்
  - புகையிரதப் பாதையில் கால்நடையாக செல்வதைத் தவிர்த்தல்
- புகையிரத விபத்து நிகழ்ந்துள்ள போது செயற்பட வேண்டிய விதம்

  உதாரணம்: காயமுற்றோரை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- வீதி விபத்துக்கள், புகையிரத விபத்துக்கள் மற்றும் அவை காரணமாக ஏற்பட்ட இழப்புக்களைக் காட்டும் ஒளிப்படங்கள், செய்தித்தாள் அறிக்கைகள், வீடியோக் காட்சிகள்
- வீதிப்போக்குவரத்துச் சைகைகளைக் காட்டும் படங்கள்
- வீதி விபத்துக்கள், புகையிரத விபத்துக்கள் நிகழ்ந்துள்ள சந்தர்ப்பங்களில் வெவ்வேறு நிறுவனங்கள் மற்றும் தனியாள்கள், விபத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு செயல் ரீதியில் உதவி செய்த சந்தர்ப்பங்களைக் காட்டும் ஒளிப்படங்கள், செய்தித்தாள் அறிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- செயற்பாட்டுக் கற்றல் முறையில், குறித்த பாடவிடயங்களைக் கற்றாய்வதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளித்து, பொருத்தமான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.4.5 இரசாயனப் பொருட் பயன்பாடு காரணமாக நிகழும் விபத்துக்களை இழிவாக்குவதற்குப் பங்களிப்புச் செய்வார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- இரசாயனப் பொருட் பயன்பாடு காரணமாக ஏற்படத்தக்க விபத்துக்களை விளக்குவார்.
- இரசாயனப் பொருள் சார்ந்த விபத்தின்போது எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை விபரிப்பார்.
- இரசாயனப்பொருள்கள் சார்ந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகளை எடுத்துக்காட்டுவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாக நிகழும் விபத்துக்கள்
- இரசாயனப் பதார்த்தங்கள் பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள்
  - பூச்சிகளை ஒழிப்பதற்காக
  - உடனலப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக
  - விவசாய நடவடிக்கைகளுக்காக
  - வீட்டுத்தோட்டச் செய்கைக்காக
  - தொழிற்சாலைகளில் மூலப்பொருள்களாக
- இரசாயனப் பதார்த்தங்கள் காரணமாக விபத்துக்கள் நிகழத்தக்க சந்தர்ப்பங்கள்
  - பாதுகாப்பற்றவாறு களஞ்சியப்படுத்தல் காரணமாக
    உணவுப்பொருள்களுடன் களஞ்சியப்படுத்தல் காரணமாக
  - பெயர்ச்சுட்டிகள் சரியாகப் புலனாகாதவாறு களஞ்சியப்படுத்தல்
  - சிறுவர்களின் கைக்கெட்டக் கூடியதாகக் களஞ்சியப்படுத்தல்
  - பயன்படுத்தல் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைச் சரியாகப் பின்பற்றாமை
  - விதந்துரைக்கப்பட்ட சரியான செறிவில் பயன்படுத்தாமை
  - பாவனையின் பின்னர் எஞ்சியுள்ளவற்றை நீர்நிலைகளில் சேகரித்தல்/ வெறும் போத்தல்கள்/ பாத்திரங்களை நீரில் இடல்
- இரசாயனப் பதார்த்தங்கள் தொடர்பான விபத்து நிகழ்ந்துள்ள சந்தர்ப்பத்தில் கையாளத்தக்க நடவடிக்கைகள்
  - விபத்துக்கான காரணத்தைச் சரியாக இனங்காணல்
  - பொருத்தமானவாறு முதலுதவி வழங்குதல்
  - இயன்ற அளவு விரைவாக வைத்திய உதவியை நாடுதல்
  - நச்சாதலுக்குக் காரணமாகிய இரசாயனப் பதார்த்தம் அடங்கியிருந்த போத்தலை (இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும்) வைத்தியரிடம் முன்வைத்தல்
- இரசாயனப் பொருள்கள் சார்ந்த விபத்துக்களைத் தவிர்ப்பதற்காகக் கையாளத்தக்க நடவடிக்கைகள்
  - பாதுகாப்பாகக் களஞ்சியப்படுத்தல்
    உதாரணம்: சிறுவர்களது கைக்கெட்டாதவாறு களஞ்சியப்படுத்தல்

- பயன்படுத்தும்போது தேவைக்கேற்ப பாதுகாப்பு அணிகளைப் பயன்படுத்தல்
  உதாரணம்: கையுறை/ முகமூடி/ பாதணி
- பயன்படுத்த முன்னர் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை வாசித்து விளங்கிக் கொள்ளல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- பூச்சி கொல்லி இரசாயனங்கள், உடனலப்பாதுகாப்பு போன்றவற்றுக்காகப் பயன்படுத்தப்படும் பொருள்களின் பொதியுறைகளில் அல்லது சுட்டிகளில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்கள்
  (உதாரணம்: செறிவு, பயன்படுத்த வேண்டிய விதம், களஞ்சியப்படுத்தல், பாதுகாப்பு போன்றவற்றுக்கான அறிவுறுத்தல்கள்)
- இரசாயனப் பொருள்கள் காரணமாக நிகழ்ந்த விபத்துக்கள், அபாயங்கள் தொடர்பான தகவல்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- எதிர்பார்க்கப்படும் கற்றற்பேறுகள் அடையப் பெற்றுள்ளனவா என்பதை அளந்தறிவதற்காகப் பொருத்தமான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- 8.4.6 **தாக்குப்பிடிக்கத்தக்க வாழ்க்கைக் கோலமொன்றுக்கு இசைவடைந்து, பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்பார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- தாக்குப்பிடிக்கத்தக்க வாழ்க்கைக் கோலம் என்பது யாது எனக் கலந்துரையாடுவார்.
- நாளாந்த தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக, தாக்குப்பிடிக்கத்தக்க நுகர்வுக் கோலத்தைப் பழகிக் கொள்வதன் அவசியத்தை விளக்குவார்.
- தாக்குப்பிடிக்கத்தக்க நுகர்வுக் கோலத்தைப் பழகிக் கொள்வதன் மூலம் பேண்தகு அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்யலாம் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- தாக்குப்பிடிக்கத்தக்க நுகர்வுக் கோலத்துக்கு இசைவடைதல்
    - தற்காலத்தில் மனிதனின் தேவைகளும் விருப்புக்களும் சிக்கார்ந்து காணப்படுகின்றமை
    - இத்தேவைகளை நிறைறேற்றிக் கொள்வதற்காக காணப்படும் வளங்கள் வரையறைப்பட்டது.
    - அவ்வளங்களை எதிர்காலச் சந்தத்தியினருக்கு மீதப்படுத்தி வைப்பது தற்போதைய தலைமுறையின் பொறுப்பாகும்.
- மேற்படி விடயங்களைக் கவனத்திற்கொண்டு தமது பொருளாதார மட்டத்துக்குப் பொருத்தமானவாறு தேவைகள் விருப்புக்களை நிறைவு செய்து கொள்ள முற்படுதலே தாக்குப்பிடிக்கத்தக்க நுகர்வுக் கோலத்துக்கு இசைவடைதல் எனச் சுருக்கமாக விவரிக்கலாம்.

  **தேவைகள்**
    - உணவு, உடை, உறைவிடம்
    - நீர், மின்சாரம்
    - சக்தி வலு
    - போக்குவரத்துத் தேவைகள்
    - ஓய்வும் பொழுதுபோக்கும்
    - சுகாதாரமும் உடனலும்
- எதிர்காலச் சந்தத்தியினர் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் தடங்கல் ஏற்படாத வகையில் தற்போதைய சந்ததியினர். தமது தேவைகளை நிறைவேற்றிக் கொண்டவாறு அபிவிருத்தியடைவதே பேண்தகு அபிவிருத்தி எனப்படுகிறது.
- ஒரு நாட்டின் பிரசைகள், தாக்குப் பிடிக்கத்தக்க வாழ்க்கைக் கோலத்துக்கு இசைவடைதலானது தனக்கும், சமூகத்துக்கும், நாட்டுக்கும் பயனளிக்கும். கூடவே அதன் மூலம் பேண்தகு அபிவிருத்தியில் பங்களிப்புச் செய்து, பிரசை என்ற வகையில் பொறுப்புக்களை நிறைவேற்றவும் வாய்ப்பும் கிடைக்கும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- சைக்கிள், இரண்டு சக்கர உழவு இயந்திரம், வினைத்திறன் மிக்க விறகடுப்பு போன்றவற்றின் ஒளிப்படங்களும் அவற்றைப் பயன்படுத்துவதால் கிடைக்கும் பிரதிபலன்களும் அடங்கிய அட்டைகள்
- குறைந்த செலவில் போசாக்கான வேளையுணவொன்றினைத் தயாரித்துக் கொள்வதற்காகப் பயன்படுத்தத்தக்க பொருள்களின் பட்டியல்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- எதிர்பார்க்கப்பட்ட கற்றற்பேறுகள் அடையப்பட்டுள்ளமையை அளந்தறிவதற்குப் பொருத்தமான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

## எடுத்துக்காட்டுச் செயற்பாடு 8.4

**தேர்ச்சி** :- மக்கட் சமூகத்தின் பாதுகாப்பான இருப்புக்காக செயலூக்கத்துடன் செயற்படுவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.4.3 அனர்த்த முகாமை செய்வார்.**

**கற்றற் பேறுகள்** :-

- விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழத்தக்க சந்தர்ப்பங்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- விபத்துக்கள், அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்காகப் பொருத்தமான வழிவகைகளைப் பிரேரிப்பார்.
- குறித்த இடங்களில் நிகழத்தத்தக்க விபத்துக்கள் தவிர்ந்தவிடத்து வேறு விபத்துக்கள் நிகழத்தக்க சந்தர்ப்பங்களை இனங்கண்டு அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதன் அவசியத்தை விளக்குவார்.
- உணவு, மருந்துகள் ஆகியன காரணமாக நிகழத்தக்க விபத்துக்களை இனங்கண்டு, அவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- விபத்துக்கள், அனர்த்தங்கள் ஏற்படுவதற்கு பாதகமான வாழ்க்கைப் பழக்கங்கள் காரணமாகின்றமையை உதாரணங்காட்டி விளக்குவார்.
- விபத்துக்கள், அனர்த்தங்களிலிருந்து தவிர்ந்திருப்பதற்கு சாதகமான வாழ்க்கைப் பழக்கங்களை ஏற்படுத்திக் கொள்வதை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.

**செயற்பாடு** :- பாதுகாப்பை உறுதிப்படுத்திக் கொள்வோம்

**நேரம்** :- 40 நிமிடம்

**தரவுள்ளீடுகள்** :-

- வீட்டில்/ பாடசாலையில்/ வேலைத்தளத்தில் நிகழ்ந்த இரண்டு விபத்துக்கள் பற்றிய செய்தித்தாள் அறிக்கைகள், ஒளிப்படங்களைப் தேடிப்பெற்றுக்கொள்க.
- டிமை கடதாசி/ பிரிஸ்டல் அட்டை, ∴பெல்ற் பேனைகள்
- இணைப்பு 1 இல் தரப்பட்டுள்ள செயற்பாட்டுப்பத்திரம்

**கற்றல் கற்பித்தற் செயன்முறை**

படிமுறை I :

- தரவிருத்தி உள்ளீடுகளின் கீழ்த் தரப்பட்டுள்ள செய்தித்தாள் அறிக்கைகளையும் ஒளிப்படங்களையும் வகுப்பில் முன்வைக்குக. வீட்டில் பாடசாலையில், சுற்றுப்புறத்தில் நிகழும் விபத்துக்கள், வனசீவராசிகள், நாய்கள், நச்சுப் பாம்புகள் போன்றன காரணமாக நிகழும் விபத்துக்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக. மேலும், உணவு, ஔசதங்கள் தொடர்பான விபத்துக்கள், பாதகமான பழக்கங்கள் காரணமாக நிகழும் வித்துக்கள் குறித்து மாணவருடன் கலந்துரையாடுக.

(குறுங் கலந்துரையாடல்)

படிமுறை II :

- வகுப்பு மாணவரைப் பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- குழுக்களை அவதானித்து வேலையைச் செய்து முடிப்பதற்குத் தேவையான உதவிகளை வழங்குக.
- குழு அறிக்கையை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக. (20 நிமிடம்)

படிமுறை III :

- மாணவர்கள் முன்வைத்த விடயங்களையும் கற்றற்பேறுகள் அடையப் பெறும் வகையில் மீட்டாய்வு நடத்துக.
- தேவையான பின்னூட்டலை வழங்குக.
- மதிப்பீட்டு நியமங்களைத் தழுவி கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக. (10 நிமிடம்)

**மதிப்பீட்டு நியமங்கள்**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.

- விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழத்தக்க விதங்களைக் குறிப்பிடுவர்.
- விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழும் வழிகளைக் கலந்துரையாடுவர்.
- விபத்துக்கள், அனர்த்தங்களை தவிர்ப்பதற்காக மேற்கொள்த்தக்க நடவடிக்கைகளை எழுதிக்காட்டுவார்.
- விபத்துக்கள், அனர்த்தங்களைத் தவிர்க்கத்தக்க விதம் பற்றி ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வார்.
- குழு உணர்வுடன் செயற்படுவார்.

**செயற்பாட்டுப்பத்திரம்**

**குழு இல. 01**

- பின்வரும் அட்டவணையைப் பூர்த்தி செய்க. (தரப்பட்டுள்ள டிமைத்தாளை, பிரிஸ்டல் அட்டையைப் பயன்படுததுக)
- பூர்த்தி செய்த அட்டவணையை வகுப்பில் முன்வைக்க.

| வீட்டில் நிகழக் கூடிய விபத்துக்கள் | விபத்துக்கு ஏதுவாகும் காரணிகள் | விபத்துக்களை தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள் |
|---|---|---|
| • | | |
| • | | |
| • | | |
| • | | |
| • | | |

| பாடசாலையில் நிகழக் கூடிய விபத்துக்கள் | விபத்துக்கு ஏதுவாகும் காரணிகள் | விபத்துக்களை தவிர்ப்பதற்காக எடுக்கத்தக்க நடவடிக்கைகள் |
|---|---|---|
| • | | |
| • | | |
| • | | |
| • | | |
| • | | |

## 8.5 பிரச்சினை தீர்த்தலும் தீர்மானமெடுத்தலும்

### பிரச்சினைகளையும் சவால்களையும் இனங்காணல்

**அறிமுகம்**

சொந்த வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் ஒவ்வொருவரும் பல்வேறு பிச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்க நேரிடுவதுண்டு. பிரச்சினைகளையும் சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கெனின், ஒவ்வொருவரும் தமது சொந்த வாழ்க்கை அனுபவங்களின் ஊடாக வலுவூட்டம் பெறுதல் வேண்டும். சமகாலச் சமூகத்தில், பிள்ளைகளிடத்தே பிரச்சினைகள் மற்றும் சவால்களை எதிர்கொள்வதில் பல்வேறு குறைபாடுகள் இருப்பதைக் காண முடிகின்றது. அவை காரணமாக சிலர் வாழ்கையில் தோல்வியின் பாற் செல்ல இடமளிப்பர். சில போது உயிரை மாய்த்துக்கொள்ளவும் முற்படுவர். எனவே மாணவர்களிடத்தே, எந்தவொரு பிரச்சினையும் சரியாக இனங்கண்டு ஆக்கபூர்வமான மாற்று வழிகளைப் பிறப்பித்துக் கொள்வதன் மூலம் சரியான தீர்மானங்களை எடுப்பதற்கும் சவால்களை வெற்றிகொள்வதற்கும் தேவையான ஆற்றல்களை வளர்ப்பதே இந்த அத்தியாயத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுவதாகும். கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைத் திட்டமிடும் போது செயன்முறை சார்ந்த கற்றல் அனுபவங்களின் பால் விசேட கவனஞ் செலுத்தி இந்த அத்தியாயத்தைக் கற்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிப்பது பயன்மிக்கதாகும்.

**தேர்ச்சி 8.5** :- வாழ்க்கைச் சந்தர்ப்பங்கள் மற்றும் அறைகூவல்களின் முன்னிலையில் விளைதிறனுடையவாறு தீர்மானமெடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.5.1 நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்க வேண்டியேற்படத்தக்க பிரச்சினைகள், அறைகூவல்கள் பற்றி ஆராய்வார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- பிரச்சினைகள், சவால்களை எளிமையாக வரைவிலக்கணப் படுத்துவார்.
- நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அறைகூவல்கள் தொடர்பாகக் கவனஞ் செலுத்திச் செயற்படுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை வெற்றிகரமாக எதிர்கொள்ளும் திறனை விருத்தி செய்துகொள்வது அவசியமாகும் எனக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- பிரச்சினைகளையும் சவால்களையும் இனங்காணல்
    - சொந்த வாழ்க்கையிலும் சமூக வாழ்க்கையிலும் செயற்படும் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள நேரிடுவதுண்டு.
    - பிரச்சினை என்பது, காணப்படுகின்ற நிலைமைக்கும் எதிர்பார்க்கப்படும் நிலைமைக்கும் இடையிலான வேறுபாடாகும் எனலாம்.

உதாரணம்:

| **காணப்படும் நிலை** | **எதிர்பார்க்கப்படும் நிலை** |
|---|---|
| கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்ள முடியாதவாறாக பொருளாதார இடர்பாடுகள் காணப்படுதல் | கல்வி நடவடிக்கைகளை வெற்றிகரமாக இலக்கு நோக்கி வழிப்படுத்திக் கொள்ளல் |

காணப்படும் நிலை | பிரச்சினை | எதிர்பார்க்கப்படும் நிலை

↓

தீர்வு(கள்)

- காணப்படும் நிலையிலிருந்து விடுபடுவதற்காகத் தீர்வுகளைத் தேடுவது அவசியமாகும்.
- பிரச்சினைக்கான தீர்வுகளைத் தேட முன்னர் காரணங்களைத் தேடியறிதல்
- பிரச்சினையைப் பகுத்தாய்வு செய்து காரணங்களைக் கண்டறியலாம்
- காரணங்களைக் கண்டறிவதற்ன மூலம் தீர்வு தேடலாம்
- வாழ்க்கையின் இலக்குகளை வெற்றி கொள்ள முயற்சி செய்யும் போது எதிர்நோக்க நேரிடும் பல்வேறு நிலைமைகளும் சந்தர்ப்பங்களுமே சவால்களாகும் என எளிமையாக விளக்கலாம்.
- தோன்றும் நிலைமைகளை வெற்றிகரமாக எதிர்கொள்வதன் மூலம் சவால்களை வெற்றி கொள்ளலாம்.
- நாளாந்த வாழ்க்கையில் பல்வேறு பிரச்சினைகள், சவால்களை எதிர்நோக்க நேரிடுதல்
- குடும்ப நடவடிக்கைகளின் போதும், பாடசாலை நடவடிக்கைகளின் போதும் இவ்வாறான பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்கொள்ள நேரிடுவதுண்டு.
- அவ்வாறான பிரச்சினைகளின் போதும் சவாலாக அமையும் சந்தர்ப்பங்களின் போதும் நேர்வகையில் துலங்குவதற்காக தமது ஆற்றல்களை விருத்தி செய்து கொள்ள முனைதல்
- தமது ஆளுமையை விருத்தி செய்து கொள்ளலும் உளவலிமையை வளர்த்துக் கொள்வதும் முக்கியமானதாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**
- நாளாந்த வாழ்க்கையில் எதிர்நோக்கும் சவால்கள், பிரச்சினைகள் தொடர்பான சில சம்பவங்கள் அடங்கிய செய்தித்தாள் அறிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**
- குழுச் செயற்பாடுகள், தகவற் பத்திரங்கள் போன்ற கற்றல் முறைகளில் ஈடுபடல், பாடவிடயங்களைக் கற்றறிவதற்கு மாணவரை வழிப்படுத்துக. எதிர்பார்க்கப்பட்ட கற்றற்பேறுகள் அடையப் பெற்றுள்ளமையை அளந்தறிவதற்காக நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.5.2 வாழ்க்கையில் வெவ்வேறு பிரச்சினைகள், அறைகூவல் களை வெற்றிகரமாக எதிர்கொள்வார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றமையானது பொதுவான வாழ்க்கையுடன் இணைந்த நிகழ்வுகளாகும் என்பதை விளக்குவார்.
- எந்தவொரு பிரச்சினைக்கும் சவாலுக்கும் தீர்வு உண்டு என்பதை உதாரணங்காட்டி விவரிப்பார்.
- வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காகச் சவால்கள், பிரச்சினைகளை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்வதன் அவசியத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- வெவ்வேறு பிரச்சினைகளையும் சவால்களையும் வெற்றிகொள்வதற்காக ஆக்கபூர்வமான முறைகளைக் கையாளல்
- பிரச்சினைகளும் சவால்களும் தருணத்துக்கேற்ப வேறுபடல்
- வாழ்தல் என்பது பிரச்சினைகளையும் சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொள்ளலாம்.
- பிரச்சினைகளும் சவால்களும் புதியவை அல்ல மாறாக அவை பொதுவான வாழ்க்கைத் தோற்றப்பாடுகளாகும்.
- பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் உண்டு, சவால்களும் வெற்றிகொள்ளப்பட வேண்டியவை.
- பிரச்சினைகளைக் கண்டு ஒதுங்கிச் செல்வதை வாழ்க்கைப் பழக்கமாக்கிக் கொள்ளாதிருப்பதன் அவசியம்
- சவால்களை வெற்றிகரமாக எதிர்கொள்ளலை வாழ்க்கையில் ஓர் அம்சமாக ஆக்கிக் கொள்வதன் முக்கியத்துவம்
- பிரச்சினைகளுக்குத் தீர்வுகளாவதற்கும் சவால்களை வெற்றிகொள்வதற்கும் ஆக்கபூர்வமான முறைகளைக் கையாள முடிதல்
- பிரச்சினைகளையும் சவால்களையும் வாழ்க்கையின் வெற்றிக்காகத் துணையாகக் கொள்ளத்தக்க விதம்
    - மனோதிடத்தை வளர்த்துக்கொள்வதற்காகப் பயன்படுத்துதல்
    - பிரச்சினைகளை வாழ்க்கையின் அனுபவங்களாக்கிக் கொள்ளல்
    - எதிர்நோக்கும் சவால்களை, ஆக்கபூர்வமான ஆக்கங்கள் படைப்பதற்காகப் பயன்படுத்துதல்
    - புதிய கற்றல் அனுபவங்களைப் பெறல்
    - தவறுகளைத் திருத்திக் கொள்ள முற்படல்
    - ஆலோசனைகள் பெறல்
    - மாற்றுத் தீர்வுகளுக்காக ஆலோசனைச் சேவையை நாடுதல்

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

- பல்வேறு சவால்களை வெற்றி கொண்டு வழ்க்கையை வெற்றி கொண்ட தனியாள்கள் சிலரின் வாழ்க்கை தொடர்பான சுருக்கமான செய்தித்தாள் அறிக்கைகள் சில.

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- குழு ஒப்படைகள், தகவல் தேடியறிதல் போன்ற செயற்பாடு சார்ந்த கற்றல் முறைகளைக் கையாண்டு பாடவிடயங்களைக் கற்றாய்வதற்கு மாணவருக்குச் சந்தர்ப்பம் வழங்குக. எதிர்பார்க்கப்படும் கற்றற்பேறுகள் அடையப்பட்டுள்ளமையை அளந்தறிவதற்காக நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

## எடுத்துக்காட்டுச் செயற்பாடு 8.5

**தேர்ச்சி** :- வாழ்க்கைச் சந்தர்ப்பங்கள் மற்றும் அறைகூவல்களின் முன்னிலையில் விளைதிறனுடையவாறு தீர்மானமெடுப்பார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.5.2 வாழ்க்கையில் வெவ்வேறு பிரச்சினைகள், அறைகூவல்களை வெற்றிகரமாக எதிர்கொள்வார்.**

**பாடவேளைகள்** :- 03

**கற்றற் பேறுகள்** :-

- பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி ஏற்படுகின்றமையானது பொதுவான வாழ்க்கையுடன் இணைந்த நிகழ்வுகளாகும் என்பதை விளக்குவார்.
- எந்தவொரு பிரச்சினைக்கும் சவாலுக்கும் தீர்வு உண்டு என்பதை உதாரணங்காட்டி விவரிப்பார்.
- வாழ்க்கையில் வெற்றி பெறுவதற்காக சவால்கள், பிரச்சினைகளை ஆக்கபூர்வமாகத் தீர்த்துக் கொள்வதன் அவசியத்தை விளக்குவார்.

**செயற்பாடு** :- எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வு உண்டு

**நேரம்** :- 40 நிமிடம்

**தரவுள்ளீடுகள்** :-

- இணைப்பு 8.5.2.1
- இணைப்பு 8.5.2.2

**கற்றல் கற்பித்தற் செயன்முறை**

படிமுறை I :

- இணைப்பு 8.5.2.1 இல் தரப்பட்டுள்ள சம்பவத்தை வகுப்பில் வாசிக்குமாறு ஒரு மாணவனை அல்லது மாணவியை வழிப்படுத்துக. அச்சம்பவத்தில் இடம்பெற்றுள்ள தகவல்களுக்கமைய, எந்த ஒருவருக்கும் வாழ்க்கையில் பிரச்சினைகளையும் சாவல்களையும் எதிர்நோக்க நேரிடும் என்பதையும் அவற்றைத் தீர்ப்பதற்கான தீர்வுகளை தேடியறிவதன் மூலம் வாழ்க்கையை வெற்றிகரமானதாக்கிக் கொள்ளலாம் என்பதையும் விளக்கி, பாடத்தை அணுகுக.

(10 நிமிடம்)

படிமுறை II :

- வகுப்பு மாணவரை பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 8.5.2.1, 8.5.2.2 ஆகியவற்றின் பிரதி ஒவ்வொன்று வீதம் குழுக்களுக்கு வழங்குக.
- செயற்பாட்டுக்காக போதிய நேர அவகாசம் வழங்கி, பெற்ற தகவல்களையும் கண்டறிந்தவற்றையும் வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.

(20 நிமிடம்)

படிமுறை III :

- மாணவர்கள் குழுநிலையில் தேடியறிந்து முன்வைத்த தகவல்களையும் துணையாகக் கொண்டு பின்னூட்டல் வழங்குக.
- கற்றற்பேறுகளை அடையத்தக்கவாறாகக் கலந்துரையாடுக.
- கீழே தரப்பட்டுள்ள நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக. (10 நிமிடம்)

**மதிப்பீட்டு நியமங்கள்**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.

- விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழத்தக்க விதங்களைக் குறிப்பிடுவர்.
- விபத்துக்கள், அனர்த்தங்கள் நிகழும் வழிகளைக் கலந்துரையாடுவர்.
- விபத்துக்கள், அனர்த்தங்களைத் தவிர்ப்பதற்காக மேற்கொள்ளத்தக்க நடவடிக்கைகளை எழுதிக்காட்டுவார்.
- விபத்துக்கள், அனர்த்தங்களைத் தவிர்க்கத்தக்க விதம் பற்றி ஏனையோருக்கு அறிவூட்டம் செய்வார்.
- குழு உணர்வுடன் செயற்படுவார்.

**இணைப்பு 8.5.2.1**

ஷர்மிலா, நாகபுரி வித்தியாலய பிரதான மாணவ தலைவி ஆவார். செயலூக்கமுள்ள பொறுப்புடன் செயற்படுகின்ற ஒரு மாணவ தலைவி என்ற வகையில் அவர் அதிபர் உட்பட ஆசிரியர் குழாத்தின் நன்மதிப்பைப் பெற்றுள்ளார். மாணவர் தலைவர்களின் கூட்டத்தில் எடுக்கப்பட்ட ஒரு தீர்மானத்தின்படி, பாடசாலையில் ஒரு பிரச்சினையாகக் காணப்படுகின்ற, மாணவ மாணவியர் கால தாமதமாகிப் பாடசாலைக்கு வருகை தருதல் தொடர்பாகத் தேடியறியும் பொறுப்பை அதிபர் அவர்கள் ஷர்மிலாவிடம் ஒப்படைத்தார்.

அதற்கமைய ஷர்மிலா, பாடசாலை ஆரம்பிக்கும் நேரம் நெருங்கும்போது பாடசாலை நுழைவாயிலின் அருகே நின்று, தாமதமாகி வரும் மாணவர்கள் யாவர் என அவதானித்தார். ஏறத்தாழ இரண்டு வார கால அவதானிப்பின் பின்னர் தினசரி தாமதமாகி வரும் எட்டு மாணவ மாணவியர் உள்ளனர் என்பதைக் கண்டறிந்தார். ஷர்மிலா பாடசாலை ஒழுக்கக் கட்டுப்பாட்டுக்குப் பொறுப்பான ஆசிரியரின் ஆலோசனையின் பேரில் அம்மாணவ மாணவியர் தொடர்பாகத் தகவல்களைத் தேடியறியத் தீர்மானித்தார். அடுத்த சில நாள்களில் அம்மாணவ மாணவியரைச் சந்தித்து ஷர்மிலா உரையாடினார். அவர்கள் தினமும் தாமதமாகி வருவதைச் சுட்டிக்காட்டிய ஷர்மிலா அதன் மூலம் அவர்களுக்கு ஏற்படும் இழப்புக்களையும் எடுத்துக்காட்டினார். பின்னர், அம்மாணவ மாணவியரின் தாமதமாகி வருவதற்கு ஏதுவாகும் காரணங்களை எழுதித்த தம்மிடம் தருமாறு அவர்களிடம் கூறினார். அம்மாணவ மாணவியர்கள் தெரிவித்த காரணங்களை தமது மாணவ மாணவியருடன் குறிப்பேட்டில் பின்வருமாறு பதிவு செய்தார்.

- எங்களது பாதையில் ஒரேயொரு பஸ் வண்டியே உள்ளது. அது ஒரு மணித்தியாலயத்திற்கு ஒரு தடவையே சேவையில் ஈடுபடுகிறது. காலை 6.15 மணிக்குப் பின்னர் காலை 7.15 மணி தாண்டித்தான் வரும். 6.15 மணி பஸ்ஸைப் பிடிக்க எம்மால் வர முடியாது.
- காலையில் நித்திரைவிட்டெழும்ப தாமதமாகிறது.
- உடைகளை அழுத்தி புத்தகப்பையை ஒழுங்குபடுத்த அதிக நேரம் செல்லும்
- காலை உணவு தாமதமாகித்தான் கிடைக்கும்

தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்வதற்கான யோசனைகளைத் தமது குறிப்பேட்டில் எழுதிக் கொண்டு வருமாறு ஷர்மிலா அம்மாணவ மாணவியருக்கு அறிவுறுத்தல் வழங்கினார். அம்மாணவ மாணவியர்கள் அத்தினத்திலேயே தமது யோசனைகளை எழுதி ஷர்மிலாவிடம் ஒப்படைத்தனர். அந்த போசனைகளை நாளை தொடக்கம் நடைமுறைப்படுத்துமாறு கூறிய ஷர்மிலா அதற்கான இணக்கப்பாட்டையும் பெற்றுக் கொண்டார். ஷர்மிலா அடுத்தடுத்த சில தினங்களில் அம்மாணவ மாணவியரின்

வருகையை அவதானித்தார். அவர்கள் தினமும் வேளைக்குப் பாடசாலைக்கு வருகின்றமையைப் பாராட்டினார். அடுத்து இடம் பெற்ற மாணவ தலைவர்கள் கூட்டத்தில் அதிபர், ஷர்மிலாவைப் பாராட்டி நன்றி தெரிவித்தார்.

**செயற்பாடு**

தாமதமாகி வருவதைத் தவிர்ப்பதற்காக அம்மாணவ மாணவியர் முன்வைத்திருப்பர் என நீங்கள் கருதும் யோசனைகளைக் குறிப்பிடுக. அவற்றை வகுப்பில் முன்வைக்குக.

1.

2.

3.

4.

5.

- எல்லாக்குழுக்களுக்கும் இச்செயற்பாட்டை வழங்குக.

## 8.6 வேலையுலகு

**அறிமுகம்**

சமூகத்தில் வெவ்வேறு தொழில்துறைகளில் காணப்படும் எல்லாத்தொழில்களையும் கூட்டாக வேலை உலகு எனலாம். சமகாலச் சமூகத்தில் முன்னரிலும் பார்க்க சிக்கார்ந்த வேலையுலகு உருவாகியுள்ளது. எதிர்காலத்தில் தமது தொழிலைத் தெரிவு செய்து கொள்ளும் போது தமது திறன்கள் மற்றும் எதிர்பார்ப்புக்களின்படி இத்தொழிலுலகத்தைக் கட்டியெழுப்பிக் கொள்வதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குவதற்காக மாணவர்க்கு தொழில் வழிகாட்டல் வழங்குவது அவசியமாகும். அதற்கமைய உழைப்பின் மகத்துவத்தை மதித்தல், பயிற்றப்பட்ட உழைப்பின் முக்கியத்துவம், பயிற்றப்பட்ட உழைப்பாளியாவதற்காக நாட வேண்டிய பாடநெறிகள் மற்றும் நிறுவனங்கள், தொழிற்சந்தையின் முன்னுரிமைகள் போன்ற துறைகள் தொடர்பாக அறிவூட்டம் பெறுவது அவசியமாகும்.

மேலும் நல்லதோர் உழைப்பாளிக்குரிய பண்புக்கூறுகளை விருத்தி செய்து கொள்ளல், கடமைகள் பொறுப்புக்களை நிறைவேற்றல், தொழில் செய்யும் இடத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காகப் பங்களிப்புச் செய்யும் விதம், ஊழியரின் உரிமைகள், கடமைகள் பற்றிய விளக்கம் போன்றவை குறித்து இங்கு கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. மேலும் தொழில்சார்ந்த பண்புக்கூறுகளை விருத்தி செய்து கொள்ளக்கூடிய முறைகள், தம்மை நாடிவரும் சேவைபெறுநரைத் திருத்தியடையச் செய்யத்தக்க விதம் மற்றும் தமது தொழிலின் ஊடாகச் சிறந்த வாழ்க்கைக் கோலமொன்றினைக் கட்டியழுப்பிக் கொள்ளல் ஆகியன குறித்து இந்த அலகில் கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது. கற்றல்- கற்பித்தற் செயன்முறையின் போது மேற்படி அம்சங்கள் தொடர்பாக நடைமுறை ரீதியிலும் கோட்பாட்டு ரீதியிலும் அறிவூட்டம் செய்து சரியாகத் தொழில் வழிகாட்டல் வழங்க ஆவன செய்தலே இங்கு எதிர்பார்க்கப்படுகிறது.

**தேர்ச்சி 8.6** :- வேலையுலகுக்குப் பரிச்சயமடைவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.1 வேலை உலகின் பல்வகைமையை மதிப்பார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- வேலை உலகின் பல்வகைமையை உதாரணங்காட்டி விளக்குவார்.
- வேலை உலகின் பல்வகைமையின் கீழ் பல்வேறு தொழில் வாய்ப்புக்களை விவரிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- வேலையுலகு அறிமுகம்
  - சமூகத்தில் உள்ள வெவ்வேறு தொழில் துறைகளைச் சேர்ந்த எல்லாத் தொழில்களையும் வாண்மைகளையும் உள்ளடக்கியதே வேலையுலகு ஆகும் என விளக்குக.
  - அதற்கமைய வேலையுலகானது பல்வேறு தொழில்களில் ஈடுபடும் உழைப்பாளிகள் பெருந்தொகையானோரைக் கொண்டது.
  - மேலும் பெருந்தொகையானோருக்கு வேலையுலகில் தொழில்வாய்ப்பு வழங்குதல் வேண்டும்.

- வேலையுலகில் காணப்படும் தொழில் துறைகள்
    - விவசாயம்
    - கைத்தொழில்
    - தொழினுட்பம்
    - சேவைகள்

- மேற்படி துறைகளைச் சேர்ந்த தொழில்களை இனங்காண்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
- இத்துறைகளைச் சேர்ந்த தொழில்கள் அரச துறையிலும் தனியார் துறையிலும் காணப்படுகின்றன. சுய தொழிலாகவும் அவற்றைச் செய்யலாம்.
- அந்தந்தத் துறையைச் சேர்ந்த தொழில்களுக்கான உதாரணங்கள்
- வேலையுலகின் பல்வகைமை மீது செல்வாக்கச் செலுத்தும் காரணிகள்

  உதாரணம்:
    - பிரதேசத்தில் காணப்படும் இயற்கை வளங்களும் பௌதிக வளங்களும்
    - மனித வளம்
    - சமூகத்தின் தேவைகள்
- வேலையுலகினது தொழில் துறைகளின் புதிய போக்குகள்

  உதாரணம்:
    - தகவல் தொழினுட்பத்துறையில் புதிய தொழில்கள்
    - பயிற்சி பெற்ற உழைப்பாளிகளுக்கு வெளிநாடுகளில் வேலை வாய்ப்புக்கள் இருத்தல்
    - கட்டட நிர்மாணத்துறைத் தொழில்கள்

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

- விவசாயம், தொழினட்பம், கைத்தொழில், சேவைகள் ஆகிய துறைகளில் நமது நாட்டிலும் வெளிநாட்டிலும் காணப்படும் வெற்றிடங்கள் பற்றிய செய்தித்தாள் அறிவித்தல்கள்.
- விவசாயம், கைத்தொழில், தொழினுட்பம், சேவைத்துறைகளில் தொழில் வாய்ப்புக்களைக் காட்டும் அறிக்கைகள் (இலங்கை மத்திய வங்கி அறிக்கைகள் மூலம்)
- அரச, தனியார் தொழில்கள் சுய தொழில்களில் ஈடுபட்டுள்ள தொழிலாளர்களைக் காட்டும் ஒளிப்படங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- குழுச் செயற்பாடு, ஒப்படை, தகவல் தேடியறிதல் போன்ற கற்றல் - கற்பித்தல் முறைகளின் கீழ் விடயங்களைக் கற்றாய வழிப்படுத்தி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.2** உழைப்பின் மகிமையை உணர்ந்து செயற்படுவதன் முக்கியத்துவத்தை நுணுகியாய்வார்.

**பாடவேளைகள்** :- 01

**கற்றற் பேறுகள்** :-

- உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து சேவையில் ஈடுபடுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து செயற்படுதலானது தொழில் திருப்திக்குக் காரணமாகும் என்பதற்குச் சார்பாக விடயங்களை முன்வைப்பார்.
- உழைப்பின் மகத்துவத்தை உணர்ந்து செயற்படுவதால் கிடைக்கும் பயன்களை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- உழைப்பின் மகிமை
  - ஒவ்வோர் உழைப்பாளியினதும் உழைப்பு மதிப்புமிக்கது என மதிப்பதோடு தமது உழைப்பும் மகிமையானது எனும் உணர்வே, உழைப்பின் மகிமை எனப்படுகின்றது.
- ஒவ்வோர் உழைப்பாளியும் உழைப்பின் மகிமையை உணர்ந்து செயற்படுவதால் கிடைக்கும் பயன்கள்
  - தமது சேவை/ உழைப்பு சமூகத்தில் மதிக்கப்படுதல்
  - சேவை தருனருக்குக் கிடைக்கும் பயன்கள்
  - சேவை வழங்குனருக்குக் கிடைக்கும் பயன்கள்
  - சேவையைப் பெறுவருக்குக் கிடைக்கும் பயன்கள்

  ஆகியவற்றை இனங்காண மாணவரை வழிப்படுத்துக.

**தரவிருத்தி உள்ளீடுகள் :-**

- அரச தொழில்கள், தனியார் தொழில்கள், சுயதொழில்கள் ஆகிய துறைகளில் தொழில்களில் ஈடுபட்டுள்ள தனியாட்களின் சேவை கணிப்புக்கு உள்ளாகிய சில சந்தர்ப்பங்கள் தொடர்பான செய்தித்தாள் அறிக்கைகள், வீடியோக் காட்சிகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- செயற்பாடுகள் சார்ந்த கற்றல் - கற்பித்தல் முறைகளின் கீழ் விடயங்களைக் கற்றாய வழிப்படுத்தி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.3 ஒவ்வொரு தொழிலும் சமூக முன்னேற்றத்துக்கு காரணமாகும் விதத்தை நுணுகியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 01

**கற்றற் பேறுகள்** :-

- ஒவ்வொரு தொழிலும் சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதில் பங்களிப்புச் செய்யும் விதத்தை உதாரணங்காட்டி விளக்குவார்.
- ஒவ்வொரு தொழிலும் சமூக மேம்பாட்டுக்குக் காரணமாகும் என்பதை ஏற்றுக் கருத்துத் தெரிவிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- ஒவ்வொரு சட்டபூர்வமான தொழிலும் சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் பங்களிப்புச் செய்யும்
  உதாரணம்:

| | | |
|---|---|---|
| கமக்காரர்/ விவசாயி | - | உணவு உற்பத்தி |
| வைத்தியர் | - | நோய் தீர்த்தல் |
| ஆசிரியர் | - | கல்வி வழங்குவதன் மூலம் நாட்டின் நற்பிரசைகளை உருவாக்குதல் |
| கட்டட வேலையாள் | - | வீடுகள் உட்பட கட்டடங்கள் கட்டுதல் |
| அழகுக்கலை நிபுணர் | - | ஒப்பனை |

- பல்வேறு தொழில்கள், சமூகத்தின் தேவைகளை நிறைவேற்றுவதில் பங்களிப்புச் செய்வதன் மூலம் சமூகத்தின் மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்துக்கும் காரணமாதல்
- மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக வெவ்வேறு தொழில்களினால் ஆற்றப்படும் சேவைகள்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- சமூகத் தேவைகளை நிறைவேற்றுவதற்காக வெவ்வேறு வாண்மையாளர்கள் பங்களிப்புச் செய்யும் விதத்தைக் காட்டும் சித்திரங்கள்/ ஒளிப்படங்கள்/ அறிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- ஒவ்வொரு தொழிலாளரும் உழைப்பாளரும் சமூக்தின் அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செய்வர் எனும் மனப்பாங்கு வளர்ச்சியடையும் வகையில் பாடவிடயங்களைக் கற்றாய்வதற்கு மாணவரை வழிப்படுத்தி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.4 பயிற்சி பெற்ற உழைப்பின் முக்கியத்துவத்தைத் தேடியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- ஓர் உழைப்பாளி என்ற வகையில் தமது தொழில்துறைக்குரிய பயிற்சிகளைப் பெறுவதன் அவசியத்தை விளக்குவார்.
- உழைப்பாளி ஒருவருக்குப் பயிற்சிகள் பெறுவதற்காக காணப்படும் வாய்ப்புக்கள் குறித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- உழைப்பின் விளைதிறனானது பயிற்சியின்மீது தங்கியுள்ளமையை உதாரணங்காட்டி விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- தொழில் சார்ந்த நடவடிக்கைகளுக்காகச் சார்பளவில் உழைப்பைச் செலவு செய்யும் விதத்துக்கு ஏற்ற உடலுழைப்பு, உள உழைப்பு என உழைப்பை வகைப்படுத்தலாம் என்பதை இனங்காண்பதற்கு மாணவர்க்குச் சந்தர்ப்பமளிக்குக.
  உதாரணம்:
  - அதிகளவில் உடலுழைப்பைச் செலவு செய்யும் தொழில்கள் - கமக்காரர்
    கட்டட வேலையாளர்
    மரவேலையாளர்
    ..........................
  - அதிகளவில் உளவுழைப்பைச் செலவு செய்யும் தொழில்கள் - வைத்தியர்
    ஆசிரியர்
    முகாமையாளர்
    ........................

**பயிற்றப்பட்ட உழைப்பு**

- வினைத்திறனான ஓர் உழைப்பாளராவதற்கெனின் தமது தொழில்துறை தொடர்பான பயிற்சியைப் பெறுவது அவசியமாகும்.
- பயிற்றப்பட்ட உழைப்புக்கு எமது நாட்டிலும் வெளிநாடுகளிலும் தொழிற்சந்தையில் பெருமளவுக்கு கேள்வி (கிராக்கி) உள்ளது.
- தொழிற்பயிற்சி வழங்கும் அரச மற்றும் தனியார் நிறவனங்களை அறிமுகஞ் செய்தல்
  உதாரணம்:

| | | |
|---|---|---|
| அரச துறை | - | தொழிற்பயிற்சி அதிகார சபை<br>இளைஞர் சேவை மன்றம் |
| தனியார் துறை | - | தாதியர் பயிற்சிக் கல்லூரிகள்<br>தனியார் சாரதிப் பயிற்சி நிறுவனங்கள் |

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- தொழிற் பயிற்சிப் பாடநெறிகள் நடத்தும் நிறுவனங்கள் மற்றும் அவற்றில் நடைமுறையிலுள்ள பாடநெறிகள் தொடர்பான விவரங்களடங்கிய செய்தித்தாள் அறிக்கைகள், அறிவித்தல்கள்/ இணையம் போன்றவற்றின் துணையுடன் விளைதிறன்மிக்க உழைப்பாளிகள் கணிப்புக்கு உள்ளாகிய சந்தர்ப்பங்கள் பற்றிய அறிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- குழுச் செயற்பாடு, ஒப்படை, தகவல் தேடியறிதல் போன்ற கற்றல் - கற்பித்தல் முறைகளின் கீழ் விடயங்களைக் கற்றாய மாணவ மாணவியரை வழிப்படுத்தி, கற்றற்பேறுகள் அடையப்பெற்றமை தொடர்பாக நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.5 நல்ல உழைப்பாளர் ஒருவரின் குணாதிசயங்களை உள்வாங்கிக் கொள்வார்.**

**பாடவேளைகள்** :- 01

**கற்றற் பேறுகள்** :-

- நல்ல உழைப்பாளி ஒருவரின் குணாதிசயங்களை விளக்குவார்.
- சேவை நிலையத்தில் நல்ல குணாதிசயங்களைப் பேணி வருதலை மதிப்பார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- நாட்டின் அபிவிருத்திச் செயன்முறையை நடைமுறைப்படுத்தி, நடத்திச் செல்வதற்காக ஊழியப்படையினால் வழங்கப்படும் பங்களிப்பு முக்கியமானது.
- அதற்கமைய அர்ப்பணிப்புடன் தமது தொழிலுக்குரிய சேவைகளை வழங்குதல் வேண்டும்.
- ஒரு நல்ல உழைப்பாளியின் குணாதிசயங்கள்

  உதாரணம்:
  - நேரம் தவறாது கடமைக்கு வருகை தரல்
  - அர்ப்பணிப்புடன் செயற்படல்
  - கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றல்
  - ஒத்துழைத்துச் செயற்படுதல்
  - தலைமைத்துவத்தை மதித்தல்
  - திருப்தியுடன் சேவையில் ஈடுபடுதல்
  - நிறுவனத்தின் சட்டதிட்டங்கள், பாரம்பரியங்களை மதித்தல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- நல்ல கருமங்களில் தமது உழைப்பைப் பிரயோகித்து முன்னேற்றமடைந்த தனியாட்கள் தொடர்பான கதைகள்
- வாழ்க்கையில் வெற்றியடைந்துள்ள பிரபல்யம் வாய்ந்த தனியாட்களிடத்தே காணப்பட்ட நற்பண்புகள் அடங்கிய ஆவணங்கள்
- ஊழியப்படையின் முக்கியத்துவம் தொடர்பாக எழுதப்பட்டுள்ள செய்தித்தாள் அறிக்கைகள், சஞ்சிகைகள், கட்டுரைகள், அறிக்கைகள்
- ஊழியர் ஒழுக்கக்கோவைகள்
  உதாரணம்: ஆசிரியர், வைத்தியர், தாதியர் மற்றும் ஏனைய தொழில்கள் செய்வோர்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- நாட்டின் ஊழியப்படையினால் ஆற்றப்படும் சேவைகள் தொடர்பாக அவைக் கலந்துரையாடல் (Panel Discassion) ஒன்றினை ஒழுங்கு செய்து நடத்தி, பொருத்தமான நியமங்களைக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.
- சிறந்த உழைப்பாளியின் நற்பண்புகள் எனும் தலைப்பில் சித்திரம்/ சுவரொட்டி/ கவிதை/ உரையாடல் ஒன்றினை ஆக்குமாறு வழிப்படுத்தி, நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.6 வேலை இடத்தின் எதிர்பார்ப்புக்களை நுணுகியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 01

**கற்றற் பேறுகள்** :-

- உழைப்பாளி என்ற வகையில் வேலையிடத்தின் எதிர்ப்பார்ப்புக்கள் தொடர்பாக உணர்தன்மை காட்டுவதன் அவசியத்தை விளக்குவார்.
- வேலையிடத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல், சேவை வழங்குபவரின் கடமையும் பொறுப்புமாகும் என்பதை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

**சேவைகள் வழங்கும் நிலையத்தின் எதிர்பார்ப்புக்கள்**

- பொது மக்களுக்கு சேவை வழங்கும் எந்த ஒரு நிறுவனத்துக்கும் சிறப்பான எதிர்பார்ப்புக்கள் உண்டு என்பதை உதாரணங்களின் ஊடாக விளங்கிக் கொள்ளச் சந்தர்ப்பமளிக்குக.
- உழைப்பாளிகள் என்ற வகையில் தமது சேவை வழங்கும் நிலையத்தின் எதிர்பார்ப்புக்கள் தொடர்பாக உணர்தன்மை காட்டுவதன் அவசியம்
- சேவை வழங்கும் நிலையத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவு செய்வது சேவை வழங்குபவரின் கடமையும் பொறுப்புமாகும் எனக் கருதுவதன் முக்கியத்துவம்
- உழைப்பாளிகள் அனைவரும் சேவை நிலையத்தின் எதிர்பார்ப்புக்களை அடைவதற்காகச் செயற்படுதலானது அச்சேவை நிலையத்தின் இருப்புக்கும் அபிவிருத்திக்கும் ஏதுவாகும் விதத்தை விளக்குதல்.
- சேவை வழங்கும் நிலையத்தின் எதிர்பார்ப்புக்கள் சில கீழே தரப்பட்டுள்ளன.

  உதாரணம்:
  - தமது வெளித் தோற்றத்தைச் சீராகப் பேணிவருதல்
  - நேரம் தவறாது சேவைக்கு வருகை தருதல்
  - காலந் தவறாது கடமையாற்றல்/ வேலை செய்தல்
  - சேவை செய்யும் நிலையத்தின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணித்தல்
  - வினைத்திறனாகச் செயற்படல்
  - உச்ச அளவு சேவை வழங்குதல்
  - சேவை செய்யும் இடத்தில் காணப்படும் வளங்களைப் பாதுகாத்தல்

மேற்படி எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவதற்காக ஊழியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படுவதன் அவசியத்தை இனங்காணச் சந்தர்ப்பமளியுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- விளைதிறனான, வினைத்திறனான சேவைகள் வழங்கும் நிறுவனமொன்றின் தன்மையைக் காட்டும் ஒளிப்படங்கள், வீடியோக் காட்சிகள்
- வெவ்வேறு நிறுவனங்களின் நோக்குக்கூற்று, பணிக்கூற்று, வெவ்வேறு நிறுவனங்களால் வெளியிடப்பட்டுள்ள ஒழுக்கக் கோவைகள்
- வினைத்திறன் தொடர்பான எண்ணக்கருக்கள் அடங்கியுள்ள ஆவணங்கள்
- பிரதேசத்திலுள்ள ஒரு சேவை வழங்கும் நிலையத்தின் எதிர்பார்ப்புக்கள், சேவை வழங்குவோரின் கடமைகள், பொறுப்புக்கள் பட்டியல்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- வகிபாகமேற்று நடித்தல்கள் மூலம் வினைத்திறனான - வினைத்திறனற்ற சேவை வழங்கும் நிறுவனங்களின் தன்மையை எடுத்துக்காட்டச் சந்தர்ப்பமளித்து அதற்கமைய பொருத்தமான நியமங்களின்படி கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.
- வினைத்திறன்மிக்க சேவை நிறுவனமொன்றில் காணப்படவேண்டிய வெளித் தோற்றத்தைக் காட்டும் சித்திரங்கள், சுவரொட்டிகள், ஒளிப்படங்கள் மாதிரியுருக்களைப் பயன்படுத்தி, குழுநிலை முன்வைப்புக்களை ஒழுங்கு செய்து பொருத்தமான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.
- சேவை வழங்கும் நிலையத்தின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றவதற்காக, சேவை வழங்குபவரின் கடமைகள், பொறுப்புக்கள் காட்டும் ஓர் அட்டவணையைத் தயாரிக்க வழிப்படுத்துக. பொருத்தமான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம் :- 8.6.7 உழைப்பாளரின் உரிமைகள் பொறுப்புக்களைப் பரிசீலிப்பார்.**

**பாடவேளைகள் :-** 02

**கற்றற் பேறுகள் :-**

- ஊழியரின் உரிமைகளையும் கடமைகளையும் அட்டவணைப் படுத்துவார்.
- ஊழியருக்குரிய உரிமைகளை அனுபவித்தவாறு கடமைகளையும் பொறுப்புக்களையும் நிறைவேற்றும் விருப்பை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**

(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- ஊழியரின் உரிமைகள் பாதுகாக்கப்படலானது ஊழியரிடத்தே தொழில் திருப்தி ஏற்படுவதற்கும் சேவையின் விளைதிறன் அதிகரிப்பதற்கும் ஏதுவாகும்.
- மேற்படி உரிமைகளுடன் இணைந்த கடமைகளை நிறைவேற்றுதலானது சேவையாற்றும் இடத்தின் மேம்பாட்டுக்கும் உற்பத்தி/ வினைத்திறன் அதிகரிப்பதற்கும் காரணமாகும்.
- மேலும் கடமைகள், பொறுப்புக்களைச் சரியாக நிறைவேற்றும் ஊழியர்கள் நிதமும் கணிப்புக்கு உள்ளாவர்.
- உழைப்பாளிகள் அனைவரும் சேவை நிலையத்தின் எதிர்பார்ப்புக்களை அடைவதற்காகச் செயற்படுதலானது அச்சேவை நிலையத்தின் இருப்புக்கும் அபிவிருத்திக்கும் ஏதுவாகும் விதத்தை விளக்குதல்.

**உரிமைகள் :**
- பாதுகாப்பு, சுத்தமான மலர்ச்சியான சூழலில் வேலை செய்தல்
- தொழிலுக்குரிய கருவிகள், உபகரணங்கள்
- உணவு அருந்துவதற்கான இடைவேளை
- லீவு (ஒரு வரப்பிரசாதம் என்ற வகையில்)
- பயிற்சி
- தொடர்ச்சியான தொழில்சார் அபிவிருத்திக்கான வாய்ப்புக்கள்

**கடமைகள் :**
- நேரந்தவறாது கடமைக்குச் சமூகமளித்தல்
- தமது வெளித்தோற்றத்தை மலர்ச்சியானவாறு பேணிவருதல்
- ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் செயற்படல்
- அணியின் ஓர் உறுப்பினர் என்ற வகையில் வெற்றிகரமாகச் செயற்படல்
- சேவை வழங்கும் நிலையத்தின் எதிர்பார்ப்புக்களை இனங்கண்டு விளங்கி அவற்றுக்கு அமையச் செயற்படல்
- சேவை வழங்கும் நிலையத்தின் வசதிகள் வளங்கள், கருவிகள், உபகரணங்களை மதித்தல்
- ஒத்துழைத்துச் செயற்படல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- ஊழியர் உரிமைகள், கடமைகள் தொடர்பாக எழுதப்பட்டுள்ள ஆவணங்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள், சுற்றுநிருபங்கள், சட்டதிட்டங்கள் மற்றும் தாபனக் கோவையிலிருந்து எளிமையான உதாரணங்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- ஊழியர்களின் உரிமைகள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்ட சில வினாக்களைப் பயன்படுத்தி மதிப்பீட்டை நடத்துக.
- ஊழியர்களின் கடமைகளைக் காட்டும் எண்ணக்கருப்படிவமொன்றினை அமைக்க வழிப்படுத்தி மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.8** தனிப்பட்ட தொழில்சார் குணாதிசயங்களை விருத்தி செய்துகொள்வதன் முக்கியத்துவத்தை மதிப்பார்.

**பாடவேளைகள்** :- 02

**கற்றற் பேறுகள்** :-

- உழைப்பாளி என்ற வகையில் தனிப்பட்ட செயலாற்றுகையை உயரிய மட்டத்தில் பேணிவருவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- தமது திறன்கள், ஆர்வங்கள் குறித்து தொழில்சார் ஆலோசகர் ஒருவருடன் கலந்துரையாடுவார்.
- தொழில்சார் விருத்திக்காக வெவ்வேறு கற்றல் முறைகளைப் பயன்படுத்துவதன் அவசியத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

- ஓர் உழைப்பாளி என்ற வகையில் தனிப்பட்ட தொழில்சார் பண்புக்கூறுகளை விருத்தி செய்து கொள்வதன் முக்கியத்துவம்
- சுய செயலடைவு
  - கல்வித்தகைமைகளை மேம்படுத்திக் கொள்ளல்
  - தொழிலுக்குத் தேவையான தொழில்சார் தகைமைகளை விருத்தி செய்து கொள்ளல்.
  - புதிய தொழினுட்பத்துடன் இசைவடைந்து செயற்படுவதற்குத் தேவையான பயிச்சியைப் பெறுதலும் புதிய தொழினுட்பத்தைப் பயன்படுத்துதலும்
  - தமது சேவை வழங்கும் நிலையத்தின் இலக்குகளை இனங்கண்டு கொள்ளலும் அவை நிறைவேற்றப்படும் வகையில் செயற்படலும்
  - சேவை பெறுநர்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுதல்
  - தலைமைத்துவப் பண்பகளையும் ஆளுமையையும் விருத்தி செய்து கொள்ளல்
  - புத்தாக்கம் புரிவதில் ஆர்வம் காட்டல்
  - கூட்டாக ஒத்துழைத்துச் செயற்படுவதற்குத் தேவையான மென்மையான பண்புக் கூறுகளை விருத்தி செய்து கொள்ளல்.
- விளைதிறன்மிக்க ஓர் உழைப்பாளி என்ற வகையில் செயலடைவை மேம்படுத்திப் பேணிவருவதால் கிடைக்கும் பயன்கள்
  உதாரணம்:
  - உற்பத்தி விளைத்திறன் அதிகரித்தல்
  - தமது தொழில்சார் முடிவுப் பொருள்களின்/ சேவைகளின் தரம் உயர்த்தல்
  - சேவை வழங்குநர், ஊழியர் ஆகிய இரண்டு தரப்பினரும் திருப்தியடைதல்
  - சேவை பெறுநருக்கு தரமான சேவை கிடைத்தல்
  - சேவை நிலையத்தினதும், நாட்டினதும் அபிவிருத்திக்கு உடன்பாடான வகையில் பங்களிப்புச் செய்தல்

- தனிப்பட்ட திறன்களை விருத்தி செய்து கொள்வதற்காகக் கையாளத்தக்க நடவடிக்கைகள்
  - தம்மிடமுள்ள திறன்களையும் தமது விருப்புக்களையும் இனங்காணல்
  - தமது திறன்களை மேலும் விருத்தி செய்து கொள்வதற்கான இலக்குகளைத் தாபித்துக் கொள்ளல்
  - தமது திறன்களை விருத்தி செய்து கொள்வதில் ஆர்வம் காட்டல்
  - தொழில்சார் திறன்களை விருத்தி செய்வதற்காகப் பயன்படத்தக்க தனியாட்கள் மற்றும் நிறவனங்களை இனங்கண்டு அந்நிறுவனங்கள் மற்றும் தனியாள்களின் சேவைகளைப் பெறுவதில் ஆர்வம் காட்டல்
  - தொழில்கள் பண்புக்கூறுகளை விருத்தி செய்து கொள்வதற்காக வெவ்வேறு கற்றாய்வு முறைகளைப் பயன்படுத்த முற்படல்

- கற்றாய்வு முறைகள்
  - அனுபவங்களைப் பரிமாறிக் கொள்ளல்
  - சம்பிரதாய பூர்வமான நுட்ப முறைகளைப் பேணி வருதலும் அவற்றை தற்காலத்துக்குப் பொருத்தமானவாறு புதுமைப்படுத்திக் கொள்ளலும்
  - புத்தாக்கம் படைத்தலில் கவனஞ் செலுத்தல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- தொழில்சார் வழிகாட்டல் தொடர்பாக எழுதப்பட்டுள்ள நூல்கள், சஞ்சிகைகள் மற்றும் இறுவட்டுக்கள், வீடியோக் காட்சிகள்
- தேர்ச்சி விருத்தி அமைச்சு, இளைஞர் சேவைகள் சபை பேன்றவற்றினால் வெளியிடப்பட்டுள்ள தொழில் வழிகாட்டல் தொடர்பான நூல்கள், ஆவணங்கள்
- பாரம்பரியமான தொழில்நுட்பங்கள், தொழில்கள் தொடர்பான தகவல்கள் உள்ளடங்கிய கிராமியக்கலைகள் மையம், சிறு கைத்தொழில் திணைக்களம் போன்றவற்றின் வெளியீடுகள்
- மனிதத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகப் பயன்படுத்திய சுய படைப்பாக்கங்கள் தொடர்பான தகவலகள்
- இணையத்தின் ஊடாகப் பெற்ற தொழில் வழகாட்டல் தொடர்பான தகவல்கள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- உழைப்பாளர்களின் தனிப்பட்ட தொழில்சார் பண்புக்கூறுகளை விருத்தி செய்து கொள்வதன் முக்கியத்துவம் தொடர்பாக ஒரு சிற்றுரை நிகழ்த்தச் சந்தர்ப்பமளித்து மதிப்பீடு செய்தல்
- மனிதத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஆக்கப்பட்டுள்ள புதிய ஆக்கங்கள் தொடர்பான தகவல்கள், ஒளிப்படங்கள், புத்தாக்கம் படைப்போர் ஆகியன தொடர்பான தகவல்களைச் செய்தித்தாள்கள், சஞ்சிகைகள், இணையம் ஆகியவற்றின் மூலம் கற்றாய்ந்து ஒரு சிற்றேடு தயாரிக்க வழிப்படுத்தி, அப்படைப்பைப் பொருத்தமான நியமங்களைப் பயன்படுத்தி மதிப்பீடு செய்க.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.9 வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்துவதற்கான வெவ்வேறு உத்திகளைப் பகுத்தாய்வார்.**

**பாடவேளைகள்** :- 01

**கற்றற் பேறுகள்** :-

- வாடிக்கையாளரை திருப்திப்படுத்துவதற்கேற்ற உத்திகளைப் பிரேரிப்பார்.
- வாடிக்கையாளருடன் தொடர்புகளைப் பேணும்போது அவர்களை நன்கு இனங்கண்டு செயற்படுவதன் அவசியத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

**சேவைகள் வழங்கும் நிலையத்தின் எதிர்பார்ப்புக்கள்**

- சேவை பெறுநரைத் திருப்திப்படுத்துவதன் முக்கியத்துவம்
- சேவை பெறுநரைத் திருப்திப்படுத்துவதற்காக கையாளத்தக்க நடவடிக்கைகள்

  உதாரணம்:
  - சேவை பெறுநகர்களின் எதிர்பார்ப்புக்களை நன்கு இனங்காணல்
  - சேவை பெறுநர்கள் திருப்தியடையும் வகையில் தரமான உயர்வான சேவை வழங்குதல்
  - சேவை பெறுநர்களுடன் நட்புத் தொடர்புகளைக் கட்டியெழுப்பிக் கொள்ளல்
  - தமக்குப் பரிச்சயமான, தமது சேவை நிலையத்துக்குப் பரிச்சயமான சேவை பெறுநர்களைத் தொடர்ந்தும் பற்றி வைத்துக்கொள்ளல்
- சேவை பெறுநர்களைத் திருப்திப்படுத்துவதால் கிடைக்கும் பயன்கள்

  உதாரணம்:
  - ஊழியர் என்ற வகையில் தாம் வழங்கும் சேவையானது சேவை பெறுநரின் கணிப்புக்கு உள்ளாதல்
  - தமதும் தமது சேவை நிலையத்தினதும் சேவைகளைப் பெறுவதில் அவர்கள் அதிக விருப்புக் காட்டல்
  - தமதும் தமது சேவை நிலையத்தினதும் நற்பெயரை உயரிய மட்டத்தில் பேணி வரக்கூடியதாக இருத்தல்
  - ஊழியர் என்ற வகையில் சேவை வழங்குவதன் மூலம் திருப்தி கிடைத்தல்
  - நல்ல வருமானம் ஈட்டுவதற்கு வழிகள் பிறத்தல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- பிரதேசத்தில் காணப்படும் சேவை வழங்கும் நிறுவனங்கள் சிலவற்றில் சேவை பெறுவோரின் எதிர்ப்பார்புகளடங்கிய பட்டியல்
- சேவை பெறுவோரைத் திருப்திப்படுத்துவதன் மூலம் கிடைக்கும் பயன்களடங்கிய பட்டியல்
- சேவை பெறுவோர் தமது திருப்தி தொடர்பாக வெளியிட்ட அறிக்கைகள்

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- சேவை பெறுவேரைத் திருப்திப்படுத்தவதன் மூலம் சேவை வழங்கும் நிறுவனத்திற்குச் கிடைக்கும் பயன்களை, குழுவாக முன்வைக்கச் செய்து கணிப்பீட்டு மதிப்பீட்டை நடத்துக.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.10 வருமானமீட்டுதலானது வாழ்க்கைக் கோலத்தின்மீது செல்வாக்குச் செலுத்தும் விதத்தை நுணுகியாய்வார்.**

**பாடவேளைகள்** :- 01

**கற்றற் பேறுகள்** :-

- வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு ஏற்ற வழிவகைகளைப் பிரேரிப்பார்.
- தமது வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காக, புத்திசாலித்தனமாகவும் சமூக நேயமான வகையிலும் செயற்படுவதன் முக்கியத்துவத்தை மதித்துக் கருத்துத் தெரிவிப்பார்.
- நல்ல வருமானம் கிடைத்தலானது வாழ்க்கைத் தரமேம்பாட்டுக்குக் காரணமாகும் விதத்தை விளக்குவார்.

**பாடத்தைத்திட்டமிடுதற்கான அறிவுறுத்தல்கள்**
(பின்வரும் பாடவிடயங்கள் உள்ளடங்குமாறு பாடத்தைத் திட்டமிட்டுக் கொள்ளுங்கள்)

**சேவைகள் வழங்கும் நிலையத்தின் எதிர்பார்ப்புக்கள்**

- நல்ல வருமானம் கிடைப்பதால் கிடைக்கும் பயன்கள்

  உதாரணம்:
  - பொருளாதாரம் உறுதிபெறுதல்
  - தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் ஆற்றல் அதிகரித்தல்
  - எதிர்காலத்திற்காகச் சேமிக்கும் அற்றல் அதிகரித்தல்
  - வாழ்க்கையை நன்கு கழிப்பதற்குத் தேவையான பொருளாதாரப் பின்னணி உருவாதல்
- போதிய வருமானம் கிடைக்காமையால் ஏற்படும் பாதிப்புக்கள்

  உதாரணம்:
  - நலிவான பொருளாதார மட்டம்
  - தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளத் தேவையான பண்டங்கள் சேவைகளைக் கொள்வனவு செய்யும் ஆற்றல் கிடையாமை
  - வாழ்க்கைத் தரம் குறைவடைதல்
  - சேமிப்பு குறைவடைதல்
- சமூக நேய நடவடிக்கைகளின் வழியே வருமானத்தை அதிகரித்துக்கொள்வதற்காகக் கையாளத்தக்க நடவடிக்கைகளை இனங்கண்டு அவற்றை நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவம்

  உதாரணம்:
  - வேலையுலகின் தொழில்துறைகள் தொடர்பான விளக்கத்தைப் பெறுதல்
  - அதற்கமைய தாம் தெரிவு செய்து கொள்ள எதிர்பார்க்கும் தொழிலுக்குத் தேவையான கல்வித்தகைமைகளையும் தொழில் தகைமைகளையும் நிறைவு செய்து கொள்வதில் ஆர்வம் காட்டல்
  - தெரிவு செய்த தொழிலில் தமது மனச்சாட்சிக்கு இணங்கச் செயற்படுவதன் மூலம் சிறந்த சேவை வழங்குதல்
  - தொழில்சார் விருத்தி மீது ஆர்வம் காட்டல்
  - சுயதொழில்களில் கவனஞ் செலுத்துதல்

**தரவிருத்தி உள்ளீடுகள்:-**

- நல்ல வருமானம் கிடைப்பதால் ஏற்படும் பயன்கள், போதியளவு வருமானம் கிடைக்காமையால் ஏற்படும் விளைவுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய அட்டவணையொன்று.
- வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்காகக் கையாளத்தக்க நடவடிக்கைகள் அடங்கிய பட்டியலொன்று

**கணிப்பீடு, மதிப்பீட்டுக்குரிய அறிவுறுத்தல்கள் :-**

- குழு ஒப்படை, அட்டவணைகள் மற்றும் பட்டியல்கள் தயாரித்தல் தொடர்பாக செயற்பாடுகள் மூலம் குறித்த பாட விடயங்களைக் கற்றாயுமாறு மாணவரை வழிப்படுத்துக. கற்றற் பேறுகளை அடைந்துள்ளமை தொடர்பான நியமங்களை அடிப்படையாகக் கொண்டு கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.

## எடுத்துக்காட்டுச் செயற்பாடு 8.6

**தேர்ச்சி** :- வேலையுலகுக்குப் பரிச்சயமடைவார்.

**தேர்ச்சி மட்டம்** :- **8.6.1 வேலை உலகின் பல்வகைமையை மதிப்பார்.**

**கற்றற் பேறுகள்** :-

- வேலையுலகின் பல்வகைமையை உதாரணங்கள் மூலம் விளக்குவார்.

**செயற்பாடு** :- வேலையுலகை இனங்காண்போம்

**நேரம்** :- 40 நிமிடம்

**தரவுள்ளீடுகள்** :-

- இணைப்பு 8.6.1.1
- இணைப்பு 8.6.1.2

**கற்றல் கற்பித்தற் செயன்முறை**

படிமுறை I :

- இணைப்பு 8.6.1 இனை வகுப்பில் முன்வைத்து செயற்பட்டை அணுகுக. தாம் அறிந்து வைத்துள்ள சில தொழில்களைக் குறிப்பிடச் சந்தர்ப்பமளிக்குக.
- சமூகத்தில் காணப்படும் பல்வேறு தொழில்கள் மற்றும் தொழில் துறைகள் எல்லாவற்றினதும் சேர்மானமே வேலை உலகு ஆகும் என விளக்குக.

(10 நிமிடம்)

படிமுறை II :

- வகுப்பு மாணவரை பொருத்தமானவாறு குழுக்களாகப் பிரிக்குக.
- இணைப்பு 8.6.2 இன் பிரதி ஒவ்வொன்று வீதம் குழுக்களுக்கு வழங்குக.
- மாணவரைச் செயற்பாட்டில் ஈடுபடுத்துக.
- போதுமான நேர அவகாசம் வழங்குக.
- செயற்பாட்டைப் பூர்த்தி செய்வதற்குத் தேவையான வழிகாட்டலை வழங்குக.

(20 நிமிடம்)

படிமுறை III :

- குழு அறிக்கைகளை வகுப்பில் முன்வைக்கச் சந்தர்ப்பமளிக்குக.
- கருத்துத் தெரிவிப்பதற்கு எல்லாக் குழுக்களுக்கும் சந்தர்ப்பமளிக்குக.
- எதிர்பார்க்கப்படும் விடயங்களை வெளிக்கொணரத்தக்க வகையில் மீட்டாய்வு செய்க.

(10 நிமிடம்)

**மதிப்பீட்டு நியமங்கள்**

பின்வரும் நியமங்களின்படி கணிப்பீடு, மதிப்பீட்டை நடத்துக.

- வேலையுலகு என்பதை விளக்குவார்.
- வேலையுலகில் காணப்படும் தொழில்துறைகளைக் குறிப்பிடுவார்.
- வெவ்வேறு தொழில்துறைகளில் காணப்படும் தொழில்களை அட்டவணைப்படுத்துவார்.
- தாமும் வேலையுலகிற்கு ஆயத்தமாகும் ஒருவர் என்பதை ஏற்று, கருத்துத் தெரிவிப்பார்.
- கூட்டாக ஒத்துழைத்துச் செயற்பாட்டில் ஈடுபடுவார்.

**இணைப்பு 8.6.1**

பிரிஸ்டல் அடடையொன்றில் எழுதித் தயாரித்த தொழில்கள் பட்டியல் (ஆசிரியரது விருப்பப்படி தேவையான அளவு தொழில்களை இட்டுத் தயாரித்துக் கொள்க.)

- ஆசிரியர்
- வைத்தியர்
- கமக்காரர்
- சிற்றூழியர்
- தாதி
- பொலிஸ்
- நடிகர்
- பாடகர்
- கணினி மென்பொருள் எந்திரியர் (Engineer)
- அழகுக்கலை நிபுணர்
- மீனவர்

**இணைப்பு 8.6.2**

**செயற்பாட்டுப் படிவம்**

**குழு 1**

விவசாயத்துறையைச் சேர்ந்த தொழில்களைப் பட்டியற்படுத்துவதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.

1. ............................... 2. ....................................... 3. .....................................

4. ............................... 5. ....................................... 6. .....................................

7. ................................ 8. ...................................... 9. .....................................

10. ............................................

**செயற்பாட்டுப் படிவம்**

**குழு 2**

கைத்தொழிற் துறையைச் சேர்ந்த தொழில்களைப் பட்டியற்படுத்துவதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.

1. ............................... 2. ....................................... 3. .....................................

4. ............................... 5. ....................................... 6. .....................................

7. ................................ 8. ...................................... 9. .....................................

10. ............................................

**செயற்பாட்டுப் படிவம்**

**குழு 3**

| |
|---|
| தொழினுட்பத் துறையைச் சேர்ந்த தொழில்களைப் பட்டியற்படுத்துவதே உங்களது குழுவின் பொறுப்பாகும்.<br>1. ................................ 2. ........................................ 3. ......................................<br>4. ................................ 5. ........................................ 6. ......................................<br>7. ................................. 8. ....................................... 9. ......................................<br>10. ............................................. |